# பெண்

'அகிலன்'

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

Y.M.G. ASSOCIATION
PAGANERI.
PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR

டரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை
[விலை ரு. 1/8

முதற் பதிப்பு : 1947.

*Printed at the Madras Law Journal Press, Mylapore, Madras.*
*MS. 76—1st February, 1947—2,000 c.*

# பெண்ணைப்பற்றி

அழகான மாலைப் பொழுதுகளில் நான் என் கிராமத்துக் குளத்தங்கரையில் உட்கார்ந்து சிந்தனையில் மூழ்கிவிடுவதுண்டு. அப்போதெல்லாம் என்னைச்சுற்றி வெளியுலகிலும், எனக்குள்ளே இருதயத்தின் அந்தரங்கத்திலும் ஒரே இன்ப வெள்ளம் பொங்கும். மாலை நேரத்துக் கதிர், மலரைச் சொரியும் செடிகொடிகள், வண்டினத்தின் இன்னிசை, குளுமையான தென்றல் இன்னும் இவை போன்ற எத்தனையோ இயற்கைகளை அநுபவித்துக்கொண்டிருக்கும். நான் ஒவ்வொன்றாக அவற்றை நினைத்துப் பார்ப்பேன். மனப் பூஞ்சிட்டு மரத்திலிருந்து செடிக்கும், செடியிலிருந்து மலருக்கும், மலரிலிருந்து மலரின் உள்ளத்தில் ஊறும் கள்ளுக்கும் தாவும்.

மரஞ் செடி கொடியும், கதிரும் நிலவுந் தானா இயற்கை இன்பத்தின் பிரதிநிதிகள்? — அந்த வழியே புல்லுக் கட்டைச் சுமந்துகொண்டோ, இளம் நெல்நாற்றைத் தூக்கிக்கொண்டோ யாரேனும் கிராமத்துப் பெண்பிள்ளை செல்வாள். இத்தனையும் விட்டுவிட்டு மனம் அவள் பின்னே கொஞ்சம் செல்லும்; சென்று கிராமத்துப் பெண்ணுலகையே சற்று எட்டிப் பார்த்துத் திரும்பும்.

அழகான முகங்கள்; கள்ளங்கபடமற்ற நெஞ்சுகள்; தாராள சுபாவம்; தலைமுறை தலைமுறையாய் ரத்தத்திலே ஊறிப்போன தெய்வ பயம்; இவற்றிற்கெல்லாம் மேலாக அவர்கள் கண்ணியமாய்க் காத்து வளர்த்து வரும் அபூர்வ லக்ஷ்யம். ஆம், கற்பு!

ஆனால் கிராமத்துப் பெண்களின் வேறொரு பக்கமும் இருக்கிறது. அவர்களது கிழிந்துபோன உடைகள்; அவற்றிலிருந்து கிளம்பும் நாற்றம்; துவைத்தால் அவையும் கிழிந்துவிடுமே, வேற்றுடைக்கு எங்கே போவதென்ற கவலை; உள்ளே ஒட்டிப்போன வயிறு; உழைப்பைத் தவிர ஓய்வே அறியாத அங்கங்கள். கல்வி கேள்விகளுக்கோ, சுற்றுலகின் நிகழ்ச்சிகளுக்கோ கொஞ்சமும் சம்பந்தமில்லாத அறிவு; பேய்கள், பிசாசுகள், தலைவிதி, வினைப்பயன், பட்டணத்து நாகரிகம் என்ற பெயரால் அங்கு வந்து தலைகாட்டி வாழ்வைக் குலைக்கும் அநாகரிக சாதனங்கள்......இன்னும் எத்தனையோ!

கிராமத்தைத் தாண்டிக் கனவைப் பட்டணத்துப் பெண்கள் பக்கம் பறக்கவிடுவேன். பெண்கள் முன்னேறுகிறார்களாம்! பெண்களின் முன்னேற்றம் கடைகளில் நவநவமாய் நிறைந்திருக்கும் அலங்காரப் பொருள்களின் குவியலால்தான் தெரிகிறது; துணிக்கடை, தையல்கடை, நகைக்கடை, மேல் நாட்டுச் சாமான்களின் விளம்பரங்கள் - இவைதாம் நமக்குப் பெண்களின் முன்னேற்றத்தைப் பறை அறைகின்றன. சம அந்தஸ்துப் பேச்சுக்களுக்கும் எழுத்துக்களுக்கும் குறைவில்லை. பெண் என்றால் என்ன? பெண்மை என்றால் என்ன? எந்த மேல்நாட்டுப் பெண் இனமும் இந்திய மாதர்களின் விடுதலைக்கு வழி காட்ட முடியுமா?

உலகிலேயே இந்தியப் பெண் ஓர் தனிப்பண்பு கொண்டவள். அவளுக்கு வழி காட்ட அவளால்தான் முடியும். அவள் தன்னைச் சுற்றி

நோக்க வேண்டும்; தன்னைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்; தன்னை யார் என அறிந்துகொள்ள வேண்டும். அப்போது அவள் வீரப் போக்கை யாரால்தான் தடை செய்ய முடியும்?

பூரணமான தேச விடுதலை, வேறுபாடற்ற புதிய மனித சமுதாயம், உலகமுழுமைக்கும் ஒலிக்கும் உலகப்பெண்களின் ஏக்கக்குரல் — இவற்றிற்குப் பதில் சொல்ல அந்தப் புதுமைப் பெண்ணால் தான் ஆகும். அவள் வருவாள்! உலகின் தாயாக, கற்புக் கனலாக, அன்பின் அற்புதமாகத் தோன்றுவாள்! அவள் வாழ்க! அவளை அளிக்கப் போகும் ஆதி சக்தி வாழ்க!

* * *

மேற்கண்ட புதுமைப் பெண்ணைப் பற்றிய எனது மனக் கோட்டையே இச்சிறு நாவல். நெஞ்சு எப்போதெல்லாம் உயர்ந்து பெண்மைக்குத் தலை வணங்கியதோ அப்போதெல்லாம் தோன்றிய சிந்தனைகளின் தொகுதியே இது. நோக்கத்தைத்தான் இங்கே நான் குறிப்பிட விரும்பினேன். அது மட்டிலும் போதும்.

கதையைப்பற்றி இரண்டு வார்த்தைகள் : 'கலைமகள்' இதை ஏற்றுக்கொண்டு தன் மணத்தால் கமழவைத்திருக்கிறாள்; அத்துடன் முதற் பரிசும் அளித்திருக்கிறாள். வாழ்க கலைமகள்! அவள் தொண்டு தமிழ் நாடெங்கும் வாழ்க!

தென்காசி
6-12-46

அகிலன்

# சமர்ப்பணம்

பாரதியின் கனவை நனவாக்க வந்த தமிழ் நாட்டின் ஒவ்வொரு புதுமைப் பெண்ணுக்கும்

அகிலன்

PRESENTED BY
V. PL. PL. M. KASIVISWANATHAN CHETTIAR
THIRUVALLUVAR LIBRARY
பாகனேரி.

# பெண்

சின்னஞ் சிறு குழந்தை தன்னுடைய விளையாட்டுப் பொம்மைக்குப் பூச்சூட்டி, உடை உடுத்து, அலங்கரித்து மகிழுமல்லவா? அதைப் போல வத்ஸலா தன் கணவனைப் பொம்மையாக்கி, அவனை அழகுபடுத்தி மகிழ்ந்துகொண் டிருந்தாள்.

சந்தானகிருஷ்ணன் பெரிய நிலைக் கண்ணாடிக்கு எதிரே நாற்காலியில் உட்கார்ந்துகொண் டிருந்தான். வத்ஸலா அவனருகில் நின்று அவனுக்குத் தலைவாரிக் கொண்டிருந்தாள். அறைக் கதவு தாழிடப்படாமல் சும்மா சாத்தப்பட் டிருந்தது.

"இதோ, இந்தப் பக்கம் கொஞ்சம் தலையைச் சாயுங்கள். இதோடு இருபது தட்வை வகிடு எடுத்து விட்டேன்; நேரே வரமாட்டேன் என்கிறதே! எங்கே, கொஞ்சம் நிமிர்ந்திருங்கள், பார்க்கலாம்."

குனிந்துகொண்டிருந்த சந்தானம் தலையைத் தூக்கி அவள் முகத்தைப் பார்த்தான். அவனுக்கு உள்ளூறச் சிரிப்புப் பொறுக்க முடியவில்லை. எவ்வளவு அக்கறையோடு, விநயமாய் முகத்தை வைத்துக்கொண்டு அவள் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறாள்!

எப்போதும் சந்தானம் இடது பக்கந்தான் வகிடு எடுத்துச் சீவுவது வழக்கம். ஆனால், இன்றைக்கு ஒரு நிமிஷமாவது அதை வலது பக்கம் எடுத்துச் சீவிப் பார்க்கவேண்டுமென்பது வத்ஸலாவின் ஆவல். ஆனால் அந்தப் பொல்லாத கிராப்புத் தலை அவள் இழுத்த இழுப்புக்கெல்லாம் லேசில் வருகிறேனென்கிறதா?

"என்ன, என் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே! கண்ணாடியைப் பார்ப்பீர்களா; அதை விட்டு விட்டு..."

மெதுவாகப் புன்னகை பூத்தான் சந்தானம். இது வரையில் அவளுடைய அந்த மெல்லிய ஸ்பரிசம் அவனை ஏதோ ஒரு கனவுலகின் சிகரத்தில் கொண்டு வைத்திருந்தது. இப்போதுதான் அதனின்றும் அவன் விழிப்படைந்தான்.

"கண்ணாடியா? உன் முகந்தான் வத்ஸலா, எனக்குக் கண்ணாடி!"

ஒரு கணம் அவளுடைய பார்வை சந்தானத்தின் கண்களை ஊடுருவியது. இம்முறை அவன் அமர்ந்திருந்த கனவுலகிற்கு அவள் சென்று வந்தாள். அவனுடைய வார்த்தைகள் அவளை அங்கே தூக்கிச் சென்றன.

கதவு கொஞ்சமாய்த் திறந்தது. வேலைக்காரப் பெண் லக்ஷ்மி கழுத்தை மாத்திரம் உள்ளே நீட்டி, "பெரிய அம்மா சாப்பிட வரலாமான்னு கேக்கச் சொன்னாங்க" என்றாள்.

"இதோ, சீக்கிரம் வந்துட்டோம்னு சொல்லு. அப்பா சாப்பிட்டாச்சா? இல்லாட்டால் முதலில் அவர் சாப்பிடட்டும்; இவுங்களுக்கு இப்போ பசிக்கல்லையாம்; இன்னும் அரை மணிக்கப்புறம் வர்றேன்னாங்கன்னு சொல்லு" என்றாள் வத்ஸலா.

"இவுங்களுக்குப் பசிக்கல்லையா? யாருக்கு? எனக்குத்தான் அரை மணிக்கு முன்னாடியேருந்து பசிக்கிறதே!" என்றான் சந்தானம்.

வேலைக்காரச் சிறுமி சிரித்துக்கொண்டு ஓடிவிட்டாள்.

"கொஞ்சம் பொறுங்களேன்; பிறகு நிறையச் சாப்பிடலாம். இப்போது உங்களுக்கு ஒரு வேடிக்கை காட்டப் போகிறேன். எங்கே, பத்து எண்ணும் வரை

யில் கண்ணை மூடிக்கொள்ளுங்கள் ; ஒண்ணு, ரெண்டு, மூணு...ஊஹூம் ! மத்தியில் கண்ணைத் திறக்கப் படாது...நாலு !''

சந்தானம் வெகு கஷ்டப்பட்டுக் கண்களை மூடிக் கொண்டான். அவள் பத்து எண்ணி முடிப்பதற்குள் அவனுடைய கண்ணிமைகள் திறப்பதற்காகப் படாத பாடு பட்டுவிட்டன. கடைசியாகக் கண் திறந்தபோது அவனருகில் பெட்டி நிறையப் புதுச் சட்டைகளும் கோட்டுகளுமாய் இருந்தன.

" இதெல்லாம் யாருக்காக, வத்ஸலா?'' என்றான் பிரமித்துப்போய்.

" யாருக்காகவா ? இந்த வீட்டுப் புது மாப்பிள்ளை இருக்கிறாரல்லவா, அவருக்கு ! நாளைக்கு லண்டன் புறப்படப்போகிறாரல்லவா, அந்த ஐ. ஸி. எஸ். மாப் பிள்ளைக்கு !''

" யார் தைத்தது ?''

" அவருடைய... அவருடைய...''

" அவருடைய?''

" சஹதர்மிணி !''

" நீயா தைத்தாய் ? என்னிடம் சொல்லவே இல்லையே ! நான்தான் ஏற்கனவே வேண்டிய உடுப்புக்கள் வைத்திருக்கிறேனே. விலை அதிகமான இந்தத் துணியில் ஏன் இவ்வளவு செலவழிக்க வேண்டும் ?''

" இதோ பாருங்கள் ; அதைத்தான் சொல்ல வந்தேன். உங்களுடைய அந்த அருமையான கதர்த் துணிகளை வேண்டுமானால், நீங்கள் அங்கே அறையில் இருக்கும்போது உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். வெளியில் அதைப் போட்டுக்கொண்டு போனால் வெள்ளைக்காரர்களுக்கு மத்தியில் என்னவோ போல இருக்கும். அதற்காகத்தான் இவ்வளவும் அப்பாவிடம் சொல்லித்

தைத்து வைத்திருக்கிறேன்.—இப்போது இந்தப் பிளேஸர் கோட்டைப் போடுங்களேன், பார்க்கலாம்.''

கட்டுக்கு மீறிப்பொங்கிய மகிழ்ச்சியால் மலர்ந்திருந்த சந்தானத்தின் முகம் லேசாகத் தன் மலர்ச்சியை இழந்தது. ஆனால், அதற்குள் வத்ஸலா அந்தக் 'கோட்'டை எடுத்துக்கொண்டு அருகில் வந்துவிட்டாள்.

"இல்லை வத்ஸலா, அப்புறம் போட்டுக்கொள்கிறேன் ; இப்போது வந்து...''

"பார்த்தீர்களா ! நாளைக்கு ஊருக்குப் புறப்படப் போகிறீர்கள் ; அதற்குள் என்னிடம் சண்டை போட்டுக் கொள்கிறீர்களே ! உங்களுக்குச் சிரமமே வேண்டாம் : கொஞ்சம் எழுந்து நில்லுங்கள் ; நானே போட்டுவிடுகிறேன்.''

போன மலர்ச்சி மறுபடியும் சந்தானத்திற்குத் திரும்பி வந்தது. கோட்டைச் சரியாகப் போட்டுக் கொண்டு, " சரிதானா? நன்றாயிருக்கிறதா ?'' என்றான். உண்மையிலேயே அவனுக்கு அது மிகவும் பொருத்தமாக இருந்தது.

"இப்போதுதான் கலெக்டர் துரைமாதிரி இருக்கிறது !... கண்ணாடியையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே ; இந்தப் புறம் சற்றுத் திரும்புங்கள்.''

சந்தானம் திரும்பினான். புன்முறுவல் முகத்தில் விளையாடத் தன் கணவனின் அழகை ரஸித்துக்கொண்டிருந்தாள் வத்ஸலா. ஆனந்த மிகுதியால் அவளுடைய மார்பகம் விம்மி விழுந்தது.

காட்சிப் பொருளாய்க் கணநேரம் நின்ற சந்தானத்திற்குத் தன்னுணர்வு வந்தது. அவன் கரங்கள் அவளுடைய கரங்களின் ஸ்பரிசத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதை அறிந்தான். மேலே பிரகாசித்த விளக்கு அவர்களைப் பார்த்துச் சிரித்தது.

"சரி, வருகிறீர்களா? சாப்பிடப் போவோம். அப்போதே பசிக்கிறதென்றீர்களே" என்று உள் அறைக்கு அழைத்துச் சென்று ஓர் இலையைப் போட்டுத் தானே பரிமாற ஆரம்பித்தாள். இலையின் எதிரே மண்டியிட்டு உட்கார்ந்துகொண்டு அவனுக்குப் பரிமாறியதைப் பார்க்க வத்ஸலாவின் தாய்க்குப் பெருமை தாங்கவில்லை. ரகசியமாய் தன் கணவனை அழைத்து வந்து கதவிடுக்கில் நின்றுகொண்டு, "பாருங்கள் உங்கள் பெண்ணை; எவ்வளவு பதவிசாய்ப் புருஷனுக்குப் பரிமாறுகிறதை!" என்றாள்.

"இவ்வளவு புத்தி உன் பெண்ணுக்கு எப்போது வந்தது? சரிதான்! மாப்பிள்ளை நாளைக்கு ஊருக்குப் புறப்படுவதால் இத்தனை உபசாரமா? அதுதானே என்றுமில்லாதபடி புதிய வழக்கமென்று பார்த்தேன்!"

"எல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய்த்தானே வரும்? நான் மாத்திரம் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கொண்ட அன்றைக்கே உங்கள் முன்னாடிவந்து நின்றுவிட்டேனா?"

"அந்தக் காலம் வேறே; நீ வந்து உன் பெண் மாதிரியா, 'இந்த மாப்பிள்ளையையேதான் கல்யாணம் பண்ணிக்கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தாய்?"

"போதும், வந்துடுங்கோ! காதிலே விழுந்துடப் போறது" என்று அவரை உள்ளே அழைத்துக்கொண்டு போய்விட்டாள்.

இங்கே சந்தானம் திருப்தியாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அவனுக்கே அவன் மனைவியின் போக்குப் பிரமிப்பாய்த்தான் இருந்தது. கல்யாணமாகி இந்த ஆறு மாதத்திலும் அவள் இவனிடம் எவ்வளவோ அன்பாக இருந்தாலும், அந்த அன்பினால் இத்தகைய உபசாரமெல்லாம் அவளிடமிருந்து இவன் பெற்றதில்லை.

அவனுக்கு வேண்டிய எல்லாச் செளகரியங்களையும் செய்துகொடுக்க வத்ஸலா வேலைக்காரர்களுக்கு உத்தர

விட்டிருந்தாள். காலையில் ஸ்நானத்திற்கு வெந்நீர், பிறகு காபி, சாப்பாடு, வெளியில் எங்காவது போக வேண்டு மானால் கார் - இவ்வளவு வசதிகளையும் அவள் கட்டளைப் படி ஆட்கள் கவனித்து வந்தார்கள். ஆனால், அவளாக வந்து இவ்வேலைகளைக் கவனிப்பது மிகவும் அபூர்வம். அவளது பழக்கத்தில் இம்மாதிரியான செய்கைகள் எல்லாம் இன்னும் வந்து குறுக்கிடவில்லை. அவள் பிறந்து வளர்ந்ததிலிருந்து அந்த வீட்டிற்கு அவள்தான் அரசி. அவள் ஆணைக்கு அப்புறந்தான் அங்கே அவளு டைய அம்மா அப்பாவின் பேச்சுக்கள். ஒரே பெண்.

"ஐயா குளித்துவிட்டாரா? அவருக்குக் காபி கொடுத்தாகிவிட்டதா? அவர் அறையில் இன்றைப் பத்திரிகை கொண்டு போட்டுவிட்டாயா?" என்று அதி காரத் தொனியில் லக்ஷ்மியையாவது வேறு யாரையா வது அவசரப்படுத்திக்கொண் டிருப்பாளே தவிர, 'நாமே போய் அந்த வேலையைச் செய்தாலென்ன?' என்று அவளுக்குத் தோன்றாது.

நவநாகரிகப் போக்கில் வளர்க்கப்பட்ட பெண் அவள். அவள் இஷ்டப்படி அவளை அப்பா கல்லூரி யில் படிக்க வைத்திருந்தார். கடைசியில் அவள் இஷ்டப் படியே அவளுக்குக் கல்யாணமும் செய்து வைத்து விட்டார்.

# 2

இருவரும் இரவு ஒருமணி வரையில் என்ன என்னவோ விஷயங்களைப் பேசிக்கொண்டிருந்தனர். அதற்கு அப்புறமும் வத்ஸலாவுக்குத் தன் கணவனிடம் பேச வேண்டிய சமாசாரங்கள் நிறைய இருந்தன. ஆனால் மணி ஒன்று அடித்ததும் எல்லாவற்றையும் நிறுத்திக் கொண்டாள்.

"நாளைக்கு முழுவதும் பம்பாய்க்கு ரெயிலில் போக வேண்டும். கொஞ்சமாவது தூங்குங்கள்; நானும் சற்றுக் கண்ணை மூடுகிறேன்" என்று படுத்தாள். சந்தானமும் தூங்குவதற்காகக் கண்களை மூடினான். ஆனால் அவனுக்குத் தூக்கம் அறவே வரவில்லை. நெஞ்சில் எங்கும் நினைவுகள் சுழன்றுகொண்டிருந்தன.—பற்பல விதமான நினைவுகள்; ஒன்றோடு ஒன்று முட்டி மோதிக் கொண்டு சுழலும் எண்ணங்கள். இவை எல்லாவற்றிற்கும் கீழே ஆழத்தில் வத்ஸலாவின் பிரிவுக்காக ஏங்கும் ஒரு வேதனை வேறே.

கண்களை மீண்டும் சந்தானம் திறந்தான். அரை மணி நேரந்தான் அதிகமாக ஆகியிருந்தது. ஜன்னலை மூடியிருந்த மெல்லிய திரையை விலக்கிவிட்டு அப்பால் கவனித்தான். பின்புறத் தோட்டத்தின் மத்தியிலிருந்த 'டோம்' விளக்கு மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. நிம்மதியான இடம்; நினைவுகளைக் கட்டவிழ்த்து விடச் சரியான சமயமென்று, தோட்டத்துப் பக்கம் கிளம்பினான். போகும்போது அவனுடைய பார்வை வத்ஸலாவின்மீது விழுந்தது. அவள் அப்போதுதான் தூக்கத்தில் ஒருபுறத்திலிருந்து மறுபுறம் திரும்பிப் படுத்தாள்.

சந்தடி அதிகமின்றிச் சந்தானம் வெளியே வந்தான். தோட்டத்தில் பவழ மல்லிகைச் செடிகளின் அருகே இருந்த நாற்காலியில் அவனுக்கு உட்காரப் பிடிக்க வில்லை.

கீழே விரிந்து கிடந்த பசும் புல் தரையில் கைகளை மடித்துத் தலைக்கு உயரமாக வைத்துக்கொண்டு, வானத் தைப் பார்த்தவாறே படுத்தான். வானம் நிர்மலமாக இருந்தது. முன்னிருட்டுக் காலமாதலால் இன்னும் சந்திரோதயம் ஆகவில்லை. நக்ஷத்திர மணிகள் மட்டும் தங்கள் ஒளித்திரளை எங்கும் பரப்பிச் சிரித்துக்கொண் டிருந்தன.

சந்தானத்தின் நினைவுகள் விடுதலை பெற்றன:

அவன் அப்பா உயிருடன் இருந்தபோது, ஒரு சமயம் சந்தானத்தின் உபாத்தியாயரைப் பார்த்து, "என்னவோ ஸார், பையனை ஐ.ஸி.எஸ்ஸுக்கு அனுப்பி, என் உயிர் இருக்கும்போதே அவனை ஒரு சப் கலெக்ட் ராகவாவது பார்த்துவிடவேணும்" என்றார்.

இதைக் கேட்ட சந்தானத்துக்குச் சிரிப்புச் சிரிப் பாய் வந்தது. 'ஐ. ஸி. எஸ்! கலெக்டர் உத்தியோகம்!- இந்தக் காலத்து அப்பாக்களே இப்படித்தான்: குமாஸ்தா, தாசில்தார், கலெக்டர், ஹைகோர்ட்டு ஜட்ஜ்! இதைத் தவிர வேறே எந்த நோக்கமுமே இவர்களுக்குக் கிடையாதோ?'

அந்த அப்பா போய்விட்டார்; ஆனால் அவர் வைத் திருந்த ஆசை!

அவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் போதே அவ னுக்கு ஐ. ஸி. எஸ். வர்க்கத்தின்மீது தீராத வெறுப்பு. அவர்களைப்பற்றி மாணவர்களிடையே எவ்வளவு தீவிர மாக எதிர்ப் பிரசாரம் செய்ய முடியுமோ அவ்வளவு தூரம் செய்திருக்கிறான். இப்போதுகூட அவர்கள் மீது இருந்த பழைய வெறுப்பு மாறவில்லை. இந்த நிலைமை

யில் அவன் ஐ. ஸி. எஸ். படிக்க ஒப்புக்கொண்டான். இங்கிலாந்துப் பிரயாணத்திற்கும் தயாராகிவிட்டான்!

தன் போக்கை நினைக்கையில் அவனுக்கே வியப்பு உண்டாயிற்று. தன்னுடைய பூரண சம்மதத்திற்கு மாருக அவன் இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொண்டிருக்கிருன். இந்தக் காரியத்தை அவனிடம் சாதித்துக் கொண்ட வத்ஸலாவின் கொஞ்சும் விழிகள் அவன் முன்னே வந்து, "சரிதான், திரும்பத் திரும்ப யோசிக்கிறீர்களே. போய் வாருங்கள்" என்றன மௌன பாஷையில்.

கலெக்டர்களைப் பற்றிய நினைவுகளில் பழைய சம்பவம் ஒன்று குறுக்கிட்டது.

நாட்டின் மதிப்பிற்குரிய தேசத் தலைவர் ஒருவர் திடீரென்று அரசியல் காரணமாய்க் கைது செய்யப்பட்டார். நாடெங்கும் கிளர்ச்சி நடந்தது. வழக்கம்போல் மாணவர்களின் பங்கு அதில் முதல்தரமாக இருந்தது. அச்சமயம் மாணவர் சங்கக் காரியதரிசியாக இருந்த சந்தானம் தலைமை வகித்து ஒரு கூட்டத்தைக் கல்லூரியிலிருந்து வெளியேற்றி வந்தான். மாணவர்களின் உள்ளக் கொதிப்பு வரம்புக்கு மீறியதால், அவர்களின் செய்கையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மூடப்படாத கடைகளுக்கெல்லாம் கற்கள் பறந்தன. போலீஸார்களும் அவர்களது பார்வைக்குத் தப்பவில்லை. பலருக்குக் காயம். கோஷங்கள் வானைப் பிளக்க இம்மாதிரியான கலவரத்துடன் மாணவர் கோஷ்டி கலெக்டர் பங்களாவுக்குச் சமீபமாய் வந்துகொண்டிருந்தது.

பங்களாவைக் கூட்டம் நெருங்கியவுடன் உள்ளே இருந்து ஒரு கார் வெளியே வந்து நின்றது. அதிலிருந்து நடுத்தர வயசான மனிதர் ஒருவர் இறங்கி வந்து, "இளைஞர்களே, தயவுசெய்து உங்கள் கோஷங்களைச் சற்று நிறுத்துங்கள்!" என உரக்கக் கூவினர். அவர்

சாதாரணக் கீழ்நாட்டு உடைதான் உடுத்திருந்தார்; ஒன்றும் ஆடம்பரம் இல்லை.

"நீங்கள் யார் ?" என்றான் சந்தானம் படபடப்புடன். உடனே அருகிலிருந்து பல மாணவர்களின் குரல்கள் "நம்மூர்க் கலெக்டர்" என்று மெதுவாக எழுந்தன. அதற்குள் அந்த மனிதரே சிரித்துக்கொண்டு, "நான் தான் தம்பி இந்த ஊர்க் கலெக்டர்" என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு அவர் மேலே சில நிமிஷங்கள் பேசினார்.

"உங்களில் சிலர் உணர்ச்சி மிகுதியால் செய்யத் தகாத காரியங்களையெல்லாம் செய்திருக்கிறீர்கள். நீங்கள் யாரிடம் சகோதர பாவம் கொண்டாடுகிறதாகக் கூறுகிறீர்களோ, அவர்களே உங்களால் துன்பத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். ஆத்திரத்தால் ஒருபொழுதும் நிதானத்தை இழக்க வேண்டாம். உங்களுடைய நோக்கத்தை நான் மெச்சுகிறேன். அதை நிறைவேற்றும் வழி இது அல்ல. உங்களைப் போலவே அதிகாரிகளாகிய நாங்களும் ஆத்திரப்பட்டால் உங்கள் கதி என்ன ஆகும் ? காலையில் மலர்ந்த முகங்களுடன் நீங்கள் பள்ளி செல்வதைப் பார்த்த பெற்றோர்கள் உங்களைப் பிணக் கோலத்தில் காண்பதா ? வேண்டாம் ! இன்றைச் சம்பவத்திற்கு நான் எதுவும் எதிர் நடவடிக்கை எடுக்கச் சொல்லவில்லை. நீங்கள் அமைதியுடன் வீட்டிற்குத் திரும்பி, உங்கள் நோக்கத்திற்காக ஆக்க வேலையில் ஈடுபடுங்கள்."

அவருடைய பேச்சுப் பொதுவாக எல்லா மாணவர்களையுமே மயக்கிவிட்டது. அதிகாரத்தின் சிகரமாகிய கலெக்டரா இப்படிப் பேசுகிறார் ? என்ன ஆச்சரியம் ! குழப்பத்தையும், தடியடிகளையும், துப்பாக்கிக் குண்டுகளையும் எதிர்பார்த்து வந்தவர்களுக்கு அமைதியாய் நீதி போதனை செய்ய ஆரம்பித்துவிட்டாரே !

" சந்தேகமில்லாமல் இவருடைய நரம்புகளில் ஓடுவது இந்திய ரத்தந்தான் " என்று சாதித்தான் ஒரு மாணவன்.

" இல்லை ; இதுவும் நம்மை அடக்குவதற்கு ஒரு சூழ்ச்சி" என்று மற்ருெருவன் சந்தேகப்பட்டான்.

" இவர் ஒரு புதிய முறையை மேற்கொண்டு நம்மை ஏமாற்றிவிட்டார் " என்ருன் மூன்ருமவன்.

மற்றவர்களைப் போலவே சந்தானத்திற்கும் அவர் மேல் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. ' எந்தச் சட்டத்திற்குமே புறநடை இருப்பதுபோல், இந்தச் சட்டம் படித்தவர்களிடையேகூடப் பொது விதிக்கு விலக்காக இரண்டொருவர் இருக்கிருர்கள். இவர்களெல்லாரும் காலப் போக்கிஞல் கவரப்பட்டவர்கள். தங்கள் பழங் கொள்கைகளையும், அநாவசியக் கெடுபிடிகளையும் கால வெள்ளத்தில் கரையில் ஒதுக்கப்படுவதற்காக விட்டவர்கள். இவை எல்லாம் நாட்டு முன்னேற்றத்திற்குச் சுபசகுனங்கள் ' என்று கருதினுன். இதே கலெக்டர் சில மாதங்கள் கழித்துப் பொது ஜன அன்புக்குப் பாத்திரராக இருந்ததால் வேற்றூருக்கு மாற்றப்பட்டார் என்ற செய்தியும் அவனுக்குத் தெரிந்தது !

இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததாலும் அவனுக்குச் சமாதானம் கிட்டவில்லை. நண்பன் ஒருவன் எழுதியிருந்த கடிதம் வேறே வந்து இவனைப் பரிகசித்தது. அதில் அவன் எழுதியிருந்தான் :

நீ மேற்கே புறப்படப் போவதாய் எழுதியிருந்தாய். ஒரு நாள் மேடைமீதேறி நீ வீராவேசமாய்ப் பேசிய பேச்சுக்களை இப்போது ஞாபகப்படுத்துகிறேன்: "இந்தியாமேல் நாட்டாருடைய எண்ணத்தில் கூலிகள் நிறைந்த நாடு. இந்தக் கூலிகளை மேய்க்கக் கங்காணிகளாய் அவர்கள் ஐ. ஸி. எஸ்.காரர்களை அங்கிருந்து

தயார் செய்து அனுப்புகிறார்கள்." — இப்போது நீ ஒரு கங்காணி வேலைக்கு உன்னைத் தயார் செய்துகொள்ளப் போகிறாயா? தாராளமாய்ப் போய்வா! உன் போக்கை உன் கல்யாணத்தின் போதே கவனித்துவிட்டேன்.

யாராவது ஏழைப் பெண் ஒருத்தியைத் துணையாய்க் கொண்டு லக்ஷ்ய வாழ்க்கை வாழப்போகிறேனென்றாய். ராவ் பகதூரின் மருமகனாகியதற்குக் காதலென்னும் அழகான காரணம் உன்னைக் காப்பாற்றியது. இனி ஐ. ஸி. எஸ்ஸுக்கும் வேறு ஒரு காரணம் தயாராய்க் கையில் இருக்கும்.

இங்கிலாந்து செல்வதில் எவ்வளவோ நன்மைகள் உண்டு. அவை மாத்திரம் உன்னிடம் இடம் பெற வேண்டுமென்பது என் ஆசை. சந்தோஷமாய்ப் போய் வா. அங்கே போய் மேலை நாகரிகத்தில் மூழ்கி, உன் ஏழைச் சகோதரர்களான எங்களை முற்றும் மறந்து விடாதே!

சந்தானம் வானத்தைப் பார்த்தவாறே தனக்குள் சிரித்துக்கொண்டான். 'அடே, அப்பா! எத்தனை கோபம் அவனுக்கு! எவ்வளவு உரிமையுடன் என்னை எச்சரிக்கிறான்!'

தூக்கம் கண்களைச் சுழற்றியது. பெய்துகொண்டிருந்த பனியையும் சுற்றுப்புறத்தையும் கவனியாது கண்களை மூடினான். அருகே இருந்த பவழமல்லிகை லேசாகக் கட்டவிழ்ந்து தன் மொக்குகளுக்குள்ளே சிறைப்படுத்தியிருந்த மணத்தை வெளியே விட்டது.

* * *

தனியே அறையில் படுத்திருந்த வத்ஸலா அகஸ்மாத்தாகக் கண்விழித்தாள். அங்கே சந்தானத்தைக் காணவில்லை. கடிகாரத்தில் அப்போதுதான் மணி நாலாகியிருந்தது.—ஆம், இந்த நேரத்தில் இந்த மனிதர் எங்கே தனியாய்ப் போயிருப்பார்?

பயமும் ஆச்சரியமும் சூழ அவசர அவசரமாய்த் தோட்டத்துப் பக்கம் ஓடி வந்தாள். அங்கே அவனைப் பார்த்தபோதுதான் அவளுக்கு உயிர் வந்தது. வைத்த கண் வாங்காமல் நின்ற இடத்திலேயே நின்று அவனைப் பார்த்துக்கொண் டிருந்தாள். அவளுக்குச் சிரிப்பு ஒரு பக்கம், அன்பு ஒரு பக்கம், கோபம் ஒரு பக்கம் பொங்கின.

'விஷமாய்ப் பெய்கிறது பனி; இங்கே வந்து இப்படி ஈரப் புல்லில் கவலையற்றுத் தூங்குகிறீரே! இங்கென்ன வேலையோ இந்த அர்த்த ராத்திரி வேளையில்?— தோட்டத்துப் பக்கமாச்சே, பூச்சி பொட்டு இருக்குமே என்ற எண்ணம் கொஞ்சங்கூட இருக்காதோ?'

அருகிலே உட்கார்ந்து அவன் அழகைச் சற்றுப் பருகிவிட்டு நெற்றியில் தன் மென்மையான கரத்தை வைத்தாள். சந்தானத்தின் தூக்கம் கலைந்தது. "இருங்கள்; அப்படியே கொஞ்சம் இருங்கள்; மழை பெய்தாற் போல் முகத்தைப் பனி நனைத்திருக்கிறது" என்று தன் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துவிட்டாள்.

# 3

"அப்பா !"

அவள் அப்பாவின் காதில் அது விழவில்லை. காரணம் அந்தக் கட்டலையின் பேரொலியோ, அல்லது ஜனத்திரளின் முணுமுணுப்போ அல்ல. அவர் உணர்வெல்லாம் தூரத்தே விலகி விலகிச் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பலை நோக்கியிருந்தது.

வத்ஸலா மீண்டும் சற்று அழுத்தமாகக் கூப்பிட்டாள் :

"அப்பா !"

அவர் மௌனமாகத் திரும்பிப் பார்த்தார்.

"போகலாமே."

"சரியம்மா !"

வத்ஸலாவின் கண்களை மறைத்திருந்த நீர்த் திரையை அவள் அப்பா கவனியாதது போல் கவனித்தார். ஆனால் அதே சமயம் அவருடைய முகத்தில் கவிந்திருந்த வருத்தத்தை, அவரால் வத்ஸலாவைப் போல் அத்தனை சாதுரியமாய் மறைக்க முடியவில்லை.

இருவரும் டாக்ஸியில் ஏறிக்கொண்டு பம்பாய் ஸ்டேஷனுக்கு வந்து, அங்கே தயாராய் இருந்த ரெயிலில் ஊர் புறப்பட்டார்கள். வத்ஸலா அந்த இரவில் ஒன்றும் சரியாகச் சாப்பிடவில்லை. அடுத்த ஜங்ஷனிலிருந்து அவள் அப்பா வருவித்த உணவில் பெயருக்கு ஏதோ கொஞ்சம் உண்டுவிட்டுப் பேசாதிருந்துவிட்டாள்.

சற்று நாழிகையாவது அவளை மட்டிலும் தனியே இருக்கவிட்டால் தேவலாம் போலிருந்தது. அதற்கேற்றாற் போல் அவள் அப்பாவும், "அதிகம் விழித்

திருக்காதே அம்மா; படுத்துத் தூங்கு" என்று சொல்லி விட்டு மெத்தையில் சாய்ந்தார். ஐந்து நிமிஷத்திற் கெல்லாம் அவருடைய குறட்டைச் சத்தம் ரெயிலின் சத் தத்துடன் போட்டி போடத் தொடங்கியது.

ஒரு பக்கம் வானத்துப் பால் நிலவும், மற்றொரு பக்கம் வண்டியின் மின்சார விளக்கொளியும் முகத்தில் படிய வத்ஸலா ஜன்னல் பக்கம் தலையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அன்று மாலை பம்பாய்க் கடற்கரையைத் துவம்சம் செய்த அந்தப் பேரலைகள் இப்போது அவள் நெஞ்சத்தில் திரையெறிந்தன. யுக யுகாந்தரமாய்ப் பழகிய ஒருவனின் பிரிவைப்போல் அது அவளுக்குத் தோன்றியது.

முதல் முதலாக அவனைப் பார்த்த காட்சியை நினை வூட்டிக்கொண்டாள்.

அப்போதுதான் சந்தானம் அந்தக் கல்லூரியில் வேலையை ஒப்புக்கொண்டு சரித்திர ஆசிரியராய் வந் திருந்தான். அவனுடைய முதல் சரித்திரப் பிரசங்கம் அன்று வகுப்பில் ஆரம்பமாகியது.

" இரண்டு வருஷங்களுக்கு முன்பெல்லாம் நானும் உங்களைப் போன்ற மாணவர் கூட்டத்தில் ஒருவனாகத் தான் இருந்தேன். மீண்டும் அவர்களிடையே பழகச் சந்தர்ப்பம் கிடைத்ததால்தான் இவ்வேலையை ஒப்புக் கொண்டேன். இன்றைக்குப் பாடம் ஆரம்பிக்கு முன், நம்முடைய பள்ளிப் பாடங்களைப் பற்றிப் பொதுவாகவும், சரித்திரப் பாடத்தைப் பற்றிக் குறிப்பாகவும் உங்களுக் குச் சில விஷயங்கள் சொல்கிறேன்" என்று தொடங்கி எரிமலைபோல் பல விஷயங்களைக் கர்ஜனை செய்து கொண்டு வந்தான். மாணவ மாணவிகள் கட்டுப் பட்டுப்போய் உற்றுக் கேட்டுக்கொண்டு வந்தனர்.

கடைசியாக, " கூடுமான வரையில் கட்டுப்படுத்தப் பட்ட இந்தக் கல்வித் திட்டத்தின்படியே நான் பாடம்-

நடத்துகிறேன்; ஆனால் அவ்வப்போது, உங்களுக்குத் தேவையான மறைக்கப்பட்ட உண்மைகளையும் சொல்கிறேன்" என்று கூறி மேலே பாடம் தொடங்கினான்.

அதே நாள் சாயங்காலம் வத்ஸலாவின் வீட்டில் அவளும் அவள் தோழி சுபத்திராவும் புதிதாக வந்திருக்கும் அந்த வாத்தியாரைப் பற்றி ஒரு சர்ச்சை நடத்தினர்.

"பள்ளிக்கூடத்திற்கு வந்தால் இவரை ஒழுங்காய்ப் பாடம் நடத்தச் சொன்னார்களா, அல்லது இந்தமாதிரி மேடைப் பிரசங்கம் பண்ணச் சொன்னார்களா?" என்றாள் வத்ஸலா.

சுபத்திராவுக்கு ஒரே சிரிப்பு. ஏனென்றால் இந்த ஒரு வாத்தியாரைப் பற்றித்தான் அன்றைக்கு வகுப்பில் ஒரே மாதிரியான அபிப்பிராயம். எல்லோரும் மாறுபாடில்லாமல் 'அருமையானவர்' என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

"எல்லோருக்கும் ஒரு வழி என்றால், உனக்கு மாத்திரம் வேறொரு வழி, வத்ஸலா! வகுப்பில் யாரையாவது கேட்டுப் பார், என்ன சொல்லுகிறார்களென்று."

"ஆமாம்; பாடத்தைத் தவிர மற்ற ஊர் வம்பெல்லாம் வளர்க்கிறார் அல்லவா? அதனால் எல்லோருக்கும் கட்டாயம் அவரைப் பிடிக்கத்தான் பிடிக்கும்!"

"ஏன்? அவர் பாடம் நடத்தியதில்தான் என்ன குறை? அரைமணி நேரந்தான் கச்சிதமாய்ச் சொல்லிக் கொடுத்தாரே; அதில் என்ன உனக்குப் பிடிக்கவில்லை?"

"அதென்னவோ சுபத்திரா, எனக்குப் பிடிக்கவில்லை. அவ்வளவுதானே? ஆள் வாட்டசாட்டமாக இருக்கிறார்; அழகாய் உடை உடுத்துக்கொண்டு வகுப்புக்கு வந்து, நெருப்புப் பறக்கப் பேசுகிறார். இதனை உங்களுக்கு அவரை ரொம்பப் பிடித்திருக்கலாம்.—"

சுபத்திராவுக்கு வத்ஸலாவை நன்றாய்த் தெரியும்; மேலே அவள் பேச்சுக் கொடுக்கவில்லை.

தன்னுடைய அறைக்குச் சுபத்திரா புறப்பட்டவுடன் வத்ஸலா தனக்குள் நகைத்துக்கொண்டாள். ஏனெனில் மற்ற எல்லோரையும் விட அவளுக்குத்தான் சந்தானத்தை அதிகம் பிடித்திருந்தது. அவனுடைய அழகான பேச்சு, மலர்ந்த முகம், உயர்ந்த சரீரம், சமயங்களில் கண்களுடன் கலக்கும் பார்வை - இவற்றை அவள்தான் அதிகமாக ரசித்தாள். அவளுக்கே இயற்கையான முரட்டுச் சுபாவத்தால் இப்படிச் சுபத்திராவுடன் எதிர்வாதம் செய்தாளே தவிர, உண்மையில் அவள் மனம் அப்படி இல்லை.

வழக்கமாக அங்கே வத்ஸலா, அலங்காரத்தில் மற்ற மாணவிகளுக்குக் கொஞ்சமும் சளைத்தவள் அல்ல. ஏனோ சந்தானம் வந்த பின்பு அது எல்லையைத் தாண்டி விட்டது. வாரத்தில் வகுப்புள்ள ஐந்து நாட்களிலும் ஐந்து நிறப் புடைவை, ஜாக்கெட், பூ, வளை இத்தியாதிகளெல்லாம்.

ஒரு நாள் தன் பிரசங்கத்தை முடித்துவிட்டு எழுதிக் கொள்ளச் சொல்லி வகுப்பிற்குக் குறிப்புக்கள் கொடுத்துக்கொண்டிருந்தான் சந்தானம். எல்லோரும் எழுதத் தொடங்கிவிட்டனர். வத்ஸலா மட்டில் எழுதாமல் தன்னை மறந்து அவனையே நோக்கிக்கொண்டிருந்தாள்.

"ஏன் வத்ஸலா, நீங்கள் எழுதிக் கொள்ளவில்லையா?" என்று அவன் கேட்டபோது அவள் முகம் சிவந்தது. சந்தானமும் அதை அறிந்துகொண்டான்.

மற்றொரு நாள் சந்தானம் ஆழ்ந்த சிந்தனையுடன் சந்தடியற்ற ஒரு தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தான். பின்புறமிருந்து மோட்டாரின் குழல் சத்தம் இடைவிடாமல் 'பூம், பூம்' என்று கேட்டது. திரும்பிப் பார்த்தான். சிரித்தபடியே வேறு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு, முன்னைக் காட்டிலும் படுவேகத்துடன் காரை விரட்டிச் சென்றாள் வத்ஸலா.

மேலே படிந்த புழுதியை உதறிக்கொண்டு, "குறும்புக்காரப் பெண் !—பொல்லாதவள் !" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான் அவன்.

*  *

சந்தானம் கல்லூரி ஆசிரியராய் அதிக நாள் இருக்கவில்லை. அந்தக் கல்லூரி நிர்வாகஸ்தர்களுக்கும் அவனுக்கும் தகராறு ஏற்பட்டுவிட்டது. மாணவர்களிடையே அவன் அரசியல் விஷயமாகப் பேசினுனென்றும், அது பற்றிச் சமாதானம் கூறவேண்டுமென்றும் அவர்கள் கேட்டிருந்தார்கள். சந்தானம் அதை வகுப்பில் கூறிவிட்டு, " இதற்கு நான் அவர்களிடம் சொல்லப் போகும் சமாதானம் என்ன தெரியுமா ? ராஜீநாமாக் கடிதந் தான் !" என்முன்.

" இதற்காக நீங்கள் எதுவும் தலையிட்டுக் கிளர்ச்சி செய்யவேண்டாம். இது என்னையும் அவர்களையும் பொறுத்த விஷயம். என் போக்கு அவர்களுக்குப் பிடிக்கவில்லை ; அவர்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. பேசாமல் விலகிக்கொள்கிறேன். யாரையும் எதிர்பாராமல், என்னுடைய அபிப்பிராயத்திற்கும் கொள்கைக்கும் பங்கம் வராமல் என்னல் வாழ முடியும். எனக்காக இங்கு யாரும் வருந்தவேண்டாம். நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் எதிர்காலத்திற்கென ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து, அதிலிருந்து வழுவாமல் முன்னேறுங்கள். இப்போதைக்கு உங்களை விட்டு விலகினலும், மீண்டும் உங்களிடையே விரைவில் தொடர்பு கொள்வேன்" என்முன்.

வேலைக்குச் சீட்டுக் கொடுத்த பின்பு தன் அறையில் உட்கார்ந்து அடுத்தபடியாகச் செய்யும் காரியம் பற்றிச் சந்தானம் யோசனை செய்துகொண் டிருந்தான். இச்சமயத்தில் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதி

லிருந்து டிரைவர் இறங்கி வந்து ஒரு விலாசச் சீட்டைக் காண்பித்தான். 'ராவ்பகதூர் சிவஞானம் பிள்ளை, ஜில்லா போர்டுத் தலைவர்' என்று இருந்தது.

"தாராளமாய் வரச் சொல்லுங்கள்" என்று நாற்காலியை இழுத்துப் போட்டான்.

கும்பிட்டுக் கொண்டே ஜரிகைத் தலைப்பாகை, விசிறி மடிப்பு அங்கவஸ்திரம், கையில் வெள்ளிப் பிடி போட்ட பிரம்பு இவற்றுடன் காட்சியளித்தார் ராவ் பகதூர்.

"உட்காருங்கள்; என்ன விசேஷம்?" என்று விசாரித்தான்.

"ஒன்றும் இல்லை; நம் பெண் வத்ஸலாவுக்கு இந்தப் பரீக்ஷைவரையில் டியூஷன் சொல்லிக்கொடுக்க வேண்டும். இது விஷயமாக உங்களைப் பார்த்துப் போகலாமென்று வந்தேன்" என ஆரம்பித்தார்.

"நான் இப்போது அந்தப் பள்ளிக்கூடத்தில் இல்லையே; ராஜீநாமாச் செய்துவிட்டுச் சும்மா இருக்கிறேன். நாளை நாலை இவ்வூரை விட்டுப் புறப்படலாமென எண்ணம்" என்றான்.

"விஷயம் தெரியும். அதனால்தான் நானே நேரில் வந்தேன். பள்ளிக்கூடத்தில் நீங்கள் வாங்கிய சம்பளம் நான் தருகிறேன்."

சற்று நிதானித்துவிட்டு, "நான் அதற்காகச் சொல்லவில்லை" என்றான்.

"பின்?"

"தங்களுடைய பெண்ணை உத்தேசித்து நான் இங்கேயே தங்கவேண்டுமா? இது எனக்குப் பிடிக்கவில்லை" என்றான்.

ராவ்பகதூர் இதை எதிர்பார்க்கவே இல்லை; திகைத்துவிட்டார்.

"பெண்ணுக்கு ஒரே பிடிவாதம்; இந்த இரண்டு மாதம் தங்கினால் போதும். காலை நேரங்களில் நான் உங்களுக்குத் தவறாமல் கார் அனுப்புகிறேன்."

சந்தானம் யோசித்தான்: 'விசித்திரமாயிருக்கிறதே! படிப்பில் இத்தனை அக்கறை உள்ளவள் வேறு யாரிடமாவது சொல்லிக்கொள்வதுதானே? அவர்களுக்கும் வீண் செலவு; எனக்கும் இது வேலையற்ற வேலை. தனிப்பட்ட ஒரு பணக்காரப் பெண்ணின் பொருட்டு நான் இங்கே இருக்கிறேன் என்பதைவிட எனக்கு வெட்கம் வேறில்லை.'

"தயவு செய்து என்னை மன்னியுங்கள்; தங்களது விருப்பத்திற்கு உடன்பட முடியாத நிலையில் இருக்கிறேன்" என்று இறுதியாகப் பதிலளித்தான்.

ராவ்பகதூர் வருத்தத்துடன் விடை பெற்றுக் கொண்டார். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் அதே கார் திரும்பி வந்தது. அதிலிருந்து வத்ஸலா இறங்கி வந்தாள்.

"நமஸ்காரம், ஸார்" என்று சொல்லிவிட்டுப் படபடப்புடன் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"என் அப்பாவின் வேண்டுகோளை இப்படி மறுப்பீர்களென்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"அது எப்படி நான் சம்மதிப்பேனென்று நீங்கள் எதிர்பார்க்கலாம்?"

"பள்ளிக்கூடத்தில் முன்போலவே இருந்திருந்தால், நீங்கள் இங்கேதானே தங்குவீர்கள்?"

"ஆம்."

"அதே சௌகரியத்தை அப்பா உங்களுக்குச் செய்து கொடுப்பதாகக் கூறினாரே!"

"என் சௌகரியத்திற்காக மட்டிலும் நான் எதையும் கவனிப்பதில்லை."

"அப்படியானால் என்னுடைய உதவிக்குத்தானே தங்களைத் தங்கும்படி சொல்கிறேன்?"

சந்தானம் தன் அபிப்பிராயத்தை வெளிப்படையாகத் தெரிவித்தான். "இங்கே எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்; உங்களுக்கு மனம் இருக்குமானால் இந்தப் படிப்பு ஒரு பெரிய காரியமல்ல. நீங்கள் இனிமேல் வகுப்பில் நன்றாகக் கவனித்தாலே போதும். அப்படி ஒன்றும் நம்பிக்கை இழக்கும்படி, அந்தப் பாடத்தில் நீங்கள் மோசமாக இல்லை."

வத்ஸலா முதலில் மெதுவாகப் பேசினாள்; பின்பு உணர்ச்சியோடு சற்று வேகமாகப் பேசினாள்; கடைசியில் கோபம், தன் தோல்வியால் ஏற்பட்ட ஆத்திரம், எல்லாம் அவள் குரலில் ஒலித்தன. தன் உள்ளத்தில் குமுறும் ஒரு நுண்மையான நினைவை இவர் அறிந்துகொள்ளாமல் பேசுகிறாரா, அல்லது அறிந்துகொண்டும் அதை அசட்டை செய்கிறாரா என்று அவளுக்குப் புலனாகவில்லை.

இடத்தைவிட்டு எழுந்தாள். முகத்தை உணர்ச்சியற்றதாக வைத்துக்கொண்டு, "நான் போய் வருகிறேன் ஸார்; உங்களுக்கு இன்னும் என்னைத் தெரிந்துகொள்ள முடியவில்லை!" என்று சொல்லி விர்ரென்று காரில் பாய்ந்தாள்.

அவளுடைய அந்த முகபாவமும், அந்தக் குரலும் சந்தானத்தை ஒரு முறை உலுக்கி எடுத்தன.

வேகமாய் எழுந்து கார் அருகில் சென்றான். கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்த வத்ஸலாவிடம், "இல்லை, வத்ஸலா, நான் இங்கேயே தங்குகிறேன்; எப்போது சௌகரியமோ அப்போது கார் அனுப்புங்கள்; வருகிறேன்" என்றான்.

அதிக நாள் வத்ஸலா அவனிடம் மாணவியாக இருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை. விரைவில் அவனைத் தனது அன்பினால் மயக்கி மணம் புரிந்து கொண்டாள். உபாத்தியாயராக உள்ளே நுழைந்த சந்தானம், அந்த மாளிகையில் மாப்பிள்ளை ஸ்தானத்தை அடைந்தான்.

# 4

கப்பலின் மேல்தளத்தில் நின்று கருநீலக் கடல் வெளியைப் பார்த்துக்கொண்டிருந்த சந்தானத்திற்கும் மேற்கண்ட நினைவுகள்தாம் அச்சமயத்தில் தோன்றின.

வத்ஸலா - சந்தேகம் இல்லை-ஒரு சூறுவளியேதான்! சூறுவளி எப்போதாவது எங்கிருந்தாவது வந்து மனிதனைச் சூழ்ந்துகொள்ளும்; விநாடிப் பொழுதுக்கெல்லாம் தன் போக்கில் சென்றுவிடும். வத்ஸலா அப்பேர்ப்பட்ட சூறுவளி அல்ல; ஒரே இடத்தில் நின்று, தன் அன்பின் வேகத்தால் சுழன்று சுழன்று மத்தியில் அகப்பட்டவனைத் திக்கு முக்காடச் செய்யும் சூறுவளி இவள்.

எங்கிருந்தோ வந்தவனைத் தனது அன்புச் சக்தியால் சூழ்ந்துகொண்டாள்; அவனைத் தன்னுடைய உடைமையாகவே ஆக்கிக்கொண்டாள். அவனுடைய பழைய லக்ஷ்யங்கள், கொள்கைகள், நோக்கங்கள், இவற்றையெல்லாம் அவனுக்குத் தெரியாமலே அவனிடமிருந்து பிய்த்துப் பிய்த்து எறிந்துவிட்டாள்.

அவளுடைய ஆசைக்காக அவனை ஆடம்பரத்தில் தூக்கிவைத்தாள்; அவளுடைய விருப்பத்திற்காக அவனை அழகுபடுத்தினாள்; அவளது வெறி கொண்ட காதற் கூடத்தில் அவன் ஓர் அருமையான விக்கிரகமாக வைக்கப்பட்டான்.

விக்கிரகத்திற்கு என்னவெல்லாமோ பணிவிடை செய்கிறார்கள்; தேரும், திருவிழாவும், களியாட்டங்களும் அதற்காக நடக்கின்றன. வேளைக்கு ஒரு பூஜை, நாளைக்கு ஓர் அலங்காரமாய் இருக்கிறது. இதைப்பற்றியெல்லாம்

அந்த விக்கிரகத்திடம் ஏதும் கேட்கிறார்களா? யாரை மகிழ்விப்பதற்காக இவையெல்லாம் நடைபெறுகின்றன?

தன் நெஞ்சை அவளிடம் பறி கொடுத்திருந்ததால் அவனும் ஒரு விக்கிரகந்தான்.

சந்தானத்தின் உத்தரவுக்காக வத்ஸலாவின் மாளிகையில் பணியாட்கள் காத்திருந்தனர்; ஆனால் உத்தரவிடுவதற்கு அவனுக்குக் குரலில்லை. அவளுடைய செல்வம் அத்தனையும் அவன் காலடியில் கிடந்தது; ஆனால் அதன் தேவை சிறிதும் அவனுக்கு ஏற்படவில்லை. அவனுடைய யோசனையைக் கேட்க அங்கே யார் யாரோ தயாராய் இருந்தார்கள்; ஆனால் அவனோ வத்ஸலாவின் யோசனைப்படி நடந்துவந்தான்.

பிடிக்காத மாளிகை வாசம் பிடித்திருந்தது. வேண்டாத சுகபோகம் வேண்டியிருந்தது. வெளி மினுக்கிலும் ஆடம்பரத்திலும் விஷயம் இல்லை என்று பறை சாற்றியவன், மனித வாழ்க்கைக்கு அவையும் அவசியந்தான் என்னும் நிலைமைக்கு வந்திருந்தான்.

எப்படி இந்த மாறுதல்?

அவர்களது கல்யாணத்திற்கு முன்பு, வத்ஸலாவுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வந்த சில தினங்களுக்குள்ளேயே அவளை அவன் உள்ளது உள்ளபடி தெரிந்துகொண்டான். அங்கே அவனுக்கு அவளது கட்டளைப்படி நடந்த ராஜோபசாரங்களை அவனால் மறுக்க முடியவில்லை. அன்றியும் அவளது இந்தக் கம்பீர சுபாவமே அவனை அவள்பால் இழுத்தது.

"ஸார், இனிமேல் என்னை நீங்கள், 'வாங்கள், போங்கள்' என்று கூப்பிடக்கூடாது. பெயரைச் சொல்லி

'வா, போ' என்று அழைத்தால் போதும்; தெரிகிறதா?" என்றாள்.

"தெரிகிறது. ஆனால், நீங்கள்... இல்லை, இல்லை...நீ என்னை 'ஸார்' என்று அழைக்கலாமோ?"

"நானும் அப்படி அழைக்கவில்லை."

"இன்னொரு விஷயம்: நீங்கள் சொல்லிக் கொடுக்கும் படிப்பு எனக்குப் பிடிக்கவில்லை! இன்றோடு இவைகளைத் தொலைத்து முடிவு கட்டப்போகிறேன். பரீக்ஷையில் நான் தேர்ச்சி பெற்று எதுவும் ஆகப்போகிறதில்லை. பெய்ருக்குத்தான் எழுதப் போகிறேன். எலிஸபெத் மகாராணி எப்படிப் போனால் நமக்கு என்ன?"

"அப்படியானால்..."

"அப்படியானாலா? உங்களுக்குத் தெரியவே தெரியாதா? விஷயத்தை அப்பாவிடம் சொல்லியே விட்டேன், தெரியுமோ?" என்று புத்தகங்களைத் தூக்கி மெதுவாய்ச் சுழற்றி எறிந்துவிட்டு, தானும் சுழன்றோடி வந்து அவன் உட்கார்ந்திருந்த நாற்காலியைப் பிடித்துக்கொண்டாள். அன்றிலிருந்தே சந்தானம் தன்னை இழந்தான்.

இப்போதுதான், இந்தக் கப்பலின் தனிமையில் அவன் தன்னைப் பிரித்துப் பிரித்து அறிந்துகொள்ளச் சமயம் கிடைத்தது. வானத்தில் நின்று சிரிக்கும் ஒரு பெரிய நக்ஷத்திரத்தைப் பார்த்தான். அது ஓர் அழகிய சின்னஞ் சிறு மேகத்தால் மறைக்கப்பட்டு, தன் ஒளியை மறந்திருந்தது. ஆனால் அந்த மேகம் நகர்ந்தவுடன், அதே ஒளி.

சந்தானம் தன் பழைய நாட்களையும், அதன்பின் வத்ஸலாவின் எதிரே மயக்கத்தில் கழிந்த நாட்களையும் எண்ணிச் சிரித்தான். அந்தச் சிரிப்பு மேகத்திரையிலிருந்து ஒதுங்கிய அந்தத் தாரகையின் ஜ்வலிப்புப் போல இருந்தது.

'ஆனால் வத்ஸலா தீவிரமான அன்பு கொண்டவள்; உறுதியான மனம் படைத்தவள்...அப்படியிருந்தும், பிரிவுத் துன்பத்தால் 'அவள் இந்தச் சில தினங்களில் பட்ட பாடு! எத்தனை தரம் என்னைச் சுற்றிச் சுற்றி வருவது? எனக்கு யோசனைகளுக்குமேல் யோசனைகளாய்ச் சொல்வது!—அவள் விசித்திரமான பெண்.'

# 5

ராவ்பகதூரின் வீட்டு வேலையாட்களில் மிக வயசும், அனுபவமும் உள்ளவன் தோட்டக்கார முத்து சாமி. அவனுக்கு அங்கே கொஞ்சம் செல்வாக்கு உண்டு. ராவ்பகதூரும் அவர் மனைவியும் சமயங்களில் அவனிடம் யோசனை கேட்டுக்கொள்வார்கள். வத்ஸலா பிறந்தது முதல் அவளைத் தூக்கி வளர்த்தவனும் முத்து சாமிதான்.

அவனிடம் இன்றைக்கு மற்ற வேலைக்காரர்களெல்லாம் வந்து புகார் சொல்லிக்கொண்டார்கள்.

"என் முதுகு ஒடிஞ்சு போச்சு தாத்தா! சின்ன அம்மா பண்ற அட்டகாசம் பொறுக்க முடியல்லே; கீழே கெடக்கிற சாமானெல்லாம் மாடிக்கும், அங்கே கெடக்கிற சாமானெல்லாம் கீழேயும் இப்போத்தான் போட்டு வந்தேன். இன்னும் சாயங்காலம் உள் அறையை ஒழிச்சுக் கொடுக்கணுமாம்."

"நாங்க படற பாடு ஒண்ணுமில்லே தாத்தா! பெரிய எசமானும், அந்த அம்மாளுமே எப்படி அதுங் கிட்டே நடுங்கிறாங்க தெரியுமா?"

"என்னோட சமையல் இந்த மூணு நாளாய் அதுக்கு வேப்பங்காயாய் இருக்குது. எதுக்கு எடுத்தாலும் எரிஞ்சு எரிஞ்சு விழுகுது. மாப்பிள்ளை ஐயா ஊருக்குப் போனதிலேயிருந்து இந்த அவதிதான்!" என்றாள் சமையற்காரி செல்லம்.

பொக்கை வாய்த் தாத்தா சிரித்தான். "பார்த்தீங் களா, செல்லம் சொல்றதை! சின்ன ஐயா ஊருக்குப் போன புதுசோ இல்லையோ, அப்படித்தான் இருக்கும்,

கொஞ்ச நாளைக்கு; பிறகு எல்லாம் சரியாய்ப் போயிடும், போங்க" என்று சமாதானப்படுத்தினன்.

அவன் இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் அவனுக்கே ஓலை வந்தது.

"தாத்தாவைச் சின்ன அம்மா கூப்பிடுறாங்க" என்றாள் சிறுமி லக்ஷ்மி.

அங்கே அவனுக்குக் கீழ்க்கண்ட உத்தரவு பிறந்தது. "நீ இப்போது தோட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிற இருப்பு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இந்தச் செடி கொடி பூராவும் எடுத்துவிட்டு, எல்லாம் புதுப் புதுச் செடிகளாய் வைக்க வேண்டும். இந்த மாதிரி ஒரே வரிசையில் இல்லாமல், நான் சொல்லுகிறபடி நட்டவேண்டும்."

"அப்படீன்னு இந்தச் செடியெல்லாம் பிடுங்கி எறிஞ்சுடணுமா?" என்று சற்றுத் தயக்கத்தோடு கேட்டான் கிழவன்.

"ஆமாம், உடனே செய்ய வேண்டும். இந்தப் பழங்காலத்து மாதுளை, கொய்யாவுக்கெல்லாம் இங்கே வேலை இல்லை."

கிழவன் பேசாமல் நின்றான்.

"என்ன, தெரிகிறதா? உன்னால் மட்டும் இந்த வேலையைச் செய்ய முடியாது. இன்னும் இரண்டு ஆட்களைச் சேர்த்துக் கொள். நான் சீமைப் பூச்செடிப் பதியங்களுக்கு எழுதி வரவழைப்பதற்குள், தோட்டம் முழுவதும் கொத்திப் போட்டிருக்க வேண்டும்."

"சரி அம்மா" என்று சொல்லிவிட்டுத் தலையைக் கவிழ்த்துக்கொண்டு தன் கூடத்திற்கு வந்தான்.

"என்ன தாத்தா, ஒரு மாதிரியாத் திரும்புறே? சின்ன அம்மா ஏதாச்சும் சொன்னாங்களா?" என்று விசாரித்தார்கள் மற்றவர்கள்.

அவன் ஒன்றும் அவர்களுக்குப் பதில் கூறவில்லை.

தனக்குள் முனகிக் கொண்டான்: "இருந்திருந்தும் இந்த அம்மாவுக்கு ஏன் இப்படிப் புத்தி போகிறது? இத்தனை நாள் என் கையாலே பிள்ளைபோல் வளர்த்த தெல்லாம் உடனே வெட்டி எறிய வேணுமாமே!"

சாயங்காலம் அவைகளுக்குத் தண்ணீர் வார்க்கும் போது, "இன்னிக்கு மட்டுந்தான் உங்களுக்குத் தண்ணி ஊத்துகிறேன்; நிறையக் குடியுங்கோ. நாளையிலே யிருந்து உங்களுக்குப் போட்டியாக இங்கே வெள்ளைக் காரச் செடியெல்லாம் வருதாம்; இப்பவே குடிச்சுக்குங் கோ!" என்று தாங்காத வருத்தத்துடன் அவைகளுக்கு நீர் ஊற்றினான்.

ரோஜா, மல்லிகை, முல்லை கொழித்த இடங்கள் கட்டாந்தரை யாக்கப்பட்டன. அங்கே சில ஆட்கள் மண்வெட்டியால் தரையைக் கொத்திக்கொண் டிருந் தனர். காலை வெயிலில் அவர்களது முதுகின் மத்தியி லிருந்து வேர்வை மணி மணியாக உதிர்ந்துகொண்டிருந் தது. வத்ஸலா சிறு குடை ஒன்றைப் பிடித்துக் கொண்டு வேலையைப் பார்வையிட வந்திருந்தாள்.

அவளுடைய பார்வை அந்தத் தோட்டத்து முள் வேலிக்கு அப்பால் சென்ற போது, அங்கே ஒரு பெண் நின்றுகொண் டிருப்பதைக் கவனித்தாள். அவளுடைய பார்வையும் வத்ஸலாவின் பக்கந்தான் இருந்தது.

வத்ஸலாவைக் கண்டவுடன், "நமஸ்காரம்" என் றாள் அவள்.

பார்வைக்கு அவள் அழகாக இருந்தாள். கவர்ச்சி கரமான முகம். வத்ஸலாவைவிட இரண்டு மூன்று வயசு குறைந்திருக்கும். சுருண்டு கிடந்த தலைமயிரை வெட்டி விட்டிருந்தாள். காதுகளில் லோலாக்கு. கழுத் தின் வெளியே தொங்கிக்கொண்டிருந்த நீண்ட சங்கிலி.

"நமஸ்காரம்" என்று வத்ஸலா பதிலளித்துவிட்டு, "இந்தப் பங்களாவுக்குப் புதிதாய் வந்திருக்கிறீர்களா? எப்போது வந்தீர்கள்?" என்றாள்.

"நேற்றுத்தான் வந்தோம்."

"நல்ல வேளை. எனக்கும் இத்தனை நாளாய் இங்கே பொழுதே போகவில்லை. இங்கேதானே இனிமேல் இருக்கப் போகிறீர்கள்? இதுவரை எங்கு இருந்தீர்கள்?"

"அப்பாவுக்குத் திருச்சியிலிருந்து மாற்றல். அங்கே கவர்ண்மெண்டு ஆஸ்பத்திரி டாக்டராக இருந்தார். இனிமேல் இங்கேதான்."

இருவரும் தங்கள் தங்கள் பெயரைப் பரிமாறிக் கொண்டனர். அவள் தன் பெயரை ஸ்டெல்லா என்று தெரிவித்தாள்.

"உங்களுக்கு மத்தியான்னத்திற்கு மேல் பொழுது இருக்குமோ? ஆள் அனுப்புகிறேன்; அவசியம் வாருங்கள். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருப்போம்" என்றாள் வத்ஸலா.

"ஆள் எதற்கு? நானே வருகிறேன்" என்றாள் ஸ்டெல்லா.

# ௬

"என் அன்பே" என்று சந்தானம் ஆரம்பித்திருந்த அவனுடைய முதல் கடிதத்தை வத்ஸலா ஐந்தாம் முறையாகப் படித்துக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறை படித்தபோதும், அதன் ஆரம்பத்திலுள்ள இரண்டு வார்த்தைகளை அவள் நெஞ்சு வெகு நேரம் சுற்றிக்கொண்டே இருந்தது. 'என் அன்பே!'- எவ்வளவு அழகாக அழைத்திருக்கிறார்!

அதன் பின்பு அவன் என்ன என்னவோ எழுதியிருந்தான். அவன் எழுதியவையெல்லாம் அவள் முன்பு உருவம் பெற்று நடமாடின. அவள் அன்றைக்குத் தலை வாரிக்கொள்ளவில்லை; முகம் அலம்பிக்கொள்ளவில்லை; பொட்டிட்டுக் கொள்ளவில்லை. தன்னுடைய அறைக்குள்ளேயே புதைந்துகொண்டு அந்தக் கடிதத்திலே பெருகியோடிய அன்பு வெள்ளத்தைப் பருகிக்கொண்டிருந்தாள்.

குறிப்பிட்ட நேரத்தில் ஸ்டெல்லா தன்னுடைய பூனைக்குட்டி சகிதம் வத்ஸலாவின் வீட்டிற்கு வந்தாள். வத்ஸலா இருக்கும் அறைக்குள் நுழைந்ததும் கையிலிருந்த பூனைக்குட்டியை மேஜையின்மேல் வைத்துவிட்டு, "ஏன் நீங்கள் ஒரு மாதிரியாய் உட்கார்ந்திருக்கிறீர்கள்? தலைகூட வாரிக்கொள்ளவில்லையே! வீட்டில் அதிக வேலையோ?" என்று கேட்டபடியே நாற்காலியில் உட்கார்ந்தாள். அப்பொழுதுதான் வத்ஸலாவுக்குச் சுய நினைவு வந்தது. வெட்கத்தினால் முகம் கனிய, "இல்லை, நிறையக் கடிதங்கள் வந்திருந்தன. அவைகளைப் படித்துக்கொண்டே இருந்துவிட்டேன். நேரம் போனது தெரிய

வில்லை.—கொஞ்சம் இருங்கள்; இதோ வந்துவிட்டேன்" என்று எழுந்து வெளியே ஓடினாள்.

மேஜையின்மீது இன்னும் ஒரு கடிதம் பிரிக்கப்படாமலே கிடந்தது. அது வத்ஸலாவின் பள்ளித் தோழி சுபத்திராவிடமிருந்து வந்தது. சந்தானத்தின் கடிதத்தைக் கண்ட மகிழ்ச்சியில் அவள் அடுத்த கடிதம் ஒன்று இருப்பதைக்கூட மறந்துவிட்டாள்.

ஸ்டெல்லா பூனைக்குட்டியுடன் கொஞ்சிக்கொண்டே மெதுவாக அந்த அறையைச் சுற்றிப் பார்த்தாள். அங்கே 'ஸ்டாண்டி'ல் வைத்திருந்த சந்தானத்தின் படத்தைப் பார்த்தவுடன் அவளுடைய கண்கள் ஒரு விநாடி அதைவிட்டு அகலவில்லை. அருகில் சென்று ஆச்சரியத்தோடு கவனித்தாள். அதற்குள் வத்ஸலாவும் வேற்றுடை உடுத்துத் தன்னை அலங்கரித்துக்கொண்டு தேநீர் சகிதம் உள்ளே நுழைந்தாள்.

"ஏன் வத்ஸலா, இந்தப் படத்தில் இருப்பவர் யார்? உங்கள் அண்ணாவா?"

"இல்லையே! என்ன விஷயம்?" என்றாள் வத்ஸலா அக்கறையுடன்.

"ஒன்றும் இல்லை; எங்கேயோ பார்த்த ஞாபகம் இருக்கிறது. திருச்சியில் படித்தாரோ?"

"ஆமாம்; எங்கே பார்த்திருக்கிறீர்கள்?"

"சரிதான்; அவரேதாம்! என் அண்ணாவுடன் ஒரே வகுப்பில் படித்தவர். மறியல், ஆர்ப்பாட்டம், மாணவர்கள் ஊர்வலம் இவைகளில் எல்லாம் தலைமை வகிப்பார். ஒரு தரம் எங்கள் கல்லூரிக்கே மாணவர்களைக் கூட்டமாய் அழைத்து வந்து, எங்கள் தலைவியுடன் வாதாடிப் பள்ளிக்கூடத்தை மூடச் செய்துவிட்டார்."

"என்னிடம் ஒன்றும் அவர் சொல்லவே இல்லையே!"

“அவர் உங்களுக்கு என்ன வேண்டும்?” என்று கேட்டாள் ஸ்டெல்லா.

“அவர்தாம் என் கணவர்; இப்போது இங்கிலாந்து போயிருக்கிறார் ஐ. ஸி. எஸ். ஸுக்கு” என்றாள் பெருமிதத்துடன், வத்ஸலா.

“உங்கள் கணவரா! உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?”

அப்போதுதான் வத்ஸலாவுக்குத் தான் கல்யாணம் செய்துகொண்டது, தன் சுயமரியாதையைக் கொஞ்சம் குறைத்துவிட்டது என்று தெரிந்தது. ஆனால் மறுகணம் அதை மறந்துவிட்டாள். இதுவரையில் பிரிக்கப்படாமல் மேஜையின்மேல் கிடந்த சுபத்திராவின் கடிதத்தை எடுத்துப் படிக்கத் தொடங்கினாள்.

அந்தக் கவரைக் கிழித்ததும் அதற்குள் ஒரு கல்யாணப் பத்திரிகை, ஒரு புகைப்படம், கடிதம் - இவை மூன்றும் இருந்தன. பத்திரிகையைப் படித்தாள். முகம் மலர்ந்தது. சுபத்திராவுக்குத் திருமணம்! மாப்பிள்ளையின் பெயர் ராமசாமி என்று இருந்தது. ‘ஏது, அந்தப் பழைய பேர்வழியோ?’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டே, படத்தைப் பார்த்துவிட்டுக் கடிதத்தை எடுத்தாள்.

அன்புள்ள வத்ஸலா,

என்னுடைய கல்யாணத்திற்கு உன் வரவையும், என் மாஜி சரித்திர ஆசிரியருடைய வரவையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். அவரை மேல்நாட்டுக்கு அனுப்பப் போவதாக எழுதியிருந்தாயே; அவ்விஷயம் எப்படி இருக்கிறது?

எனக்கு வரப்போகும் மாப்பிள்ளை யார் தெரியுமா? பெயரைப் பார்த்தவுடனேயே நீ தெரிந்துகொண்டிருக்கலாம். ஒரு தரம் நம் இருவருக்கும் இவர் எழுதிய கவிதை ஒன்றைப் பற்றிப் பிரமாதமான வாக்கு

வாதம் நடந்ததே, அதே மனிதர்தாம் இவர். நீகூட அப்போது, 'ஆசாமி ஒல்லியாகக் கண்ணடி போட்டுக் கொண்டு, பார்க்கப் பரிதாபமாக இருப்பார்; இந்தக் காலத்துப் பேனு வீரர்களுக்கே அது அலாதியான தோற்றம்' என்று தீர்மானம் செய்தாய் அல்லவா? அதற்காகத்தான் படத்தை அனுப்பியிருக்கிறேன்.

ஆனல் ஒரு விஷயம்: நாங்கள் திருமணத்திற்கு ஒப்புக்கொள்ளுமுன்பு ஒருவரை ஒருவர் நேரிலோ, படத்தின் மூலமோ பார்த்துக் கொள்ளவில்லை. பரஸ்பரம் முழு நம்பிக்கையோடும், துணிவுடனுந்தான் இரு தரப்பிலும் சம்மதித்தோம். அதன் பின்பு நேற்றுத்தான் அவரை நேரில் பார்த்தேன். என் கனவு வீணுகிவிடாது என்று நம்புகிறேன்.

நீயும் வரப்போகிருய் அல்லவா? வந்தபிறகு எல்லோரும் நிறையப் பேசுவோம்.

உன் அன்புள்ள
சுபத்திரா.

கடிதத்தை முடித்துவிட்டு வத்ஸலா சிரித்துக் கொண்டே படத்தையும் கடிதத்தையும் ஸ்டெல்லாவிடம் கொடுத்து, "பாருங்கள்; என் சிநேகிதிதான் எழுதியிருக்கிருள்; தாராளமாய்ப் பாருங்கள்" என்ருள்.

ஸ்டெல்லா படித்துவிட்டு, "உங்கள் சிநேகிதியின் கணவர், படத்தில் நன்ருகத்தானே இருக்கிருர்? அப்படி ஒன்றும் மோசமாக இல்லையே!" என்று படத்தைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைக் கூறினுள்.

"இந்தக் கடிதம் எழுதியிருக்கிருளே சுபத்திரா, இவள் ஒரு பைத்தியம்; இவளுக்கு வந்து வாய்த்திருக்கிருரே மாப்பிள்ளை, இவரும் ஒரு பைத்தியம். இரண்டும் சரியான ஜோடி!"

ஸ்டெல்லா வத்ஸலாவை ஆச்சரியத்தோடு பார்த்துவிட்டு, "இவரை உங்களுக்கு முன்பே தெரியுமா?" என்ருள்.

“அவளுக்கே தெரியாதே; எனக்கு எப்படித் தெரியும்? இவர் ஒரு கவியாம். பத்திரிகைகளில் நிறையக் கவிதை கட்டுரை எழுதி வருகிறார். அவைகளை இவள் ஒன்றுவிடாமல் படித்துக்கொண்டு வந்தாள். அந்தப் படிப்பின் கோளாறுதான் இந்தக் கல்யாணம். அப்போதே இந்த மனுஷரைப் பற்றி அவள் அபாரமாகப் புகழ்ந்தாள். ‘அப்படி எழுதுகிறார்; இப்படி எழுதுகிறார்; டாகுருக்கு வாரிசு இவர்’ என்றெல்லாம் பெருமைப் பட்டுக்கொண்டாள். அவர் எழுதிய பாட்டுக்கு அபூர்வமான வியாக்கியானங்கள் செய்தாள்......”

“நானுந்தான் பல பத்திரிகைகளைப் படிக்கிறேன். இவர் பெயரைப் பார்த்ததே இல்லையே” என்று தன் வீட்டிற்கு வரும் எண்ணற்ற ஆங்கிலப் பத்திரிகைகளின் பெயர்களை ஸ்டெல்லா அடுக்கினாள்.

“இவர் தமிழில் அல்லவா எழுதுகிறார்?” என்றாள் வத்ஸலா.

“தமிழிலா? அதுதானே பார்த்தேன்!” என்று ஒரு மாதிரியாகக் கூறினாள் ஸ்டெல்லா. அந்தக் குரலில், அவர்களுடைய அந்தஸ்துக்குத் தமிழ் தகுதியல்ல என்னும் நினைவு ஒலித்தது. ஸ்டெல்லாவின் குற்றமல்ல அது. அவளுடைய பெற்றோர்களே, தாங்கள் தமிழர்கள் என்பதை எப்போதோ முற்றும் மறந்துவிட்டார்கள். அவர்கள் மதம், மொழி, நாகரிகம், பழக்க வழக்கம் எல்லாம் மேற்கத்தி'ய பாணியிலேயே இருந்தன. மேற்கத்தியார் இங்கு இல்லாவிட்டால் மற்றவர்களால் வாழ்க்கையே நடத்த முடியாது என்ற எண்ணம் கொண்டவர் அவள் தந்தை.

ஸ்டெல்லா தங்களுடைய மேற்கண்ட குடும்பப் பெருமைகளைச் சொல்லிவிட்டு, “என்னுடைய ஐந்து வயசுத் தம்பி மைக்கேல் என்ன மணி மணியாய் இங்கிலீஷ் பேசுவான் தெரியுமா?” என்றாள்.

வத்ஸலாவும் அந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு தங்கள் வீட்டைப் பற்றித் தொடங்கினாள். அந்த நாகரிகத்தை முழுக்க முழுக்க இங்கே நிலைநாட்டுவதற்காகத் தான் தன் கணவனைக்கூட ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்திருப்பதாகத் தெரிவித்தாள். அவன் திரும்பி வந்தவுடன் தான் நிறைவேற்றப் போகும் திட்டங்களையும் வெளியிட்டாள். ஆனால் உண்மையில் சந்தானத்திற்கு மேல்நாடு எப்படி இருந்தது? அவன் அதை எத்தகைய உணர்ச்சியோடு அனுபவித்தான்?

# 7

சந்தானம் ஐரோப்பாவைப் பற்றி, முக்கியமாக இங்கிலாந்தைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறான்; எவ்வளவோ படித்திருக்கிறான். ஆனால் அந்தப் படிப்பிலும் கேள்வி ஞானத்திலும் அவன் மனசில் உருவாகியிருந்த கற்பனைப் பிரதேசத்திற்கும், இப்போது கண்ணெதிரே காணும் உண்மைப் பிரதேசத்திற்கும் எத்தனை வித்தியாசம்!—இதுதானா இங்கிலாந்து?

'வளர்ந்து வரும் மனித நாகரிகத்தின் சின்னம் அந்த நாடுதான்; அதன் விஞ்ஞானப் பெருக்கையும், வாழ்க்கையின் ஒழுங்கு, கட்டுப்பாடு, சுத்தம், சுகாதாரம் ஆகியவற்றையும் நாம் பின்பற்ற வேண்டும். கால வேகத்தை வெல்லும் வழிகளில் அது தேர்ச்சி பெற்றிருக்கிறது; அதை நாம் புறக்கணிக்கக் கூடாது. புறக்கணித்தோமானால் என்றென்றும் பிற்போக்காளர்களாகவே இருந்து மீளா அடிமைத்தனத்தின் ஆழத்திற்குப் போக வேண்டியதுதான்' என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறானே, சந்தானம்; அந்த நாடுதானா இது? ஆம், இப்போதுகூட அந்த எண்ணத்தில் மாறுதல் இல்லைதான். ஆனால்?

அவர்களுடைய ஒழுங்கும் கட்டுப்பாடும் அவர்களுக்குள் மட்டுந்தானா? அவர்களுடைய விஞ்ஞான வளர்ச்சி அவர்களது சுயநலனைக் காப்பாற்ற மட்டிலுமா? கீழ்நாட்டானிடம் சர்வ சாதாரணமாய்க் காணப்படும் அன்பும், இரக்கமும், வருவோரை உபசரிக்கும் குணமும் அவர்களுக்கு இயற்கையாகவே குறைவுதாமா? தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் தாராளமாய்ப் பழகிக்கொள்வதுபோல்

அவர்கள் ஏன் அன்னியரிடம் பழகுவதில்லை? தங்களுக்கென ஏற்படுத்திக்கொண்ட உயர்ந்த பீடத்திலிருந்து தான் மற்றவனிடம் பழகவேண்டும் என்பது அவர்கள் நாட்டின் சட்டமா?

காலையில் படுக்கையிலிருந்து எழுந்த சந்தானத்திற்கு முதல் முதலாக இத்தகைய நினைவுகளே வந்தன. போர்வையை எடுத்து வெறுப்போடு எறிந்துவிட்டு ஜன்னல்வழியே பார்த்தான். இரவு முழுவதும் இடைவிடாமல் பனி பெய்ததால், அவை கட்டிடங்களின் மேலும், மொட்டை மரங்களின்மீதும் ஒட்டிக்கொண்டிருந்தன. தும்பைப் பூப்போல் எங்கும் ஒரே வெள்ளைமயமாய்க் காட்சியளித்த அந்தப் பனித் தோற்றத்தைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

நேரம் ஆக ஆகச் சூரியன் ஒளி மெல்ல மெல்லப் படரத் தொடங்கியது. உறைபனியும் லேசாக உருகிச் சொட்டுச் சொட்டாய் உதிர்ந்தது. சந்தானம் இன்னும் அவ்விடத்திலேயே இருந்து தெருவில் நடமாடும் ஜனங்களைப் பார்த்துக்கொண் டிருந்தான். இதே விதமாக அவனுக்குப் பல காலைநேரங்கள் நினைவுச் சிக்கல்களிடையே கழிந்திருக்கின்றன; என்றாலும் இன்றை நிலைமை மற்றத் தினங்களைவிட வெகு மோசமாக இருந்தது.

இதற்கு முன்தினம் மாலை நடந்த சம்பவம் அவனைத் தீயாய்க் கருக்க, அவன் அதனால் துடித்துக்கொண்டிருந்தான்.

சந்தானமும் அவனுடைய இந்திய நண்பன் ஒருவனும் மாலையில் ஒரு ஹோட்டலுக்குள் நுழையப் போனார்கள். எதிரே வந்த இரண்டு சீக்கியச் சிப்பாய்கள் இவர்களை உற்றுப் பார்த்துவிட்டு, "நீங்கள் இந்தியர்கள் தாமே?" என்று கேட்டுவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் இவர்கள் கரத்தைப் பற்றினார்கள். சிப்பாய்களுடைய

கரங்கள் துடித்துக்கொண் டிருந்தன. அவர்கள் கண் களில் ரோஷம் பொங்கியது.

"வாருங்கள்; உள்ளே நுழைந்து அவமானப்பட வேண்டாம். நாங்கள் பட்டது போதும்!" என்று சந்தா னத்தையும், மற்றவனையும் பற்றி அழைத்துக்கொண்டு தெருவில் நடந்தார்கள்.

தன் அறைக்கு அவர்களைச் சந்தானம் அழைத்து வந்ததும், அவர்களில் ஒருவன் ஆத்திரம் தாங்காமல் குமுறினான்.

"நாங்கள் பட்டாளத்தில் சேர்ந்து பல வருஷங்கள் உழைத்தாகிவிட்டது. போர்க்களங்களில் பாய்ந்த குண்டு களின் தழும்புகள் இன்னும் உடம்பிலிருந்து மறைய வில்லை. எங்கள் சகோதரர்கள் எத்தனையோ பேரை அதற்காகப் பறி கொடுத்தோம். பெண்டு, பிள்ளை, உற் றார், உறவினரை யெல்லாம் விட்டுத் தேசந் தேசமாய் அலைந்தோம். எங்கள் சேவையை இவர்கள் வாயாரப் புகழ்ந்தார்கள். பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் எழுதி னார்கள். இதோ எங்களுடைய வீரத்திற்குப் பரிசும் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பதக்கந்தான்; சேனை வீரர்களுக்குக் கொடுக்கும் பரிசுகளில் தலைசிறந்ததாம்!"

இப்படிச் சொல்லிவிட்டு அவன் தன் தோள்பட்டை யைக் காண்பித்து, "பாருங்கள் இதை; இதுதான் வீரத் திற்குப் பரிசு!" என்று ஒரு பதக்கத்தைக் காண்பித் தான்.

காண்பித்துவிட்டுப் பயங்கரமாக இடி இடியென்று நகைத்தான்.

"வீரத்திற்குப் பரிசு இதுவல்ல; 'வெளியே போ' என்ற அவச் சொல்!"

சந்தானம் பெருமூச்சு விட்டான். அவன் மேலே தொடர்ந்து பேசினான்:

"காசு கொடுத்துச் சாப்பிட அந்த ஹோட்டலில் நுழைந்தோம். நேற்றுப் பிறந்த ஒரு வெள்ளைச் சிறுமி எங்கள் நிறத்தைப் பார்த்துவிட்டு எங்களுக்குப் பரிமாற மறுத்தாள். ஹோட்டல் முதலாளியும் அதை ஆமோதித்தான். நாங்கள் வெளியேறினோம்.—உலக சுதந்தரத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும் நாங்கள் போராடப் போவதாக, எங்களுக்கு உணர்ச்சி ஊட்டினார்கள். இதுதான் உலக சமத்துவத்தின் அடையாளம் போலும்!

"சிந்து நதிக்கரையின் மணற் பரப்பைப் பார்த்து நிற்கும் எங்கள் குடிசைகளின் ஞாபகம் எனக்கு வருகிறது. அங்கே, விறகு வெட்டிச் சீவனம் செய்தாவது எவனுக்கும் தலை பணியாமல் இருக்கலாமல்லவா? அந்தக் குடிசைகளைத் தரைமட்டமாக்கி, எங்களை அவமதிப்போருக்கு அடுக்கு மாளிகை கட்ட அல்லவா நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்?"

அறைச் சுவர்களின் நான்கு மூலைகளினின்றும் தீ, கொழுந்து கொழுந்தாய்ப் படர்ந்து எரிந்தது. அவ்வளவு குளிரிலும், அவர்கள் உள்ளம் வெந்து சாம்பலாகிக் கொண்டிருந்தது.

* * *

சந்தானம் முடிவுக்கு வந்தான். இங்கே மாத்திரம் அல்ல, உலகம் முழுவதிலுந்தான் நிறத் திமிரும், சாதித் திமிரும், பணத் திமிரும் தாண்டவமாடுகின்றன. ஒன்று, உலகம் இவை யாவற்றினின்றும் விடுதலை பெற்றுப் புனர்ஜன்மம் எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் என்றென்றும் தலையெடுக்க முடியாதபடி அழிந்துவிட வேண்டும்.

# 8

'ஏன் இப்போதெல்லாம் அவரிடமிருந்து வரும் கடிதங்கள், அவருடைய முதற் கடிதத்தைப் போல் இல்லை? அத்தனை உருக்கமாய் எழுதிய அதே மனிதரா இப்போது இப்படி எழுதுகிறார்? இருக்கட்டும்; இந்தக் கடிதத்தில் நான் சுடச் சுடப் பதில் அளிக்கிறேன்: "நீங்கள் எனக்கு எழுத ஆரம்பிக்குமுன், கடிதத்தை உங்கள் **மனைவி வத்ஸலாவுக்கு** எழுதுவதாக ஒரு தடவைக்கு ஒன்பது தடவை ஞாபகப்படுத்திக்கொண்டு எழுதுங்கள். வத்ஸலா பத்திரிகை ஆசிரியரல்ல. வேண்டுமானால் இக்காலத்துச் சம்பிரதாயப்படி நீங்களும் உங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்தைப்பற்றி ஒரு புத்தகம் எழுதிப் பிறகு வெளியிடலாம். அதை நான் நிதானமாகப் படித்துக் கொள்கிறேன். நான் உங்கள் மனைவி! இங்கிலாந்தைப்பற்றியும், இந்தியாவைப் பற்றியும் நீண்ட கட்டுரைகள் எனக்குத் தேவையில்லை. வேண்டியவை **என் கணவரின்** கடிதங்கள்தாம்" என்று எழுதுகிறேன்!'

வத்ஸலாவின் கோபம் மேலும் அதிகரித்தது. 'ஒன்றும் எழுதத் தெரியாதவராக இருந்தால், போகிறது; ஆனால் அவரது முதற் கடிதத்தில்தான் அன்பை ஒரேயடியாய் அள்ளிக் கொட்டியிருக்கிறாரே! அப்படிப்பட்டவருக்கு ஏன் அதன் பின்பு அம்மாதிரி எழுத மனமில்லை? ஒரே அழுகையும் ஓலமும் கோபமுமாக இருக்கின்றனவே. யார் எப்படிப் போனால் இவருக்கு என்ன? உலகத்தில் ஆயிரம் கோளாறுகள் இருக்கும்; அதற்காக இவர் ஏன் வீணில் கவலைப்படுகிறார்? இருப்பதைப் பார்த்தால், படிப்பில்கூட அக்கறை கொள்ள மாட்டார்

போலிருக்கிறதே! இந்தப் பதிலில் அவசியம் அதை ஞாபகப் படுத்தவேண்டும்.'

இந்தச் சமயத்தில் ஸ்டெல்லா சிறுநோட்டு ஒன்றைக் கையில் எடுத்துக்கொண்டு துள்ளிக் குதித்து ஓடி வந்தாள். அவள் உடலெங்கும் ஒரே சந்தோஷமும் பூரிப்பும்.

"இங்கே பாருங்கள் வத்ஸலா: இருபத்தைந்து அங்கத்தினர்கள்! இந்த இருபத்தைந்து பேர்களை இரண்டு நாளைக்குள் சேர்த்துவிட்டேன். அதனால்தான் இந்தப் பக்கம் நான் வரவே இல்லை. இதை நீங்கள் கொஞ்சமாவது எதிர்பார்த்தீர்களா?"

"எங்கே, கொடுங்கள்" என்று வத்ஸலா ஆவலோடு வாங்கிப் படித்தாள். "இருபத்தைந்து பேர் போதுமா?"

"இன்னும் எத்தனை பேர் வேண்டுமானாலும் சேர்த்துக்கொள்ளலாம். முதலில் ஆரம்பிக்க வேண்டியதுதான் தாமதம். அப்புறம் பாருங்களேன். யாரைச் சேர்த்துக் கொள்வது, யாரை வேண்டாமென்று சொல்வது என்பதைப் போன்ற பிரச்னை வரப் போகிறது! சமாசாரம் வெளியில் பரவியவுடன் எத்தனை பேர் தாங்களாகவே முன் வருவார்கள் தெரியுமா?"

"நீங்கள் வெளியூரிலிருந்து வந்திருந்தாலும், இந்தக் காரியத்தை இவ்வளவு சுலபமாக முடித்துவிட்டீர்களே!"

"ரொம்பப் பிரமாதமான காரியம்! அது இருக்கட்டும்; நாளைச் சாயந்தரம் சரியாக ஐந்து மணிக்கு எல்லோரையும் இங்கே வரச் சொல்லி யிருக்கிறேன். தலைமை வகிப்பதற்கு, சப் கலெக்டர் சம்சாரத்திடமும் சொல்லி யாகிவிட்டது. அவரும் ஒப்புக்கொண்டார். இனி நிமிஷங் கூடத் தாமதிப்பதற்கில்லை; ஆகவேண்டியதைச் செய்ய வேண்டும்" என்றாள் ஸ்டெல்லா.

" ஆகவேண்டியதென்ன ?- லக்ஷ்மீ ! அம்மாவிடம் சொல்லி நாளைக்கு மாலை இருபத்தஞ்சு பேருக்கு ரொட்டியும் டீயும் தயாராக வேணுமென்று சொல். லேடீஸ் கிளப் ஆரம்பம். அதனாலே அம்மாவையே நேரில் இருந்து கவனிக்கச் சொல்" என்று லக்ஷ்மியிடம் உத்தர விட்டாள் வத்ஸலா.

மறுநாள் அரை மணி முன்னதாகவே வத்ஸலாவின் பங்களாவுக்குக் கார்களும் வண்டிகளும் வந்த வண்ண மாக இருந்தன. சரியாக மணி ஐந்து அடித்தபோது, அந்த இருபத்தைந்து அங்கத்தினர்களும் தங்கள் குழந் தைகுட்டிகளுடன் அங்கே காட்சி யளித்தனர் ஸ்டெல்லா ஒவ்வொருவராய் வத்ஸலாவுக்கு அறிமுகப்படுத்தி வைத் தாள். பின்பு அன்று தலைமை வகிப்பவரிடம் வத்ஸலா வைப்பற்றிய முழு விவரமும் தெரிவித்தாள்.

இடையில் சிற்றுண்டிப் பிரச்னை குறுக்கிடவே வத்ஸ லாவும் ஸ்டெல்லாவும் தனிமையில் மந்திராலோசனை செய் தனர்.

" என்ன ஸ்டெல்லா, இருபத்தைந்து பேர் என்று சொன்னீர்கள் ; எழுபத்தைந்து பேருக்குக் குறையாது போலிருக்கிறதே !"

"என்ன செய்வது ? எனக்குக் குழந்தைகளைப் பற் றிய நினைவே அப்போது வரவில்லை. இப்போதுதான் என்ன ? அவசரமாய்க் காரை அனுப்பி, ஹோட்டலி லிருந்து இன்னும் ஐம்பது பேருக்குத் தயார் செய்து விட்டால் போகிறது."

கூட்டத்தின்போது அதன் தலைவி வத்ஸலாவைப் பற்றி நாலு வார்த்தைகள் புகழ்ந்து பேசினாள் :

" வத்ஸலாவின் இடைவிடாத முயற்சியாலும், பேரு பகாரத்தாலுந்தான் இந்தக் கிளப் ஆரம்பமாகிறது. வத்ஸலா ராவ்பகதூர் சிவஞானம் பிள்ளையின் புத்திரி

மட்டுமல்ல; சீக்கிரம் என்னைப் போல, ஒரு கலெக்டரின் மனைவியாக வரப்போகிறவர்.''

இதைச் சொல்லும்போது அங்கிருந்த தாசில்தார் சம்சாரம், சப் மாஜிஸ்டிரேட் சஹதர்மிணி, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மனைவி எல்லோரும் ஒரே சமயத்தில் வத்ஸலாவைக் கூர்ந்து கவனித்தார்கள். வத்ஸலாவின் முகம் நாணத்தால் கவிழ்ந்தாலும், உடனே சற்றுக் கர்வத்தால் உயர்ந்தது.

விடை பெற்றுக்கொண்டு அவரவர்கள் வீடு திரும்பியவுடன் வத்ஸலா, "என்ன ஸ்டெல்லா, நீங்கள் பொறுக்கி எடுத்திருக்கும் ஒவ்வொருவருக்கும் நாற்பது வயசுக்குக் குறையாது போலிருக்கிறதே! நம்மைப் போல் பத்துப் பேர்களாவது இருப்பார்களென்றால், ஒருவரைக்கூடக் காணோமே. இவர்களையும், இவர்கள் திரட்டிவரும் குழந்தைப் பட்டாளத்தையும் வைத்துக் கொண்டு பார்த்துக்கொள்ள யாரால் ஆகும்? என்னவோ எல்லாம் உங்கள் பொறுப்புத்தான்'' என்றாள்.

"உங்களுக்கு இதெல்லாம் தெரியாது, வத்ஸலா. நாற்பதுவயசுக்காரர்களைப்பற்றியேபிரமாதப்படுத்துகிறீர்களே; இன்னும் பெரிய பெரிய பாட்டிகள் வருவார்களே, அப்போது என்ன செய்வீர்கள்? அவர்களுக்கு இதில் இருக்கும் உத்ஸாகம் நமக்கு நூற்றில் ஒன்று இருந்தால் போதுமே!''

வத்ஸலாவுக்கு என்னவோபோல் இருந்தது. என்றாலும் ஸ்டெல்லாவினால் அவளுக்கு அன்றைக்கு எத்தகைய பெருமை! இதை நினைத்து அவள் சும்மா இருந்து விட்டாள்.

மேலும் குழந்தைகள் விஷயத்திலிருந்து தங்களைப் பாதுகாக்க ஸ்டெல்லா ஒரு மணியான யோசனையைச் சொன்னாள்: "தோட்டக்கார முத்துசாமியிடம் அவர்

களை ஒப்பித்து, அவர்களுக்கென்று கொஞ்சம் விளையாட்டுச் சாமான்கள் வாங்கிப் போட்டுவிடுவது. ஒரு பக்கத்தில் லேடீஸ் கிளப்பும், மற்றப் பக்கம் குழந்தைகள் கிளப்பும் நடக்கட்டுமே!"

ஆனால் நடைமுறையில் வரும்போது குழந்தைகள் கிளப் ரணகளமாகத்தான் இருந்தது. பந்தையும் பொம்மைகளையும் விட்டு அவர்கள் தங்கள் தங்கள் மனப் போக்குப்படி விளையாட ஆரம்பித்தார்கள்.

"அடுத்தாத்து மூஞ்சூறு என் கண்ணிலே மண்ணைப் போட்டானம்மா!"

"லச்சுமிச் சிறுக்கி என் காதைக் கிள்ளி ரெத்தம் வறது மாமி!"

"சோமுப் பயல் கத்தரியாலே என் சடையைக் கத்தரிச்சுட்டான் பாட்டி!"

இம்மாதிரியான புகார்கள் இடைவிடாமல் வந்து கொண்டிருந்தன. கிழட்டு நியாயாதிபதியான முத்துசாமியை எந்தக் குழந்தையும் சட்டை செய்வதாக இல்லை.

௭

தோட்டத்தில் வத்ஸலா வைத்து வளர்த்த சீமைக் கொன்றை மரம் மளமளவென்று வளர்ந்து, கொத்துக் கொத்தாய்ப் பூக்கத் தொடங்கியிருந்தது. மரத்தின் மேற்பரப்பு முழுவதும் ஒரே புஷ்பக் கொள்ளை. வெள்ளை, சிவப்பு, ஊதா - எத்தனை எத்தனையோ நிறம் அந்த மலர்க் குவியலில்.

வத்ஸலா அந்த அழகில் மயங்கியவாறே சிந்தனை வெள்ளத்தில் பூரிப்போடு நீந்திக்கொண் டிருந்தாள். அவளுடைய அறைக் கதவைத் திறந்தவுடன் முதல் முதலாக அவள் கண்ணில் படும் காட்சி அந்தக் கொன்றை மரந்தான்.

அதுவும் காலைக் கதிரொளி அம்மரக் கிளைகளூடே துள்ளி விளையாடத் தொடங்கிவிட்டால் இன்பத்திற்குச் சொல்ல வேண்டியதே இல்லை.

'அவர் இங்கே வந்தவுடன் இந்த மரத்தைப் பார்த்து எவ்வளவு ஆச்சரியமும் ஆனந்தமும் கொள்வார்! அவர் போகும்போது அங்கே ஒரு பவழமல்லிகைச் செடியல்லவோ நின்று, தன் சகிக்க முடியாத வாசனையால் தலைவலியைக் கொடுத்துக்கொண் டிருந்தது? இது சீமைச் செடியல்லவா? அதனால்தான் இந்திய மண்ணில் இவ்வளவு சீக்கிரம் கொழுத்து வளர்கிறது!'

அந்தக் குதூகலமான சூழ்நிலையும், முந்திய தினம் அவள் அறிந்துகொண்ட சந்தோஷச் செய்தியும் அவளை ஓர் அபூர்வமான பகற் கனவு காண வைத்தன.

'சந்தானமும் அவளும் உல்லாசமாக அந்தத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து வருகின்றனர். தான் வைத்து

வளர்த்த ஒவ்வொரு செடியின் பூர்வோத்தரத்தைப் பற்றியும் அவள் விஸ்தாரமாக அவனிடம் சொல்கிருள். அவனும் தான் மேல்நாட்டில் பார்த்த செடிகொடிகளைப் பற்றியும், புல் பூண்டுகள், பறவை மிருகங்களைப் பற்றியும் சொல்கிருன். இருவரும் இப்படித் தங்களுடைய இடைக்கால அனுபவங்களைப் பரிமாறிக்கொண்டே அந்தக் கொன்றை மரத்தடி நிழலில் உள்ள சிமெண்டுக் கிராதியில் உட்காருகின்றனர். அதே சமயம் மெல்லிய காற்று வந்து மரத்தை அசைத்து இருவர் மேலும் பொலபொல வென்று புஷ்பமாரி பெய்கிறது. "பார்த்தீர்களா கலெக்டர் ஸார், என்னுடைய கொன்றை மரம் உங்களை எப்படி ஆனந்தத்தோடு வரவேற்கிறதென்று!" என அவன் தோளைப் பற்றிக்கொள்கிருள்.'

வத்ஸலாவின் இளம் இருதயம் இந்தக் கற்பனைகளையெல்லாம் மிஞ்சி இன்னும் மேலே மேலே தாவிக்கொண்டிருந்தது. தோட்டத்துச் செடிகளின் தனித் தனி அசைவிலும் அவள் தன் நெஞ்சின் நர்த்தனத்தைக் கண்டாள். 'ஆஹா! நானும் அவருமே இனி அலாதிப் பிறவிகள் தாம். கூட்டங்களென்ன, விருந்துகளென்ன, பேச்சுக்களென்ன - புகழ் மாலைகள், மலர் மாலைகள், விதம் விதமான விழாக்கள்! ஆம், அவர் கலெக்டர்; நான் அவர் மனைவி!'

படுக்கையில் சாய்ந்திருந்தவள் குதித்துக்கொண்டே எழுந்து ஓடினாள். சந்தானத்தின் படம் ஸ்டாண்டிலிருந்து அவளைப் பார்த்துச் சிரித்தது. "இதோ பாருங்கள் ஸார், ஏன் சிரிக்கிறீர்கள்? என்னவோ 'அவன் கஷ்டப்படுகிருன்; இவன் கஷ்டப்படுகிருன்' என்று கன்னபின்னாவெனக் கடிதம் எழுதினாலும், காரியத்தில் மட்டும் கண்ணாய்த்தான் இருந்திருக்கிறீர்கள். உலகத்துக்காக ஒரு மூச்சு அழுதுகொண்டே, அதே சமயம் பரீக்ஷையை

விடாமல் தேர்ச்சி பெற்றுவிட்டீர்களே! - நீங்கள் மட்டும் நேற்றுச் சாயங்காலம் இங்கு இருந்திருக்கும் பக்ஷத்தில், அடடா! உங்களைப் பற்றியும் உங்கள் வத்ஸலாவைப் பற்றியும் என்ன பெருமைப்பட்டிருப்பீர்கள் தெரியுமா? நீங்கள் தேர்ச்சி பெற்றதற்காக நான் நேற்று நடத்திய விருந்தின்போது, நம்மைப் பற்றிப் புகழ்ந்த புகழ்ச்சி... அப்பப்பா! உங்களை நேரில் பார்த்திராதவர்களெல்லாம், உங்களைப் பற்றிக் கொஞ்சமும் கேட்டிராதவர்களெல்லாம் உங்களை எப்படி யெல்லாம் தூக்கிவைத்துப் பேசினார்கள் தெரியுமா? இந்த ஸ்டெல்லா இருக்கிறாளே, ரொம்ப மோசம் போங்கள். நாம் இருவரும் எடுத்துக் கொண்ட படத்தைப் போய் ஒவ்வொருவரிடமாகக் காண்பிக்கத் தொடங்கிவிட்டாள். கேட்பானேன்? மீனுப் பாட்டிகூட, 'பையனின் முக விலாசத்தைப் பார்த்ததி லிருந்தே அவனுடைய சூட்டிகை நன்றாய்த் தெரிகிறதே. இந்த உத்தியோகந்தானா அவனுக்குப் பெரிது? இதை விடப் பல மடங்கு உயர்ந்த பதவி அவனுக்குக் காத்துக் கிடக்கிறதே' என்றார்."

கதவைப் படபடவென்று தட்டும் சத்தம் கேட்டது. உடனே வத்ஸலா தன் பேச்சை நிறுத்திக்கொண்டு, உடையைச் சரிப்படுத்தியபின் கதவைத் திறந்தாள். அங்கே ஸ்டெல்லாதான் பிரசன்னமாகி யிருந்தாள்.

" இப்பொழுது உங்களுக்கு வேறு ஒன்றும் வேலை இல்லையே; அவகாசந்தானே?"

" ஆம், உள்ளே வாருங்கள் " என்றாள் வத்ஸலா.

" இல்லை; நான் முன்பே சொன்னேன் அல்லவா? அண்ணா ஊரிலிருந்து வந்திருக்கிறார். இதோ வெளி அறையில் உட்காரச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். வாருங்கள், ஐந்து நிமிஷம் பேசிக்கொண் டிருந்துவிட்டு வரலாம் " என்றாள்.

வத்ஸலா லக்ஷ்மியிடம் தேநீருக்குச் சொல்லிவிட்டு வெளி அறைக்கு வந்தாள்.

ஸ்டெல்லாவின் தமையன் தர்மஸ் அவளைப் போலவே அழகாக இருந்தான். கச்சிதமாக உடை உடுத்திருந்தான். அடக்க ஒடுக்கமான குணம்; மரியாதையான சுபாவம்.

இனிமையாகப் பேசுவதற்கும் தெரிந்து வைத்திருந்தான். தானும் சந்தானமும் வகுப்பில் படித்த நாட்களின் ஞாபகங்களை யெல்லாம் சொன்னான். அப்போதே சந்தானம் எல்லா விஷயங்களிலும் முன்னுக்கு நின்றதாகவும், அவனைப் பிடிக்காத ஆசிரியர்கள்கூட அவனை மெச்சியதாகவும் கூறினான்.

கூறிவிட்டு, "அவர் ஐ. ஸி. எஸ். படிக்க ஒப்புக் கொண்டதும், இப்போது படித்துத் தேர்ச்சி பெற்றதும் எனக்கு ஒரே வியப்பாக இருக்கின்றன. இந்தப் படிப்பு அவருக்கு வேப்பங்காய்ச்சே!" என்றான்.

"அந்த வேப்பங்காயைத்தான் வத்ஸலா அவருக்குத் தேன் அமுதமாய் மாற்றிக் கொடுத்திருக்கிறார். எல்லாம் இவர் ஏற்பாடுதான்" எனக் குறுக்கிட்டாள் ஸ்டெல்லா.

மத்தியில் தபால் சேவகன் வந்து அன்றைத் தபாலைக் கொடுத்துவிட்டுப் போனான். அதில் சந்தானத்தின் கையெழுத்துள்ள கவர் ஒன்று இருக்கவே, அதை மட்டிலும் வேகமாக எடுத்து உடைத்தாள் வத்ஸலா.

அதைப் படித்தபோது அவள் கரம் நடுங்கியது; கண்களைக் கருந்திரை ஒன்று மறைத்தது; அவள் மூச்சு விட முடியாமல் தடுமாறினாள். அவள் முகத்தில் ஏற்படும் கோர மாறுதல்களைப் பார்க்க, ஸ்டெல்லாவுக்கும் அவள் தமையனுக்கும் என்னவோபோல் இருந்தது.

"மன்னியுங்கள்" என உயிரற்ற குரலில் சொல்லி விட்டு, நினைவு பிசகியவளைப் போல் நாற்காலியினின்று அலங்கோலமாய் எழுந்தாள் வத்ஸலா. அறையில் அவள் தடாலென்று படுக்கையில் விழுந்த சத்தம் வெளியே கேட்டது.

ஜன்னலுக்கு வெளியே தோட்டத்தில் கொன்றை மரத்தைச் சுற்றிலும் ஒரே சூறாவளி. அதில் அகப்பட்டு அதன் இலை, கிளை, தளிர், மலர் எல்லாம் பட்டாதபாடு பட்டன. அதன் வேகம் அறைக்குள்ளும் புழுதியைக் கொண்டு கொட்டியது.

அந்தக் கடிதத்தில் இருந்த விஷயம் இதுதான் :

அன்புள்ள வத்ஸலா,

சென்ற கடிதத்தில் என்னுடைய பரீக்ஷையின் வெற்றியைக் கேட்ட நீ, இதைப் படித்தவுடன் ஒரே யடியாய் மனங் கலங்கிப்போவாய். நன்றாகச் சிந்தனை செய்து பார்: கொஞ்சமும் கவலைப்படக் காரணமில்லை. விவரமாய் நான் உனக்கு நேரில் சொல்கிறேன். அது வரையில் மனதைக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதே.

உன்னுடைய வருத்தத்திற்கும், இன்னும் பலரு டைய பெருத்த ஏமாற்றத்திற்கும் காரணமான நிலையில் நான் அங்கு வருவேன். இதை என்னால் தவிர்க்க முடிய வில்லை.

நான் சந்தானம் ஐ. ஸி. எஸ். அல்ல. வெறும் சந் தானந்தான். அவர்கள் கொடுத்த பட்டத்தை அவர்கள் தேசத்திலேயே விட்டுவருகிறேன்.

அன்பு,

சந்தானம்.

# 10

அணையை உடைத்துக்கொண்டு பிரவகிக்கும் புது வெள்ளம் போல், பெருக்கெடுத்த அன்போடு சந்தானம் கப்பலை விட்டு இறங்கியதும் பம்பாய்த் துறை முகத்தில் வத்ஸலாவைத் தேடினன். இத்தனை நாட்களாய் மேல்நாட்டின் ராக்ஷச் வேகத்துடன் போட்டி போட்டு ஓடிக்கொண்டிருந்த அவன் மனம், அதே வேகத்துக்குக் கொஞ்சமும் பின்வாங்காமல் வத்ஸலாவின் பின்னே ஓடியது. அவனுடைய கனவு, கற்பனை, பரபரப்பு, துடிதுடிப்பு எல்லாம் இப்போது ஒரே ஒருத்தி தான் : வத்ஸலா ! அவள் எங்கே ?

அவன் அவளைத் தேடினன் ; கண்களை அகல விரித்துக் கூட்டத்துக்குள்ளே துழாவினன் ; அங்கே சூழ்ந்திருந்த எண்ணற்ற பெண்களின் முகத்தை ஏறிட்டு ஏமாந்தான்.

'எங்கே வத்ஸலா ? அவள் வரவே இல்லையா ? வரும் தேதியைக் குறிப்பிட்டுக் கடிதம் எழுதியிருந் தோமே; கிடைக்கவில்லையா ? இல்லை, இந்தக் கூட்டத்தில் எங்காவது கலந்து நம்மைப் போல் தேடிக் கொண் டிருக்கிருளா ? கூட்டமும் கொஞ்சங் கொஞ்சமாய்க் கலைந்துவிட்டதே. மாமாவைக்கூடக் காணுமே !'

அவனுக்குத் தெரியாமல் சில ரகசியப் போலீசாரும், அவனைக் காண ஆவல் கொண்டிருந்த சில பத்திரிகை நிருபர்களும், நண்பர்களும் அவனைச் சூழ்ந்துகொண்டனர். நிருபர்களின் கேள்வி அம்புகள் புறப்பட்டன.

" தாங்கள் ஏன் ஐ. ஸி. எஸ். பட்டத்தைத் துறந்தீர்கள் ?"

" தங்களுக்கு மேல்நாட்டைப்பற்றி என்ன அபிப் பிராயம்?"

" அவர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்?"

" தங்களுடைய எதிர்காலத் திட்டம் என்ன?"

சந்தானத்தின் நினைவுகள் அடியோடு மாற்றமடைந் தன. அவன் தான் பட்டத்தைத் துறந்ததுபற்றி இங் கிலாந்தில் ஒன்றும் வெளியிடவில்லை. அப்படி வெளியிட் டால் அது அவன் நோக்கத்திற்குப் பங்கம் விளைவிக்கு மெனத் தெரிந்ததால், கேட்போருக்கெல்லாம் மௌனம் சாதித்துவிட்டான். பம்பாய் மண்ணில் காலடி எடுத்து வைக்கவே, இன்னும் அவனால் அதை ரகசியமாய் வைத் துக் கொண்டிருக்க முடியவில்லை. மனதைத் திறந்து எல் லாவற்றையும் கொட்டிவிட்டான்.

கொட்டியபின் நண்பர்களின் வேண்டுகோளுக்குச் சமாதானம் சொல்லிவிட்டு வத்ஸலாவைக் காணப் புறப் பட்டான். தான் அங்கு வரும் வண்டியைக் குறித்து ஒரு தந்தியும் கொடுத்திருந்தான்.

ஸ்டேஷனுக்கு ராவ்பகதூர் மாத்திரம் வந்திருந்தார். அவருடைய முகத்தை உற்றுப் பார்த்ததுமே சந்தா னத்திற்குத் திக்கென்றது. எதையோ முக்கியமான ஒன்றைப் பறி கொடுத்தவர் போல் காணப்பட்டார். " வாருங்கள் " என்று அவர் அழைத்த குரல், தன் பழைய கம்பீரத்தை இழந்து அதல பாதாளத்திலிருந்து ஒலிப்பதுபோல் இருந்தது.

" வத்ஸலா எங்கே?"—ஆத்திரத்தோடு இந்தக் கேள்வியைக் கேட்டான் சந்தானம். வருஷக் கணக்கைத் தாண்டிச் சீறும் புயல் அல்லவா இந்தக் கேள்வி?

" வத்ஸலாவா?"—ராவ்பகதூர் முன் போலவே பேசினார். வருந்தி வரவழைத்துக்கொண் டிருந்த புன்

சிரிப்புக்கூட இப்போது மறைந்துவிட்டது; "வீட்டில் தான் இருக்கிருள்" என்ருர்.

அதற்குமேல் அவரிடம் விசாரிக்க அவனுக்கு மனம் இல்லை. பேசாமல் காரில் ஏறிக்கொண்டான். கார் புறப் பட்டவுடன் அவன் காதுகளில் ராவ்பகதூரின் இந்த வார்த்தைகள் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந் தன: "வத்ஸலாவா?...வீட்டில்தான் இருக்கிருள்!— வத்ஸலாவா?...வீட்டில்தான் இருக்கிருள்!—வத்ஸ லாவா?........"

'வத்ஸலா வீட்டில்தான் இருக்கிருளா! நாடு விட்டு நாடு போய்த் திரும்புகிறவனுக்கு வரவேற்பளிக் கும் முறையா இது? வருஷக் கணக்காய்ப் பிரிந்திருந்த ஜீவனுக்குப் பதில் சொல்லவா அவள் அங்கு இருக் கிருள்?—வத்ஸலா! நெஞ்சோடு நெஞ்சைப் பிணைத்துக் கொண்டு கிடந்தாயே, நீயா இவ்விதம் என்னை வந்து பாராமல் கல்நெஞ்சோடு உட்கார்ந்திருக்கிருய்?'

"வத்ஸலாவுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்ருன் மனம் தாளாமல்.

"இல்லை" என்ருர் சுருக்கமாக.

அவனுக்கு முன்னமேயே விளங்கிப்போன ஓர் உண்மை இப்போது விபரீதத்துடன் எதிரே நின்றது. இதற்கு இத்தகைய பயங்கர உருவம் இருக்குமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. "ஆம், நான் அவளு டைய நியாய சபையில் குற்றவாளி; பட்டத்தைத் துறந்த குற்றம்! பதவியை மறுத்த குற்றம்! ஆனல் அதற்காக இவ்வளவு கொடுந் தண்டனையா? ஆசை, காதல், பாசமெல்லாம் அந்தப் போலிக் கௌரவத்திற் கும் பகட்டுக்குந்தான?"

உள்ளே நுழைந்தவுடன், "வாருங்கள்" என்று கூத விடுக்கின் பின்னே இருந்து யாரோ கூப்பிட்டார்கள்.

வத்ஸலா அல்ல; அவள் தாய். அந்தக் குரல்கூட உடைந்து போய்த்தான் இருந்தது.

நாற்காலியில் போய் உட்கார்ந்தான். அதன் அடிப் பாகத்திலிருந்து முட்கள் முளைத்து அவனைத் தைத்தன. வறட்டுத்தனமாய் அவன் பார்வை நாலு பக்கமும் அந்தப் பெரிய வீட்டுக்குள்ளே அலைந்தது. வீட்டின் சுவரும் சன்னலும் அலமாரியும் அவனைப் பதிலுக்கு அனுதாபத்தோடு நோக்கின. லக்ஷ்மி கொண்டுவந்து அவன் எதிரே வைத்த சிற்றுண்டி அவனால் தீண்டப் படாமல் அப்படியே கிடந்தது. இடத்தை விட்டு எழுந்து வத்ஸலாவின் அறைக்குச் சென்றான்.

அறைக் கதவு சும்மா சார்த்தியிருந்தது. திறந்த வுடன் அருகே தலையைக் கரங்களுக்குள் கவிழ்த்த வண்ணம் வத்ஸலா கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். ஒரு கணம் சந்தானம் கதவருகிலேயே நின்றான். மறு விநாடி பேசாவிட்டால் அவன் நெஞ்சைப் பிளந்துகொண்டு அந்த வார்த்தை வெளிவந்துவிடும் போல் இருந்தது.

“வத்ஸலா!”

அவள் பதில் அளிக்கவில்லை.

சந்தானத்தின் உள்ளக் குமுறல் பெருமூச்சாய் வெளியே சீறியது. அதில் அவள் சற்று நெகிழ்ந்து விட்டாள்.

கண்களை மேலே தூக்கிச் சந்தானத்தைப் பார்த்தாள். இதுவரையில் கண்களை மறைத்திருந்த நீர்த் திரை நழுவிக் கீழே தாரையாய்க் கன்னங்களில் வழிந்தது. மறுபடியும் அவள் தலை கவிழ்ந்துகொண்டது.

“வத்ஸலா!”

மீண்டும் பதில் இல்லை; ஆனால் இதழ்கள் மட்டும் துடித்தன.

மூச்சுப் பேச்சற்றுச் சந்தானம் சிலையாக அங்கே நின்றான். முரட்டுக் கதர் வேஷ்டி யொன்று, ஓர் அரைக் கைச் சட்டை, அங்கவஸ்திரம் - மேல்நாட்டிலிருந்து திரும்பும் ஒரு நவயுவ வாலிபன் இவன்!

நிமிஷங்கள் சென்றன.

சந்தானம் கட்டிலில் போய் அவள் பக்கத்தில் உட்கார்ந்தான். அவன் கரங்கள் தாழ்ந்திருக்கும் அவள் முகத்தை லேசாக நிமிர்த்தின. வத்ஸலா அவனுடைய இதைப் போன்ற ஸ்பரிச இன்பத்திற்காக எத்தனையோ இரவு பகல்கள் வாடியிருக்கிறாள். இதைக் காட்டிலும் அன்புப் பெருக்கோடு அவன் அவளை எப்போதும் நெருங்கப் போவதில்லை. ஆனால் இன்றைக்கு அந்த அன்பு அவளுக்கு எப்படி இருந்தது?

"வேண்டாம்; என்னைத் தொடாதீர்கள்!" என்று பட்மெடுத்த நாகம் போல் சீறிவிட்டு, சற்றுத் தள்ளி அமர்ந்தாள். அவள் பார்த்த அந்தப் பார்வையில் செந்தழல் நாக்குகள் நீட்டின.

வருஷங்களை, இல்லை, யுகங்களைக் கடந்து சந்தானத்தின் காதில் ஒலிக்கும் அவளுடைய முதற் சொல் இது!

அந்தக் கூரிய வாள் அவன் மார்பில் பாயவே, அவன் வேதனை தாங்காமல், கால்கள் தரையில் படுவதைக்கூட உணராமல் வெளியே வந்தான்.

# 11

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கரூரை அடுத்தாற் போல இருக்கும் சோலைப்பாளையத்தில் அப்போது தான் உதய சூரியனின் பொற் கிரணங்கள் பட்டர்ந் தன. அமராவதி நதிக்கரையின் ஒரு* பக்கத்தில் சுபத் திரா தன் தாயுடன் ஸ்நானம் செய்துகொண் டிருந்தாள். கிராமத்துப் பெண்களும் சற்றுத் தூரத்திலிருந்து சேலை துவைப்பதும், குழந்தைகளைக் குளிப்பாட்டுவதும், தங்கள் ஸ்நானத்தைக் கவனிப்பதுமாக இருந்தார்கள். நதியின் மறு கரையில் கிராமத்து ஆண்களின் கூட்டம். அதன் மத்தியில் சுபத்திராவின் கணவன் ராமசாமியும், அண்ணு சுப்பரத்தினமும், தந்தை வேதாசலமும் காணப்பட்டார்கள்.

வேதாசலம் கோயம்புத்தூரில் பிரபல வக்கீலாக இருந்து, நிறையச் சம்பாதித்தவர். அங்கே பெரிய பங் களா ஒன்றும், கரூர்த் தாலூகாவில் நீர்வளமுள்ள நில புலங்கள் பல ஏக்கரும் வாங்கிப் போட்டிருந்தார். தொழிலில் இருக்கும்போதே அவருக்குத் தேச விவகா ரங்களில் மிகவும் அக்கறை. எந்தக் காரியத்திலும் காந் தியடிகளின் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்று பவர். சட்ட மறுப்பு இயக்கம் வந்தபோது யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வக்கீல் போர்டை முதலில் எடுத்து உள்ளே மாட்டியவர் வேதாசலமே. மத்திய காலத்தில் வேதாந்த விசாரணை, ஆயுர்வேத வைத்திய ஆராய்ச்சி இவற்றிலெல்லாம் அவர் கவனம் சென்றது. திரும்பவும் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண் ணமே அவருக்கு உண்டாகவில்லை. கோயம்புத்தூர்

விவகாரத்தை அறவே ரத்து செய்துகொண்டு மூட்டை முடிச்சுகளுடன் சோலைப்பாளையம் வந்து சேர்ந்தார்.

சுப்பரத்தினத்தையும் சுபத்திராவையும் அவர் தனித் தனியாக மேற்படிப்புக்கு விட்டு வரும்போது அவர்களுக்குக் கூறிய புத்திமதிகள் இவைதாம் :

"நீங்கள் விவரம் தெரிந்த குழந்தைகள். உங்களை நான் எந்த விஷயத்திலும் எப்போதும் கட்டுப்படுத்த விரும்பவில்லை. உங்களுடைய கல்வியால் உங்கள் வீட்டுக்கும் நாட்டுக்கும் பயன் ஏற்பட வேண்டும். பொறுப்பை நீங்களே அறிந்து முன்னுக்கு வர முயற்சி செய்யுங்கள். காதல், கல்யாணம் போன்ற காரியங்களில் உங்கள் நோக்கத்திற்கு நான் குறுக்கே நிற்கப் போவதில்லை."

சுபத்திராவுக்கும் சுப்பரத்தினத்திற்கும் தங்களுடைய தந்தை எப்பேர்ப்பட்டவர் என்று தெரியும். அவரிடம் அவர்களுக்கு இயற்கையான பாசத்தைவிட அலாதி அன்பும் மரியாதையும் பக்தியும் இருந்தன. அவர் எவ்வளவுக்கு எவ்வளவு இவர்கள் போக்கில் விட்டுக் கொடுத்தாரோ, அதற்குத் தகுந்தாற்போல் தங்களது பொறுப்பைத் தாங்களே உணர்ந்தார்கள்.

ஒரு தரம் சுபத்திரா தந்தைக்குக் கீழ்க்கண்டவாறு தந்தி அடித்திருந்தாள் :

"**அண்ணா அரசியல் சம்பந்தமாய்ப் பள்ளியில் கலவரம் செய்தாராம்; கைது செய்யப்பட்டிருக்கிறார். உடனே வாருங்கள்.**"

உடனே அவர் வரவில்லை. அதற்குப் பதிலாக அவரும் ஒரு தந்தி கொடுத்திருந்தார் :

"**அதற்காகக் கவலைப்படாதே! கைது செய்தால் விசாரணை நடக்கும்; நான் அவசரப்பட்டுப் புறப்பட ஏதும் காரணம் இல்லை.**"

நல்ல வேளையாகச் சுப்பரத்தினமும் உடனே விடுதலை செய்யப்பட்டான். ஆனால் அதற்குமேல் பள்ளியில் அவனை அனுமதிக்கவில்லை. அதை விட்டு வெளியேறி அந்த ஜில்லா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்து தேசியப் பிரசாரம் செய்யத் தலைப்பட்டான். கடைசியாக, சுபத்திராவும் படிப்பு முடிந்து, ராமசர்மியைக் கல்யாணம் செய்துகொள்ளும் அபிப்பிராயத்துடன் சோலைப் பாளையம் வந்து சேர்ந்தாள். அங்கேயே இப்போது சுபத்திரா, அவள் கணவன், பெற்றோர், அண்ணா யாவரும் ஒன்றாய் இருந்தார்கள். சுப்பரத்தினத்திற்குத் தற்போது கல்யாணம் பண்ணிக்கொள்ளும் எண்ணமே இல்லை.

வேதாசலம் என்றென்றும் நிரந்தரமாய் இருக்கும்படியான அழியாத அன்பை அந்தக் கிராமவாசிகளிடம் பெற்றுவிட்டார். அவருடைய நிலங்களில் பெரும் பகுதி கிராமத்தாருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. ஊர்த் தென்னைகள் பூராவும் கள்ளுக் குத்தகையி லிருந்து விடுதலை பெற்றன. கிராமத்துப் பெண்களுக்கென்று ஒரு குடிசைத் தொழிற்சாலை அமைத்துச் சுபத்திராவின் கவனிப்பில் அதை விட்டிருந்தார். போதாக்குறைக்கு அவரே பழுத்த வைத்தியராக மாறி, ஒரு சிறு வைத்தியசாலையும் வைத்திருந்தார். அவருடைய பகற்பொழுதில் பெரும் பகுதி நோயாளிகளின் மத்தியிலும், மூலிகை ஆராய்ச்சியிலும் கழியும். இரவிலோ, ஒன்பது மணி வரையில் வயது வந்தவர்களுக்குப் பள்ளிக்கூடம். அதன் பின்பு, படிப்பு, தியானம், படுக்கை, மற்றக் காரியாதிகளெல்லாம்.

சுப்பரத்தினம் பெயரளவில்தான் கிராமத்தில் இருப்பதாகப் பாவனையே தவிர, எப்போது எங்கிருக்கிறானென்று யாருக்கும் தெரியாது. ஊர் ஊராய்ச் சுற்றுவான். திரும்பவும் திடீரென்று ஒரு நாள் கிராமத்திற்கு

வருவான். தினம் அங்கே தங்கிய பின்னர் மீண்டும் பிரயாணம் ஆரம்பமாகும். சென்னையிலோ பம்பாயிலோ கல்கத்தாவிலோ இருப்பதாகப் பத்திரிகைகள் மூலம் தெரியும். இல்லாவிட்டால் கடிதம் வரும். சில சமயம் அவனுக்குச் சிறைவாசம்; சில சமயம் போலீஸ் தடியடி; அதனால் ஆஸ்பத்திரி வாசம்.

"தம்பி சுப்பு! கல்யாணத்தைப் பற்றியே பேச் செடுக்கவிடாமல் செய்துகொண்டிருக்கிறாயே அப்பா!" என்று அவன் தாய் அவனைப் பரிவோடு கேட்கும்போ தெல்லாம், "எனக்கு அதன் அவசியத்தைப்பற்றி நினைக்க நேரமில்லை அம்மா!" என்பான். அவன் அப்பா வுக்குத்தான் அவனைத் தெரிந்திருந்தது. கண் கலங்கிக் கொண்டு வரும் தம் மனைவியைப் பார்த்து, "வருத்தப் படாதே பார்வதி, அவன் பிடிவாத சுபாவந்தான் உனக் குத் தெரியுமே! அந்தப் பிடிவாதம் தூரத்தில் உள்ள ஒரு நல்ல லக்ஷ்யத்தைக் குறி வைத்திருக்கிறது. அதற் காக அவன் வழியிலே உள்ள கல்லையும் முள்ளையும் மலையையும் மடுவையும் பார்க்காமல் ஓடுகிறான். அவனு டைய போக்கிலேயே விட்டுவிடு; அவனுக்கு வேறொன் றையும் நினைக்க நேரம் இருந்தால் இப்படி ஊர் தங்கா மல் இருப்பானா?"

சுபத்திராவின் புருஷன் ராமசாமியோ இயற்கைப் பித்தன். காலையிலும் மாலையிலும் வயல் வரப்புகளில் உல்லாசமாக உலவிக்கொண்டே கவிதை இசைப்பான். நீல ஆகாயம், அதன் கார்மேகக் கூட்டங்கள், தூரத்து மலைச் சிகரங்கள், பச்சைப் பயிர்கள், மலர்க் குவியல் - இவையெல்லாம் அவன் கவிதைகளுக்கு உணவு. அன் றியும் தனக்குள்ளே ஒரு நவ உலகத்தைச் சிருஷ்டி செய்துகொண்டு அதன் சிம்மாசனத்தில் தானும் சுபத்தி ராவும் இருந்து அதை ஆட்சி செய்வான். அங்கே துன்பம், துயரம், வறுமை, அடிமை ஒரு பிணியுமே

இருக்காது; மாசற்ற மனத்தவர்களின் தூய உலகம் அது.

ராமசாமிக்குக் கவிதை, கட்டுரை எழுதிக்கொண்டிருப்பதைத் தவிர அங்கே வேறு வேலையும் இருந்தது. கிராமத்தின் தேர் திருவிழாவின்போது நாடகங்கள் நடத்துவது, பெண்களுக்குப் புதுப் புது நிலாக் கும்மியாய் இயற்றித் தருவது, ஓய்வு நாட்களில் களியாட்டங்கள், விருந்து முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்வது எல்லாம் இவன் வேலைகளே.

பொதுவாக வேதாசலத்தின் குடும்பம் அந்தச் சிறு கிராமத்தை அன்பினுல் அரசாட்சி செய்தது.

* * *

ராமசாமி தன் அறையில் தனியே உட்கார்ந்து கவிதை எழுதிக்கொண்டிருந்தான். இரண்டு புறமும் திறந்த சன்னல்கள் வழியாய் வேப்பங்காற்று உள்ளே வீசியது. சுபத்திரா அடிமேல் அடிவைத்து அவனுக்குத் தெரியாமல் பின்புறம் வந்து நின்ருள்.

வந்து ஐந்து நிமிஷங்களுக்கு மேலாகியும் அவன் கவனிக்கவில்லை.

"கவிஞரின் கனவைக் கலைக்கலாமோ?"

கவிஞனின் கனவு உண்மையில் கலைந்தது.

"ஆஹா! தாராளமாய். கவிதைத் தேவியே இப்படி என்னிடம் உத்தரவு கேட்கலாமோ? எல்லாம் உன் கனவுதானே?"

"எல்லாம் இருக்கட்டும்: உங்களுக்கு இப்போது ஒரு நல்ல சமாசாரம் கொண்டுவந்திருக்கிறேன்."

"என்ன சமாசாரமோ?"

"இன்றைப் பத்திரிகையைப் படிக்கிறேன்; கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு, உரக்கப் படித்தாள் சுபத்திரா.

**“ஐ. ஸி. எஸ். பட்டத்தைத் துறந்த சந்தானம் இந்தியா திரும்பினர். - பட்டம் துறந்ததற்கு அவர் கூறும் காரணங் கள். - அவருடைய எதிர்கால வாழ்க்கை தேச நலனைப் பொறுத்ததாக இருக்குமாம்.”**

தலைப்புக்கள் முடிந்தவுடன் உள்ளே விவரமாக இருந்த விஷயங்களைத் தொடர்ந்து படித்தாள். சந்தா னத்தின் கட்டுரைப் பேச்சு அப்படியே அதில் வந் திருந்தது.

“ஏது, உன் உபாத்தியாயர்கூட இவ்வளவு உணர்ச்சி யோடு பேசியிருக்க மாட்டார் போலிருக்கிறது ; அத்தனை ஆர்ப்பாட்டத்துடன் படிக்கிறயே !”

“கேலி இருக்கட்டும் ; இதற்குப் பதில் சொல்லுங் கள் : சர்க்கார் தாசராய் மாறி அதிகார வெறி கொண்டு விட்டப் போகிருர் என்றீர்களே. இப்போது என்ன சொல் லப் போகிறீர்கள் ?”

“செய்திருப்பது புத்திசாலித்தனமான காரியம் ; தைரியமான செய்கை ; சரிதானா ?”

இப்படிக் கூறிவிட்டு, “இதைப்பற்றி உன் சிநேகிதி யின் சித்தம் எப்படியோ ? வத்ஸலாவுக்கு இப்போது நீ கடிதம் எழுதிக்கொண் டிருக்கிறயா ? ஏதாவது எழுதி யிருந்தாளா ?” என்றான்.

“இனிமேல்தான் எழுதவேண்டும் ; ரொம்ப நாளாய் இருபுறமும் மௌனம் சாதித்துவிட்டோம்.”

அன்றைக்கே சுபத்திரா விவரமாக விசாரித்து வத்ஸலாவுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். ஒரு வாரத் திற்குமேல் ஆயிற்று. பதில் வரவில்லை.

# 12

ரங்கநாதன் அம்புபட்ட பறவைபோல் நாற்காலியில் சுருண்டு கிடந்தான். கண்கள் அர்த்தமற்ற சூன்யத்தைத் துருவித் துருவிப் பார்த்து, மேல் நோக்கிச் சுழன்றுகொண் டிருந்தன. வத்ஸலாவின் சொல்லம்பு அவனை ஒரேயடியாய் அவ்விடத்தில் சாய்த்துவிட்டது.

அவன் அங்கேயே கிடந்தான். சாளரத்தின் வழி உள்ளே நுழைந்த கதிரொளி சிறிது சிறிதாக மஞ்சளாய் மாறிப் பின்பு உருவமற்றுத் தேய்ந்துவிட்டது. அதன் பின்பும் அவன் அவ்விடத்தை விட்டு அசையவில்லை. நாற்காலியின் கீழிருந்து ஒரு பெரு நெருப்புக் கிளம்பி அவனைக் கருக்கிச் சாம்பலாக்காமல் தகித்துக்கொண் டிருந்தது.

ராவ்பகதூர் மற்றொரு மூலையில் உட்கார்ந்திருந்தார். அவர் மனைவி அதே கதவிடுக்கில் பொம்மைபோல் நின்றாள். கடைசியாக அவர் மனைவியை அழைத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்து, “நான் வெளியில் போய் வருகிறேன். பத்திரமாய்ப் பார்த்துக்கொள். எல்லாம் தலைவிதி! நமக்குப் பெண்ணும் அப்படி, மாப் பிள்ளையும் அப்படி! அவருடனேயே ரங்கனை இருக்கும் படி சொல்லிவிட்டு நான் போகிறேன். நீயும் கவனித் துக்கொள். கோபத்தில் எங்காவது கிளம்பிவிட்டுப் போகி றார். எல்லா வசதியும் அப்போதைக்கு அப்போது ரங்க னிடம் சொல்லி ஏற்பாடு செய். உன் பெண் குணம் திரும்புகிற வரையில் இவர் குணம் திரும்பாமல் இருக்க வேண்டுமே!” என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

வாசலில் நின்ற டிரைவரைப் பார்த்து, “மாப்பிள்ளை

வெளியே எங்காவது போக வேண்டுமென்றால் மெதுவாக அம்மாவின் காதில் போட்டுவிடு. எங்கும் அவர் தங்கும்படி நேர்ந்தால் நீயும் அங்கேயே தங்கி, அவரைஅழைத்து வந்துவிடு" என்றார். அப்படியே ரங்கனையும் பார்த்து எச்சரிக்கை செய்துவிட்டுப் போனார்.

பகல் போய் இரவு வந்தது. மாமனாரின் வற்புறுத்தலுக்காக இலையின் முன் உட்கார்ந்து எழுந்தான் சந்தானம். அதன் பின்பு அவனுடன் தனிமையில் ஏதாவது பேச்சுக் கொடுத்து அவனைச் சாந்தப்படுத்தலாமென்று எண்ணினார். ஆனால் அவருள்ளத்தில் ஏற்கனவே நிரம்பியிருந்த துக்கம் அவரை ஒன்றும் பேசவிடவில்லை. சந்தானமே பேசினான்.

"உங்களுக்கு நான் சகிக்க முடியாத ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டேன். உங்கள் முயற்சியால் தேடிய எண்ணற்ற பொருளைச் செலவழித்துவிட்டேன். நண்பர்கள் உங்களைக் குறை கூறும்படியான நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டேன். ஆனால், நான் எந்தச் சமயத்தில் எது சரியென்று தோன்றுகிறதோ அதைச் செய்கிறேன். அதனால் எனக்கும் என்னைச் சேர்ந்தவர்களுக்கும் சிரமந்தான். அந்தச் சிரமம் பற்றி நான் வருத்தப்படுவதற்கில்லை."

ராவ்பகதூர் அவன் பேச்சைப் புரிந்துகொள்ளக் கூடிய நிலைமையில் இல்லை. அவருக்கு இதெல்லாம் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்த இளைஞர்களின் ரத்தத் துடிப்பு என்று மட்டும் புலனாகியது. பொதுவாகத் தம் மாப்பிள்ளையின் முரட்டுச் சுபாவம், பெண்ணினுடையதற்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல என்பதை நன்றாக ஊர்ஜிதம் செய்துகொண்டார்.

மாமனாரைப் படுக்கைக்கு அனுப்பிவிட்டுச் சந்தானம் மாடி அறையில் கைகளைப் பின்புறம் கட்டியவாறே இங்கு

மங்கும் அலைந்தான். தேனீக் கூட்டம்போல் இருதயத்தை மொய்த்துக்கொண் டிருந்த எண்ணங்கள் ஜிவ்வென்று பறந்தன.

'பெண்! - பெண்ணென்றால் என்ன? பெண்மை என்றால் என்ன? அது ஒரு விளங்காத புதிர். ஆம், ஆண்களுக்கு அது அணுவளவும் விளங்காது. அவர்களுக்கே அது தெரியுமோ என்னவோ, அதுவும் விசித்திரந்தான்! பெண் அன்பின் உருவம்; இல்லை, அகந்தையின் பிறப்பிடம்! பெண் இனிமையின் விளை நிலம்; இல்லை, இன்னல் படுகுழி! பெண் அழகின் மலர்ச்சி; இல்லை, அழிவின் தொடர்ச்சி!-இல்லை, இல்லை, இல்லை; பெண்ணென்று ஒன்று இல்லவே இல்லை! பேய்! பேய்! சூறுவளியின் சூழ்நிலையில் நின்று கொக்கரிக்கும் அகங்காரப் பேய்!—

'இதென்ன வெட்கக் கேடு? எங்கேயோ நாடோடியாய்ச் சுற்ற வேண்டியவனை வலிய அழைத்து மாலையிட்டு மகிழ்வித்தாளே, அவளா பேய்? அன்பும் இன்பமும் இன்னவை என்று தெரியாதிருந்தவனுக்கு அன்பை ஊட்டி, இன்ப ஊற்றைப் பருகுவித்தாளே, அவளா பேய்? மலரை விட்டுப் பிரியா மது வண்டைப் போல் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து, என் முன்னிலையில் உலகையே மறந்து ரீங்காரம் செய்தாளே, அவளா பேய்? கொட்டிக் கொட்டிக் கொடுத்து என்னை வேற்றுலகத்துக்கு அனுப்பி, என் கண்களுக்கு வீர விழிப்பைக் கொடுத்தாளே, அவளா பேய்? இல்லை, அவள் பேய் அல்ல; தெய்வம்! பெண் தெய்வம்!

'ஊஹூம்......

'அவள் பேயுமல்ல; தெய்வமுமல்ல—பெண்; வெறும் பெண்! பெண் என்றால்தான், முன்னமேயே தீர்மானித்திருக்கிறேனே, விளங்காத புதிரென்று! ஆம்; அவள் பல சிக்கல்கள் நிறைந்த ஒரு மாயப் புதிர்.'

மாடிப் படிகளில் இறங்கிக் கீழே வந்தான். படிகளை ஒட்டினாற்போல் இருந்தது வத்ஸலாவின் அறை. அந்த அறையில் இருந்த மங்கலான ஊதா வெளிச்சம், வெளியே படிகளின் கைப்பிடியில் விழுந்துகொண் டிருந் தது. சன்னல் அருகே நின்று உள்ளே பார்த்தான். வத்ஸலா தன்னை மறந்து தூங்கிக்கொண் டிருந்தாள்.

வத்ஸலா தூங்கிக்கொண் டிருந்தாள்!

அகன்று பரந்த கடலுக்கப்பால், ஒரு தீவில் இது வரை பிரிவுத் துன்பத்தை அனுபவித்த அவள் கண வன் அன்றுதான் ஊரிலிருந்து வந்திருக்கிறான். நூதன நூதனமான செய்திகளைத் தன் மனைவிக்குத் தெரிவிப்ப தற்காக நெஞ்சிற்குள்ளே நிரப்பிக்கொண்டு குதூகலத் தோடு வந்திருக்கிறான். அன்பு மழை பொழியாததால் வறண்ட பாலையாக இருந்த இருதயத்தோடு அவன் அன்பு வெள்ளப் பெருக்கை எதிர்நோக்கி அதி தாகத் துடன் வந்திருக்கிறான். இந்த நிலையிலா வத்ஸலா நிம்மதியான தூக்கத்தில் ஆழ்ந்திருக்கிறாள்?

அழகின் மலர்ச்சி அடைய முடியாத தூரத்தில் இருக்கும்போதுதான், அதன் பூரணப் பொலிவையும் ஒருவனால் உணர முடிகிறது. ஆகா! வத்ஸலா முன்னை விட இப்போது எத்தனை அழகாய் விளங்குகிறாள்!

தாமரைப்பூ தன்னுடைய ஒவ்வொரு பருவத்திலும் அதன் ரஸிகனுக்கு ரம்யமாய்த்தான் தோற்றமளிக்கிறது. அரும்பு, மொட்டு, போது எல்லாமே அழகுதான். ஆனால் அந்தப் பருவம் முற்றி அது மடல் அவிழும் போது அதன் அழகு இருக்கிறதே, அது அலாதியான ஒன்று; மற்ற எந்தத் தோற்றத்துடனும் ஒப்பிட முடி யாதது.

அந்த அழகின் ரகசியத்தை இன்று சந்தானம் வத்ஸலாவிடம் கண்டான்.

மலர் சௌந்தர்ய வானை நோக்கி மலர்ந்திருந்தது. ஆனால் அந்த வானத்துக் கதிரவன்? மலரின் சலசலப் பால் கிளம்பிய நீர்த் திவலைகள் மேகமாகி அந்தக் கதிர வனை மறைத்திருந்தன.

சந்தானத்தின் முன்னே மூன்று வழிகள் தென்பட் டன. ஒன்று, எண்ணக் குவியலின் சிதைவுகள் அவ னைப் பைத்தியமாக்கி உருக் குலைப்பது. மற்றொன்று, அவனுடைய தூரத்து லக்ஷ்யத்தை நோக்கி அவன் மாத்திரம் தனியே படுவேகத்தில் பாய்ந்து செல்வது. மூன்றாவது, வத்ஸலாவின் கால்களைப் பற்றி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவள் இன்பத்திற்காகத் தானும் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டு, உலகத்தின் கோடிக்கணக்கான மின்மினிப் புழுக்கள் போல் வாழ்ந்து, இறுதியில் இருந்த இடம் தெரியாமல் தேய்ந்து போவது. இவற்றில் எந்த வழி அவனைத் தன்பால் இழுத்துக் கொள்ளப் போகிறது?

# 13

பலபலவென்று பொழுது விடிந்தது. சந்தானம் படுத்திருந்த அறைச் சுவரில் கதிரொளி படிந்து இந்திரஜால நர்த்தனங்களைச் செய்துகொண்டிருந்தது. அவ்வொளியின் மத்தியில் அசைந்து அசைந்து ஆடும் தோட்டத்துத் தளிர்களின் நிழல் சந்தானத்தின் மனத்தில் புதுப் புதுக் கற்பனைகளைக் கிளறத் தொடங்கின. மெய்ம்மறந்திருந்த அவன் லேசாகப் புன்னகை பூத்தான்.

இரவு இரண்டு மணிக்கு அப்புறம் உறக்கத்திற்காகக் கண்களை மூடியவன் கிழக்கு வெளுக்கு முன்பே விழித்துக்கொண்டான். விழிக்கும்போது அவன் பழைய சந்தானமாக இல்லை ; முற்றும் மாறியிருந்தான். இரவின் முற்பகுதியைக் கலைத்த வேதனை நினைவுகளில் ஒன்று கூட இப்போது அவனிடம் தலைகாட்டவில்லை. எல்லாம் எப்பொழுதோ தோன்றி மறைந்த பழங்கனவுபோல ஆகி விட்டது.

சூரியனின் முதற்கிரணம் அறைக்குள் புகுந்ததும் அவனுக்குத் தெரியும் ; அதன்பின், அவ்வொளி உருவத்தில் பெரிதாகிக்கொண்டே போய் மேலிருந்து கீழே சுவரில் இறங்கியதும் அவனுக்குத் தெரியும். அதை அவன் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தான். ஆனால் அந்த வேடிக்கையின் மத்தியிலும் அவனுக்கு ஒரு சங்கற்பம் இருந்தது. அதுவும் வேடிக்கையான சங்கற்பந்தான்.

அந்த ஒளி எப்போது வந்து அங்கே மாட்டியிருந்த ஒரு படத்தின்மீது பூரணமாக விழுகிறதோ அப்போது

தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பதென்று தீர்மானம் செய்திருந்தான்!

சிறிது சிறிதாக ஒளி படத்தை நிரப்பியது; அதே கணத்தில் சந்தானத்தின் உள்ளமும் அவன் கண்களும் அந்த ஒளியால் நிரம்பின. சிறு பிள்ளையைப் போல் படுக்கையை விட்டுத் துள்ளி எழுந்து படத்தை எடுத்துக்கொண்டே வெளியே வந்தான். அந்தப் படத்தில் இதுவரை படிந்திருந்த தூசியைத் தன் மேல்துண்டினால் துடைத்தான். தனக்குள் மெதுவாக அதன் மேலும் கீழும் எழுதியிருந்த வாக்கியங்களைப் படித்தான். உடனே அவன் தேகமெங்கும் புல்லரித்தது.

பல வருஷங்களுக்கு முன்பு அவன் மாணவனாக இருந்தபோது ஒரு பத்திரிகையில் வெளிவந்த படம் அது. அப்போதே அதை எடுத்துக் கண்ணாடி போட்டு வைத்தான். படத்தில் ஏழைக் குடியானவன் ஒருவன் கோவணாண்டிக் கோலத்துடன், தோளில் ஒரு சோனிக் குழந்தையைச் சுமந்துகொண்டிருந்தான். நெஞ்சின் விலா எலும்புகள் எண்ணும்படியாய்த் தெரிந்தன. அதற்குக் கீழே இருக்கவேண்டிய வயிறோ ஒரே இருண்ட படுகுழி! அவனுக்குப் பக்கத்தில் அவன் மனைவி மார்பில் ஒட்டிக்கொண்டிருந்த சிசுவுடனும், ஏனைய அவன் குழந்தைப் பரிவாரங்களுடனும் நின்றுகொண்டிருந்தான். - இன்றைக் கிராமாந்தரத்து இந்தியக் குடும்பங்களில் ஒன்று. படத்தின்மேல் காந்தியின் வார்த்தையான 'நர நாராயணர்' என்பது போட்டிருந்தது. அதன் கீழே சந்தானம் தனது வாலிபத் துடிதுடிப்பில், 'இந்தப் பஞ்சைகளின் நெஞ்சிலே தீ மூட்டுவோம்' என்று எழுதியிருந்தான்.

தினசரி வாழ்க்கையிலே குறுக்கிடும் ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்களின் பிரதிபிம்பம் அந்தப் படம்.

அதே படம் அவனுடைய தீவிரப் போக்கிற்கு முதலில் வழி காண்பிப்பதாக இருந்தது. ஆனால் அவனுடைய கல்யாணத்திற்குப் பின்பு அதற்குக் கிடைத்த பரிசு வத்ஸலாவின் பரிகாசந்தான். இத்தனை காலமும் அதற்கு ஏதோ குற்றமிழைத்துவிட்டவன்போல் அதை நோக்கி னன். பிறகு பெருமூச்சுடன் முன்போலவே அதை உரிய இடத்தில் மாட்டிவிட்டுச் சில தினங்களாக அங்கு வந்து காத்துக் கிடந்த கடிதங்களைப் பார்க்கத் தொடங் கினன்.

கடிதங்கள் மேஜையில் குவிந்து கிடந்தன. ஒன்று கூட உடைக்கப்படவில்லை. முன் போல இருந்தால் வத்ஸலா கடிதந் தவருமல் தணிக்கை செய்து பார்த் திருப்பாள். அவள்தான் இப்போது பழையவளல்லவே!

யார் யாரோ அவனுக்குக் கடிதம் எழுதி யிருந்தார் கள். முன்பின் கொஞ்சமும் தெரியாதவர்கள், தெரிந்த வர்கள், நண்பர்கள் எல்லோரும் எழுதியிருந்தார்கள். பெரும்பாலான கடிதங்கள் இளைஞர்களிடமிருந்து, முக்கி யமாக மாணவர் உலகத்திலிருந்து வந்தவை. எல்லாம் ஒரே வாழ்த்துக் கடிதங்கள். எதற்கு வாழ்த்து? ஐ. ஸி. எஸ். பட்டத்தை உதறித் தள்ளியதற்கு!

அங்கங்கே பாராட்டுக் கூட்டங்களை ஏற்படுத்தியிருந் தார்கள். கடிதங்கள் எல்லாவற்றிலும் ஒரே புகழ்மாலைக் குவியல்கள், உணர்ச்சி மிக்க வீரச் சொற்கள், சுதந்தரத் துடிதுடிப்பின் எதிரொலிகள். 'வாருங்கள்; வந்து தியாகத்திற்குத் திரண்டெழுந்து நிற்கும் எங்களுக்குத் தலைமை வகியுங்கள்' என்று அழைத்திருந்தார்கள்.

உதய காலத்தில் சந்தானத்தின் இதழ்களில் அரும் பிய அதே புன்னகை மீண்டும் இப்போது அவனிடம் அரும்பியது. 'நாடு உறங்கவில்லை; விழித்துக்கொண் டது; இனி உலகின் எந்தப் பிற்போக்குச் சக்தியும்

அதன் நோக்கத்திற்குக் குறுக்கே நிற்க முடியாது.—ஆம், அடிக்குமிடமெல்லாம் காற்றடிக்கட்டும்; பரவும் இடமெல்லாம் தீப் பரவட்டும்; அந்தத் தீயை நாம் பரப்பு வோம். ஒரு நாள் அந்தத் தீயின் மத்தியிலேயே நாமும் வெந்து பொடி சாம்பலாய்ப் போகும் நாளும் வரும். பரவாயில்லை. நம் உடலின் தீயொளி ஆயிரம் ஆயிரம் உயிர்களுக்கு வழி காட்டட்டும்' என நினைத்துக்கொண் டான்.

தன்னை அழைத்திருக்கும் ஒவ்வோர் இடத்திற்கும் தான் வருவதாகத் தேதி குறிப்பிட்டுப் பதில் அனுப்பி னான். தன்னை ஆட்டுவிக்கும் ஓர் அபூர்வ சக்தி வெகு நாளாகவே அவனை அதன் இஷ்டப்படி இழுத்துச் செல் வதாக அவனுக்கு எண்ணம். தற்போதும் அதே சக்தி தான் அவனை எங்கெல்லாமோ அழைக்கிறது. மனப் பூர்வமாக அதனிடம் தன்னை ஒப்பித்தான்.

* * *

சந்தானம் மூட்டிய தீ பல இடங்களில் உக்கிரத்து டன் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. நாட்டின் இளைஞர்கள் தங்களை மறந்து அந்த ஜோதியைச் சூழ்ந்து கொண்டார்கள். எங்கேயும் கூட்டங்கள், கோஷங்கள், செய்கைகள் - யாவும் மக்களின் பஞ்சத்தைப் போக்க, வறுமையை நீக்க, அடிமையை அகற்ற!

ஊருக்கெல்லாம் உணர்ச்சி யூட்டும் தீ ஒருத்திக்கு மாத்திரம் மார்பின் மத்தியிலிருந்து பற்றி எரிவானேன்? வத்ஸலா தன் இளம் இருதயம் விநாடிக்கு விநாடி அவ் வனல் பட்டு வாடுவதை உணர்ந்தாள். தனக்குள்ளேயே வெந்து வெந்து மடிவதைத் தவிர அவளுக்கு மாற்று ஒன்றும் புலனாகவில்லை.

எந்தச் சீமைக் கொன்றை மரத்தை அவனுக்காகக்

கொண்டுவந்து வைத்து வளர்த்தாளோ, அது முன் போல மலர்க் குவியலாய் மலரவில்லை; செந்நெருப்பாய்க் கக்கித் தன் கொடிய நாக்குகளை இரக்கமின்றி நீட்டிக் கொண்டிருந்தது.

கப்பலேறு முன்பு சந்தானம் மெல்லிய மலராய் இருந்தான். அவள் சூறுவளியாய் இருந்தாள். சூறுவளியின் சுழலில் அகப்பட்டு அந்த மென்மலர் அப்போது அதன் இச்சைக்கெல்லாம் நர்த்தனமாடியது. இப்போதோ, மலர் மலராக இல்லை; நெருப்பு, செந்தீ! ஆனால் சூறுவளி அதே பழைய சூறுவளிதான்! சூறுவளியால் நெருப்பை அணைக்க முடியாது. குறுக்கிடுமானால் நெருப்பின் உக்கிரந்தான் பன்மடங்கு அதிகமாகும்.

# 14

ஒரு நாள் திடீரென்று போலீஸாரின் பரிசோதனைக்கு ராவ்பகதூரின் பங்களா உட்பட வேண்டியிருந்தது. ராவ்பகதூர் முகத்தில் ஈயாடவில்லை. பேசாமல் நாற்காலியில் விழுந்து கிடந்தார். அவர் மனைவிக்கு ஒன்றும் ஓடவில்லை. புரியாத நடுக்கம், பதைபதைப்பு, பயப்பிராந்தி. மருமகப் பிள்ளை சங்கடத்தில் அகப்படாதிருக்க வேண்டுமே என்று எல்லாத் தெய்வங்களையும் வேண்டிக் கொண்டாள்.

போலீஸார் முக்கியமாகச் சந்தானத்தின் அறையையும் மற்ற அறைகளையும் சோதனை செய்தார்கள். சிற்சில கடிதங்களைக் கைப்பற்றினார்கள். கேள்விமேல் கேள்வியாய்க் கேட்டார்கள். சந்தானம் அமைதியோடு அவர்களுக்குப் பதிலளித்தான். வழக்கமாகத் தவழும் புன்னகை எப்போதும் போலவே அவனிடம் காணப்பட்டது. இதைப் பார்த்தபோதுதான் வத்ஸலாவால் கோபத்தைத் தணிக்க முடியவில்லை. தனியாக அறையில் அடைபட்டுக்கொண்டு குமுறினாள்.

'இந்த வீட்டின் கௌரவத்தைப் பற்றியும், பெருந்தன்மையைப் பற்றியும் இவருக்கு என்ன அக்கறை? தம்முடைய செய்கையைப் பற்றியும், அதனால் வந்த வினையைப்பற்றியும் கொஞ்சமும் வெட்கப்படாமல், கேவலம் போலீஸாரிடம் பதில் சொல்லிக்கொண்டு நிற்கிறாரே! இது இவருக்கு அவமானமாக இல்லையா? அப்பாவைக் கண்டால் எத்தனையோ மரியாதை செய்யும் இவர்கள் இன்று அவர் வீட்டிலேயே, அவர் எதிரிலேயே அட்டகாசம் செய்யும்படி ஆகிவிட்டதே!—சே, இனி என்னால் சகிக்க முடியாது; கொஞ்சங்கூடச் சகிக்க முடியாது!'

வத்ஸலாவின் ஆத்திரம் கரை புரண்டது.

"இனி என்னால் அரை நிமிஷமும் இதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது!" என்று வாய்விட்டுக் கூறிய வாறே படியேறிச் சென்று கதவைத் திறந்துகொண்டு ஹாலுக் குள் நுழைந்தாள். போலீஸார் முன்பே அவ்விடத்தை விட்டு அகன்றுவிட்டனர். ராவ்பகதூரும் எழுந்து வெளியே சென்றிருந்தார். சந்தானம் மாத்திரம் உட்கார்ந் திருந்தான்.

அவளுடைய குரல் சந்தானத்தை ஒரு கணம் உலுக்கி எடுத்தது. மறுகணம் நிலைமையைச் சரிப்படுத் திக்கொண்டு ரௌத்திரக் களை தாண்டவமாடும் அவள் முகத்தை நன்றாகக் கவனித்தான். இம்முறைதான் அவள் அவனிடம் அங்கு வந்ததிலிருந்து இரண்டாந் தரமாகப் பேசியிருக்கிறாள்!

சந்தானம் பதிலளித்தான்:

"ஆமாம், வத்ஸலா, நானும் அதைப் பற்றித்தான் யோசனை செய்துகொண் டிருக்கிறேன். உண்மையில் எனக்கே இதைச் சகித்துக்கொண் டிருக்க முடியவில்லை தான்."

அவளுடைய உக்கிரம் உச்ச நிலையை அடைந்தது. அவள் ஆயுதத்தினாலேயே அவளைத் திருப்பித் தாக்கு வதுதானா ஆண்மைக்கு அழகு?

"உங்களுக்கு இப்படிச் சொல்ல வெட்கமில்லை?"

"இல்லை வத்ஸலா; அவசரப்படாதே. என்னைப் பற்றி நீ முன்பே தவறாக எண்ணிவிட்டாய். இப்போதும் என் வார்த்தையைத் தவறாக அர்த்தம் செய்துகொள்கி றாய். நான் ஒன்றும் உன்னைக் குறை கூறவில்லை. எல் லாக் குற்றங்களுக்கும் நானேதான் பொறுப்பு."

புரிந்துகொள்ளாதவள்போல் வத்ஸலா இமைகளைக்

கீழே தாழ்த்திக்கொண்டு அவ்விடத்திலேயே நின்றாள். சந்தானம் கெஞ்சும் குரலில் அவளிடம் பேசினான்.

"வத்ஸலா, இதோ என்னைப் பார்: ஐந்து நிமிஷம் இங்கே இருந்து நான் சொல்வதைக் கேட்க முடியுமா? நான் வந்ததிலிருந்து உன்னிடம் கொஞ்ச நேரமாவது தனித்து மனம் விட்டுப் பேசலாமென்று இருந்தேன். அதற்குச் சந்தர்ப்பத்தை நீ கொடுக்கவில்லை. இப்போதா வது நான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்டுக் கொள். என் மனத்திலுள்ளதை நான் சொல்லிவிடுகி றேன். அதன் பின்பு உன் அபிப்பிராயப்படி செய்."

வேண்டா வெறுப்புடன் தர்ம சங்கடத்தில் அகப் பட்டுக்கொண்டவள் மாதிரி வத்ஸலா அவன் சொல்வ தைக் கவனித்தாள்.

"உட்கார் வத்ஸலா" என்று பக்கத்து நாற்காலியை இழுத்துப் போட்டுவிட்டு அவன் ஆரம்பித்தான்.

"என்னை இன்னும் நீ சரியாகப் புரிந்துகொள்ள வில்லை. புரிந்துகொள்ளவும் விரும்பவில்லை. அப்படிப் புரிந்துகொண் டிருந்தாலும் வேறு விதமாகப் புரிந்து கொண்டிருக்கிறாய்.

"நான் ஆடம்பர வாழ்க்கையை விரும்பவில்லை. மாளிகை வாசமும் மிதமிஞ்சிய சுகபோகமும் எனக்குக் கசந்துவிட்டன. கோடானுகோடி ஏழை மக்களைப் போல நானும் வாழ்ந்து அவர்களுடைய விடுதலைக்காக அவர்கள் மத்தியிலேயே உழைக்கப் போகிறேன். நமது கல்யாண சமயத்தில் நான் இதை முற்றும் மறந்திருந் தேன். நீ என்னை மேல்நாட்டுக்கு அனுப்பி என் உணர் வுக்கு விழிப்புக் கொடுத்தாய். அங்கே சென்ற பிறகு தான் என் நிலைமை - ஓர் இந்தியனின் நிலைமை - உலகத் தின் முன்னே எவ்வளவு தூரம் மதிக்கப்படுகிறது என் பதை அறிந்தேன். இந்த அவமானத்தைப் போக்க,

என் நாட்டு மக்களை உயர்த்த, என் உயிர் உள்ள வரை யில் பாடுபடப் போகிறேன். இதுதான் என் முடிவு.

"என் போக்கிற்கும் நோக்கத்திற்கும் இந்த வீடு சரியானதல்ல. இதனால் உன் அப்பாவிற்குப் பல விதங் களில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படுகின்றன. சில தினங்க ளாக அடிக்கடி இந்த யோசனை குறுக்கிடுவதுண்டு. நான் முடிவுக்கு வந்துவிட்டேன். என் கிராமத்திற்குச் சென்று கொஞ்சகாலம் தங்கியிருந்தால், அங்கே அவர் கள் வாழ்க்கையை நேருக்கு நேர் அறிந்துகொள்வதற் கும், அவர்களுக்காக அங்கேயே உழைப்பதற்கும் சௌகரியமாக இருக்கும். அதுவுமல்லாமல் நம் இருவ ருக்கும் மத்தியில் இருக்கும் விபரீதத் திரை அறுந்து விழுவதற்கும் வழி உண்டு. இந்தப் பங்களாவையும் இந்தத் தோட்டத்தையும்விட, அந்தக் கிராமத்துச் சுற்றுப்புறமும் அதனால் ஏற்படும் புது அனுபவமும் நமக்கு இன்பமாக இருக்கும். அங்கிருக்கும் ஜனங்களு டன் நாலைந்து நாள் பழகினால் நீ என் மன நிலையை அறிந்துகொள்வாய்."

சந்தானம் தன் பேச்சை நிறுத்தி, அதன் விளைவை அவளிடம் எதிர்பார்த்தான். நீண்ட பெருமூச்சுடன் மெதுவாகச் சிரித்தாள் வத்ஸலா. அந்தச் சிரிப்பு என்னவோபோல இருந்தது.

"என்ன வத்ஸலா, உன் அபிப்பிராயம் என்ன?" என்றான் சந்தானம்.

"என்னையும் உங்களுடன் உங்கள் ஊருக்கு வரச் சொல்லுகிறீர்களா?" என்று பதிலுக்கு ஒரு கேள்வி யைப் போட்டாள் வத்ஸலா.

இதுகாறும் சந்தானம் வைத்திருந்த நம்பிக்கை தவிடுபொடியாகியது. இருந்தாலும் அவன் நெஞ்சு தளரவில்லை.

"அங்கு வருவதற்கு உனக்குப் பிடிக்காமலே இருக்கலாம், வத்ஸலா! எனக்காக இந்தப் பிடிக்காத காரியத்தைத் தயவுகூர்ந்து செய். என் விருப்பத்திற்காக அங்கு வந்து ஒரு மாத காலம் தங்கி இரு. அதற்கு மேலும் உனக்கு அங்கிருக்க மனமில்லையானால் நான் உன்னைக் கட்டாயப்படுத்தவில்லை."

வத்ஸலா சற்று நேரம் பேச்சின்றி அவ்விடத்திலேயே இருந்துவிட்டு, எழுந்து தன் அறைக்குச் சென்றாள். அறைச் சன்னலின் கம்பிகளூடே பார்வை சென்றதும், கால்களும் அப்பக்கமே சென்றன. கம்பிகளைப் பிடித்துக்கொண்டு, தோட்டத்தில் இருந்த சீமைக் கொன்றை மரத்தைப் பார்த்தவாறே முணுமுணுத்தாள்.

"ஆண்கள் கடின சித்தம் படைத்தவர்கள். தாங்கள் எடுத்த காரியத்தைச் சாதிப்பதற்காக எந்த வழியானாலும் கூசாது பின்பற்றுகிறவர்கள். பெண் மனத்தைப் பற்றியும் அதன் இன்ப துன்பங்களைப்பற்றியும் அவர்களுக்குச் சிறிதும் கவலையே இல்லை. வெறும் சுயநலக் கும்பல்! அவர்கள் கெஞ்சுவதும், கேட்டுக்கொள்வதும், மன்னிப்புக் கோருவதும் அவர்களது வெற்றிக்காகவே தான். நன்றி மறப்பவர்கள்; நயவஞ்சகர்கள்!"

"வத்ஸலா!"—சந்தானத்தின் குரல் கேட்டது.

திரும்பிப் பார்த்தாள். அவன் அறைக்கு வெளியே நின்றுகொண்டு, "இதைப் பற்றி யோசனை செய்து முடிவைச் சொல்கிறாயா?" என்றான்.

"யோசனைக்கு ஒன்றும் இல்லையே! நான் அந்தப் பட்டிக்காட்டுக்கு வருவதாக இல்லை."

தலையை மேலே தூக்காமல் சந்தானம் அவ்விடத்தை விட்டு அகன்றான். மாடிப் படிகளில் அவன் கால்கள் தள்ளாடியபடியே ஏறின.

சந்தானம் கிராமத்திற்குப் புறப்படுவதை அந்த வீட்டில் எல்லோரும் தடுத்தார்கள். என்ன என்னவோ சமாதானம் கூறினார்கள். இன்னும் கொஞ்ச நாட்களா வது தங்கிவிட்டுப் புறப்படலாம் என்றார்கள்.

ஆனால் இதுபற்றி அவனிடம் ஒன்றும் பேசாதவள் வத்ஸலா ஒருத்திதான்.

# 15

"வீர மகன் சந்தானத்திற்கு!"

"ஜே!"

"தியாக புருஷன் சந்தானத்திற்கு!"

"ஜே!"

"இளைஞர் தலைவன் சந்தானத்திற்கு!"

"ஜே!"

சந்தானத்தின் கிராமத்தை ரெயில் நெருங்கும்போது, அந்த ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து இம்மாதிரிக் கோஷங்கள் வானளாவ எழுந்தன. மூன்றும் வகுப்பு வண்டி ஒன்றில் கதவின் அருகில் உட்கார்ந்திருந்த சந்தானம் பிரமித்துப் போய்த் தலையை வெளியே நீட்டினன். அவ்வளவுதான் தாமதம்; அவனை அடையாளம் கண்டுகொண்ட பழைய நண்பர்கள் அப்படியே அவனை வெளியே இழுத்தனர். கூட்டம் திரண்டு கொண்டு அவன் முன்னே கூடியது. ஒன்றன்பின் ஒன்றாய் வந்து விழுந்த மலர் மாலைகளின் சுமை தாங்காமல் அவன் திக்குமுக்காடிப் போனுன்.

பழைய நண்பர்களில் ஒருவன், ஸ்டேஷனுக்குச் சந்தானத்தை வரவேற்க வந்திருந்த புதிய பிரமுகர் ஒருவரை அறிமுகப்படுத்தினன்.

"இவர்தாம் டாக்டர் வரதன். இங்கே வந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது. உங்களைப்பற்றி இப்போதெல்லாம் அடிக்கடி விசாரிப்பார். நீங்கள் வருவதாக எனக்கு எழுதியிருந்ததை இவருக்குத் தெரிவித்த போது, இவர்தாம் இந்த வரவேற்புக்கு ஏற்பாடு செய்தவர். இந்தப் பக்கங்களிலுள்ள கிராமங்க ளெல்லாம்

இவருடைய வைத்திய சேவைக்கு என்றென்றும் கடமைப் பட்டிருக்கின்றன" என்றான்.

டாக்டர் சிரித்துக்கொண்டே, "வந்தவுடன் உங்களுக்குச் சிரமம் வைத்திருக்கிறேன். ஊரில் ஏற்பாடு செய்திருக்கும் பொதுக் கூட்டத்தில் இன்று நீங்கள் பேச வேண்டும். கொஞ்ச காலமாகவே உங்களைப்பற்றி எங்கும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது" என்றார்.

அன்று மாலைக் கூட்டத்தில் சந்தானம் எழுந்து நின்று கர்ஜித்தான். ஆண், பெண், குழந்தைகள் அத்தனை பேரும் அங்கே குழுமியிருந்தனர்.

"நீங்கள் உங்களை உணர்ந்துகொண்டீர்கள். இனி உங்களை எந்தச் சக்தியும் உங்கள் முன்னேற்றத்திலிருந்து தடுக்க முடியாது. உங்கள் உணர்ச்சியின் உற்சாகம் என்னை நாளுக்கு நாள் தீவிரமாகப் போராட்டப் பாதையில் உந்தித் தள்ளுகிறது. நமக்கு மாட மாளிகைகள் வேண்டாம்; கூடகோபுரங்கள் வேண்டாம்; ஆடம்பர அலங்கோல வாழ்க்கைச் சாதனங்கள் வேண்டாம். ஆனால் உண்ண உணவும், இருக்க இடமும், அறிவு வளர்ச்சிக்கும் அமைதி இன்பத்திற்கும் நேரமும் வேண்டும். இந்த அத்தியாவசியத் தேவைகளைக்கூட நாம் அடைய முடியாதபடி தடை செய்யும் எந்த அடிமைத் தனத்தையும் தீயிட்டுப் பொசுக்குவோம்" என முழங்கினான்.

கூட்டம் கலைந்து வீடு திரும்பும்போது புனர்ஜன்மத்துடன் திரும்பியது. இருண்டு கிடந்த கூட்டத்தவர் நெஞ்சில் ஒளி சுடர்விட்டது. விதியின் மேல் பாரத்தைப் போட்டு வெம்பியவர்களும், நம்பிக்கையற்றுத் தளர்ந்தவர்களும், கோழைகளும், சோம்பேறிகளும் புது ரத்தத்துடன் வீடு திரும்பினர்.

* * * *

வத்ஸலாவின் அறைக்குள்ளே காற்று வெளிப்புறத்திலிருந்து மிகப் பலமாக வீசியது. அந்தக் காற்றில் அவள் கையில் இருந்த செய்திப் பத்திரிகையும், அவள் நெஞ்சும் கட்டுக்கு மீறிப் படபடத்தன. பத்திரிகையில் சந்தானத்தைப்பற்றி வெளிவந்திருந்த செய்தியை ஒரு முறைக்கு நான்கு முறை படித்தாள். படிக்கப் படிக்க அதன்மேல் அவளுக்கு வெறுப்புத்தான் அதிகமாகியது.

'அவருக்கென்ன? பூமாலைகள், புகழ் மாலைகள், ஜே கோஷங்கள்! எப்போது பார்த்தாலும் கூட்டங்கள், பேச்சுக்கள், விவாதங்கள்! இந்த மாதிரிச் சந்தர்ப்பங்கள் கிடைத்தால் தம்மைப் பற்றி நினைக்க அவகாசம் ஏது? தம் வாழ்க்கையில் பங்கு கொண்டவளைப்பற்றி எண்ணிப் பார்க்க மனம் ஏது? பரோபகாரமாம், தேசமாம், தியாகமாம்! எது தியாகம்? தம்மை உயர்நிலையில் தூக்கிவைக்க உத்தேசித்தவளது நெஞ்சில் வஞ்சகமாய்க் கல்லைத் தூக்கிப் போடுவதா தியாகம்? அத்தனையும் கலப்பற்ற துரோகம்! அவரைச் சொல்லக் குற்றமில்லை; அவருடைய கிட்டாத கனவுகளை நம்பி, அவரைப் பின்பற்றித் திரிகிறதே கும்பல், அதைச் சொல்ல வேண்டும்!'

அவளது நினைவின் குறுக்கே ஸ்டெல்லாவின் இன் குரல் ஒலித்தது.

"நமஸ்காரம், வத்ஸலா!"

வத்ஸலா திரும்பிப் பார்த்தாள். ஸ்டெல்லாவும், அவள் தமையன் தாமஸும் வந்திருந்தனர்.

"வாருங்கள்; எங்கே இப்போதெல்லாம் உங்களை அடிக்கடி பார்க்க முடிகிறதில்லை?" என்று அழைத்து உட்காரச் சொன்னாள்.

அவர்கள் இருவரும் முன்போல வத்ஸலாவின் வீட்டிற்கு வருவதில்லை. 'லேடீஸ் கிளப்'பும் முன்னமேயே

மூடப்பட்டுவிட்டது. தாமஸ் மட்டிலும் சந்தானம் இருந்த போது எப்போதாகிலும் அவனுடன் வந்துபேசிவிட்டு, வத்ஸலாவிடமும் பெயருக்குக் குசலம் விசாரித்து விட்டுப் புறப்படுவான். ஸ்டெல்லாவின் விஜயமோ மிக மிகக் குறைவு.

"ஸ்டெல்லா ஏன் உங்களைப் பார்க்க வருவதில்லை தெரியுமா?" என்று சொல்லிச் சிரித்தான் தாமஸ்.

"போங்கள் அண்ணு!" என்று ஸ்டெல்லாவும் அவனைப் பிரியத்தோடு கடிந்துகொண்டாள்.

"உனக்குத்தான் பொழுது போவதே தெரியவில்லையே! ஒரு நாளைக்கு அறுபது மணி நேரம் கிடைத்தால் கூடச் சரியாயிருக்கும் போலிருக்கிறதே!" என்ருன்.

"என்ன விஷயம், ஸ்டெல்லா? சொல்லுங்களேன்!" என்ருள் வத்ஸலா.

"இதோ, என்னைக் கேளுங்கள் சொல்கிறேன்: ஸ்டெல்லாவுக்குச் சீக்கிரம் கல்யாணம். வரப் போகும் புது மாப்பிள்ளைக்கு இப்போதே பின்னல் துண்டு, கைக்குட்டை எல்லாம் டஜன் கணக்கில் தயாராகின்றன. சாப்பிடுவதற்கோ, பத்திரிகை பார்ப்பதற்கோ, பேசுவதற்கோ கூட நேரமில்லை" என்ருன்.

"சந்தோஷம் ஸ்டெல்லா! ஏன் இதை நீங்கள் இது வரையில் சொல்லவில்லை?" என்று புன்சிரிப்போடு வத்ஸலா கூறினுள். ஆனல் அதே சமயம் அவள் தனக்குள் தயங்கித் தயங்கிப் பெருமூச்சும் விட்டுக்கொண்டாள்.

மூவரும் பேசிக்கொண்டிருந்த பிறகு ஸ்டெல்லா வத்ஸலாவைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு போய், வரப் போகும் தன் கணவனுக்காகத் தான் தயார் செய்த சாமான்களை யெல்லாம் காண்பித்தாள். பின்பு தனியே அவளைத் தோட்டத்துப் பக்கம் கூட்டிச் சென்று தனக்கும் அவருக்கும் ஏற்பட்ட காதல் அனுபவங்களை யெல்லாம் ரகசியமாய் ரசனையோடு கூறினுள்.

"அவருக்குப் பூவென்றால் ரொம்பப் பிடிக்கும். தினம் ஓர் அழகான பூவை எடுத்துக் கோட்டில் வைத்துக்கொண்டு வருவார். அப்போதே கைக்குட்டைகளில் என்ன என்ன மாதிரிப் பூப்போட வேண்டுமென்றெல்லாம் எழுதி அனுப்புவார். அவர் பாடினால் இன்றைக்கெல்லாம் கேட்டுக்கொண் டிருக்கலாம். பியானோ வாசிப்பும் அப்படித்தான். கிராப்புத் தலை நிமிஷங்கூடக் கலையக் கூடாது. பௌடர், ஸெண்டு, சலவை கலையாத உடுப்பு எல்லாம் ஒரே அமர்க்களம்! - இவை யெல்லாம் மனுஷரின் சந்தோஷத்துக்கு மிக மிக முக்கியம் என்று வேறு விவாதிப்பார். ஆனால் எனக்கு என்னவோ கொஞ்சம் சந்தேகம். இந்த ஆண்கள் தங்கள் காதல் வாழ்க்கையில் மட்டும் இப்படியெல்லாம் வேஷம் போட்டு விட்டுக் கல்யாணமானவுடன் மேல்துண்டுகூடப் போடாமல் பேனும் கையுமாய் உட்கார்ந்துவிடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றாள்.

அன்றைக்கு இரவு வத்ஸலா சரியாகத் தூங்கவில்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் உள்ளம் ஊசலாடிக்கொண் டிருந்தது. பெண்மையின் மெல்லிய நினைவுகள் இரவின் நேரம் அதிகரிக்க அதிகரிக்கக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தேய்ந்து போய், ஸ்டெல்லாவின்மீது அனுதாபமாக மாறியது.

'பாவம், ஸ்டெல்லாவுக்கு ஆண்களைப்பற்றி ஒன்றும் தெரியாது. அவர்களுடைய வெளிப் போர்வையைக் கண்டு மயங்கி இல்லாத இன்பக் கனவுகளை யெல்லாம் காண்கிறார். இந்தச் சமயத்தில் நாம் வேறு எதற்கு உண்மையைச் சொல்லிக் கலங்கவைக்க வேண்டும்? நாமும் அப்படித்தானே முன்பெல்லாம் ஆகாயத்தில் மாளிகைகள் எழுப்பித் தனிமையில் மகிழ்ந்திருந்தோம்? - ஆம், வாழ்க்கையிலேயே எல்லா ஸ்திரீ புருஷர்களுக்கும்

பாகனேரி

அந்த இளமைக் கனவு ஒன்றுதான் ஆதாரமாகவும் போலிருக்கிறது. தூரத்துப் பச்சை கண்ணிற்கு அழகுதான். அந்தப் பசுமையைக் கண்டு இந்த இடைக் காலத்திலாவது ஸ்டெல்லா மகிழ்ந்திருக்கட்டுமே!"

* * * *

ஆண்களைப்பற்றி அவள் கொண்டிருந்த அபிப்பிராயம் பன்மடங்கு ஸ்திரப்படுவதற்காகவோ என்னவோ, சில மாதங்கள் கழித்து இந்த வேடிக்கையான சம்பவம் நடந்தது.

ஒரு நாள் தாமஸ் மேஜையின்மீது விட்டுப் போயிருந்த புஸ்தகத்தை வத்ஸலா எடுத்துப் புரட்டும்போது அதிலிருந்து அழகான சிறு கடிதமொன்று விழுந்தது. அது ஒரு காதற் கடிதம்! வத்ஸலாவுக்கு அவன் எழுதிய கடிதம்! என்னவெல்லாமோ கண்டபடி எழுதிக் குவித்திருந்தான். அவளுடைய அழகு, பேச்சு, சகவாசம் இவற்றின் மூலம் எப்படித் தன் நெஞ்சைப் பறி கொடுக்க நேர்ந்தது என்பதை எழுதி, அதனால் தான் தவிக்கும் தவிப்பையும் குறிப்பிட்டிருந்தான்!

வத்ஸலாவுக்குப் பற்றிக்கொண்டு வந்தது.

"ஓ! வெட்கங் கெட்டவன்; காதற் கடிதம் எழுதுகிறானும், காதற் கடிதம்! யாருக்குக் காதற் கடிதம்? கல்யாணமாகிய ஒருத்திக்கா? காதல் என்பதற்கு அவன் அகராதியில் என்ன அர்த்தம் செய்துகொண்டிருக்கிறான்? எந்த வகையில் அவன் என்னைக் காதலிக்க முடியும்? எப்போதாவது நான் அப்படி நடந்துகொண்டேனா? ஸ்டெல்லாவின் தமையன் என்ற காரணத்தால் அவனை அறைக்குள் விட்டதல்லவா தவறாகிவிட்டது? என்னிடம் இத்தனை நாள் பழகிய பின்பும், எனக்குக் காதற் கடிதம் எழுத அவனுக்கு என்ன துணிவு! பார்த்தால் ஒன்றும் அறியாதவன்போல் இருக்கிறான்;

கண்ணியமாகப் பேசுகிறுன் ; இதற்கு மத்தியில் இந்த அற்ப அசட்டு ஆசை வேறு ? இங்கே அவன் வரட்டும். நல்ல புத்தி புகட்டுகிறேன் !"

கடிதம் எழுதிவிட்டு ஒரு வாரம் வரையில் தாமஸ் வத்ஸலாவின் பங்களாவுக்கே வரவில்லை. ஆளை அனுப்பி அவனைத் தனிமையில் வரச் சொல்லி, "இந்தாருங்கள், இந்தக் கடிதத்தைக் கொண்டுபோய் நெருப்பில் போட்டுக் கொளுத்துங்கள். இதைப் பற்றி யாரிடமும் நான் சொல்ல விரும்பவில்லை. உங்களை நான் எதற்காக இப்போது கூப்பிட்டனுப்பினேன் என்றுல் இனிமேல் இங்கே வராதீர்கள் என்று சொல்வதற்காகத்தான்" என முகத்தில் அறைந்தது போல் பேசி அனுப்பினுள்.

அவளுடைய கோபாக்கினியில் அன்று நெய் பொழிவதற்கென்றே சந்தானத்திடமிருந்து கடிதமும் வந்திருந்தது. அதில் அவன் எழுதியிருந்தான் :

அன்பார்ந்த வத்ஸலா,

சென்ற இரண்டு கடிதங்களுக்கும் உன் பதில் வராதது கண்டும் இந்த மூன்றுவது கடிதம் எழுதுகிறேன். இதைப் படித்த பின்பாவது என் நிலைமை உனக்கு வெளிப்படையாகத் தெரியும். இதை நீ உணர்ந்து மனமாற்றம் கொள்ளவில்லையானுல் அது நம் இருவரது துரதிருஷ்டமுந்தான்.

உன்னுடைய தேவை எனக்கு இப்போது மற்றெல்லாச் சமயங்களையும் விட அதிக அவசியமாக இருக்கிறது. உன்னைக் காண, உன்னை வரவேற்க நானும் இந்த ஊராரும் ஆவலாக இருக்கிறோம்.

நான் இந்தக் கிராமத்தில் சில முக்கியமான மாறுதல் விஷயங்களில் ஈடுபட்டுக் கொஞ்சம் பலனும் கண்டிருக்கிறேன். இன்னும் ஆறுமாத காலம் இங்கு இருந்தால் பல நன்மைகளை இம்மக்களுக்குச் செய்து

கொடுக்க முடியும். இதன் மத்தியில் நீயும் அருகில் இருந்தால் என் கவனம் ஒன்றிலும் கலைக்கப்படாமல் என் நோக்கத்தின் வழியே செல்லும்.

என் போக்கிற்குத் தகுந்தாற் போல், உன் விருப்பத்திற்கு எதிராக, உன்னை நான் மாற்றிக்கொள்ளச் சொல்லவில்லை. நீ அருகில் மட்டும் இருந்து என்னை என் வழியே சந்தோஷமாய்ப் போக விடு. உன் இஷ்டத்திற்கேற்ற வாழ்க்கையை நீ இவ்விடமிருந்தே நடத்தலாம்.

உன் அன்புள்ள
சந்தானம்.

வத்ஸலா கடிதத்தின் மத்தியிலிருந்த இந்த ஒரு வாக்கியத்தைத் திரும்பவும் கோபத்தோடு விழித்து நோக்கினாள்: "உன்னுடைய தேவை எனக்கு மற்ற எல்லாச் சமயங்களையும்விட அதிக அவசியமாக இருக்கிறது!" பார்த்துவிட்டுத் தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

"சற்று முன்னே வந்து போன பைத்தியக்கார வாலிபனின் 'காதற்' கடிதத்திற்கும், இவர் தம் மனைவிக்கு எழுதியிருக்கும் இந்தக் கடிதத்திற்கும் என்ன வித்தியாசம்? அவர்களுக்குத் தேவை! ஆண்களுக்குத் தேவை! ஆம், பெண்கள் ஆண்களின் தேவைப் பொருள்! அதுவும் அவர்கள் சமயத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்றாற் போல். இதை எழுத அவருக்கு எப்படிப் புத்தி போயிற்று?"

# 16

ஆம், சந்தானத்திற்கு அதை எழுத எப்படிப் புத்தி போயிற்று ?

சந்தானம் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தபடியே தன் அறைக்கு வெளியில் தெரிந்த அடிவானத்தை நோக்கினன். அப்போதுதான் லேசாகத் தூற்றல் விழுந்து ஓய்ந்ததால் எங்கும் மஞ்சள் ஒளி வெள்ளம் பாய்ந்தது. இந்த மாதிரி மாலை நேரங்களை அவன் அந்தக் கிராமத்தில் அனுபவித்து எத்தனையோ வருஷங் களாகிவிட்டன. மீண்டும் இப்போதுதான் அவனுக்கு அதை வரவேற்று ரசிப்பதற்குச் சந்தர்ப்பம் நேர்ந்தது.

கீழ்வானத்திலே ஒரு வில் தோன்றி யிருந்தது. அதைச் சுற்றிலும் சின்னஞ்சிறு குட்டி மேகங்கள் மச்ச வர்க்கம் போல் மிதந்து திரிந்தன. அந்த மேகக் கூட்டங்களின் மத்தியில், வானவில்லின் அருகே ஒரு கற்பனைக் கன்னி நின்று புன்னகை பூத்தாள். அவ ளையே விழுங்கின சந்தானத்தின் கண்கள்.

அவள் யார் ? - இது மட்டிலும் நிச்சயம். அவள் வத்ஸலா அல்ல.

பின்பு ? - அவள் கனகம் ! இது யார் இந்தக் கனகம் ?

முதல் முதலில் சந்தானம் டாக்டர் வரதன் வீட்டிற் குச் சென்றிருந்தபோது அவர் அவளை அறிமுகப்படுத் தினர். "கனகம் என் தங்கை. சில வருஷங்களுக்கு முன்பு கணவன் இறந்துவிட்டான். அதிலிருந்து என் னுடன்தான் வாசம். என்னை எவ்வளவு தூரம் இங்கே

தெரியுமோ அதைப் போல் பெண்களிடையே கனகத்தைத் தெரியும். வைத்திய வேலையில் எனக்கு உதவியாக இருப்பதுடன், பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆட்டம், பாட்டு எல்லாம் கனகத்தாலே தான்" என்றார்.

அனுதாபத்தோடு சந்தானம் கனகத்தின் முகததைப் பார்த்தபோது அதில் மெல்லிய சோகத்திரை படர்ந்திருந்தது. அதை மறைக்க முயலாமலே அவள் சந்தானத்தைப் பார்த்து வணங்கினாள். வெள்ளை உடை; ஒல்லியாய், நடுத்தர உயரத்துடன் தந்தத்தால் செய்த மோகினிச்சிலைபோல் இருந்தாள். கண்களின் கரு வட்டங்களில் வசீகரம் மின்னியது. சந்தானம் அதையெல்லாம் கவனிக்கவில்லை. அதற்குமேல் அவளைப் பற்றி நினைக்கவும் இல்லை.

ஆனால் சந்தர்ப்பம் அவர்களை அடிக்கடி ஒன்று சேர்த்தது. டாக்டரின் துணையும் கனகத்தின் உதவியும் சந்தானத்தின் தொண்டுகளுக்கு வேண்டியிருந்தன. அதனுடன் நட்பின் தொடர்பு வேறு சந்திக்கும் சந்தர்ப்பங்களை அவர்களுக்கு நிறையக் கொடுத்தது.

தனிமையில் சந்தானத்திற்குக் கனகத்தின் நினைவு வந்தால் அது வெறும் அனுதாபத்துடன் நின்றுவிடுவது வழக்கம். 'பாவம்! அழகு, இளமை, கல்வி, குணம் இத்தனையும் இருக்கின்றன; இருந்தும் அவளுக்கு மகிழ்ச்சி இல்லை' என்று கவலைப்பட்டுக்கொள்வான். இந்த அனுதாபம் அதன் எல்லையைக் கடந்து போகாமல் மிகக் கவனமாக இருந்து வந்தான்.

ஆனால் கனகத்தின் எதிரில் சந்தானத்திற்குச் சந்தோஷமாகப் பொழுது போயிற்று. கனகமோ அதற்கு நேர்மாறாக இருந்தாள். அவன் பக்கத்தில் இருக்கும் போதே சில சமயங்களில் அவள் தன்னை மறந்து நீண்ட மௌனத்தில் ஆழ்ந்துவிடுவாள். அவள் இருதயம் மட்டும் கட்டற்றுத் துடிதுடிக்கும்.

"என்ன கனகம், பேசாதிருக்கிறீர்களே!" என்பான் சந்தானம். அப்போதுதான் அவள் கனவு கலையும். தன்னுடைய மௌனத்துக்காக வெட்கப்பட்டுக் கொண்டு, "ஒன்றும் இல்லை" என்று மழுப்பிவிடுவாள்.

போராடும் உள்ளத்தை எத்தனை தினங்கள் கட்டாயப்படுத்தி மூட முடியும்? ஒரு நாள் அதன் கதவு லேசாகத் திறந்துகொண்டது.

அன்றைக்கும் கனகம் அதே போலத்தான் மௌனத்தில் விழுந்து கிடந்தாள். சந்தானமும் அதே கேள்வியைத்தான் கேட்டான். "ஏனோ, இப்போதெல்லாம் எனக்கு இதே வழக்கமாகிவிட்டது. உங்களிடம் எவ்வளவோ பேச வேண்டுமென்று நினைத்துக்கொண்டு வருகிறேன். வந்தவுடன் என்னை அறியாமலே அந்த மௌனம் என்னைச் சூழ்ந்துகொள்கிறது" என்றாள்.

இப்படிச் சொன்ன பிறகுதான், 'ஏனோ இதைச் சொன்னோம்' என்று அவளுக்குத் தோன்றியிருக்க வேண்டும். குபீரென்று முகம் நாணத்தால் வியர்த்தது.

சந்தானம் பெருமூச்சு விட்டான்.

இருதயத்தின் அசைவுகளைப் புறப்புலன்கள் ஒன்றுமே வெளியில் தெரிவிக்க வேண்டியதில்லை. அது ஒன்றே தனது காந்த சக்தியால் துணை தேடிக்கொள்ளும் வழியை இயற்கையில் பெற்றிருக்கிறது. கனகத்தின் மார்பகம் தனக்குள் தானே இதுவரை துடித்தாலும், அதன் எதிரொலி சந்தானத்தின் நெஞ்சைத் தாக்குவானேன்?

உள்ளத்தின் வேட்கையிலிருந்து மீளுவதற்காகத்தான் அவன் வத்ஸலாவுக்கு மேற்கண்டவாறு எழுதியிருந்தான். "உன் தேவை மற்ற எல்லாச் சமயங்களையும்விட மிக அவசியமாக இருக்கிறது" என்று குறிப்பிட்டிருந்தான். ஆனால் வத்ஸலா இதற்குச் செய்து கொண்ட அர்த்தமோ?............

மஞ்சள் வெயிலும் வானவில்லும் சந்தானத்தைச் சாய்வு நாற்காலியில் வைத்துத் தாலாட்டின. சமீபத்தில் தட்டில் வைத்திருந்த பழங்களில் ஒன்றிரண்டை எடுத்துச் சாப்பிட்டுவிட்டுப் பாலை அருந்துவதற்காகக் கூஜா மூடியைக் கழற்றினான்.

"நமஸ்காரம்" என்ற குரல் கந்தர்வகானம் போல் பின்புறமிருந்து வந்தது.

திரும்பினான். கையில் அழகான ஒரு போட்டோ ஆல்பம், காலில் சிறு செருப்பு, முகத்தில் புன்னகை - இவற்றுடன் நின்றுகொண்டிருந்தாள் கனகம். அவள் கரங்கள் இன்னும் குவிந்த வண்ணமே இருந்தன.

"வாருங்கள் கனகம்; சரியான சமயத்தில் வந்தீர்கள்" என்று அருகே உட்காரச் சொல்லிவிட்டு, பழத் தட்டை நகர்த்தி வைத்துத் தம்ளரில் பாலையும் ஊற்றினான்.

"பார்க்கலாமா?" என்ற கேள்வியுடன், ஆவலோடு அந்த ஆல்பத்தைச் சந்தானம் எடுத்தபோது, "உங்களுக்குக் காண்பிப்பதற்குத்தான் கொண்டு வந்திருக்கிறேன்" என்றாள்.

உள்ளே அநேகமாய்ப் புகைப்படங்கள் நிறைந்திருக்குமென்று நினைத்தான். ஆனால் முதல் பட்டத்தைப் பார்த்தவுடனேயே அவன் கவனம் அதற்குமேல் ஓடாமல் அங்கேயே தங்கிவிட்டது. ஆச்சரியத்தோடு அதைக் கூர்ந்து நோக்கிவிட்டு, "இதை யார் எழுதியது கனகம்?" என்றான்.

"உங்களுக்குத்தான் சிற்பம் சித்திரமென்றால் ரொம்பப் பிடிக்குமென்றீர்களே; அதற்காகத்தான் கொண்டு வந்தேன். முன்பெல்லாம் எனக்கு இங்கே நிறைய நேரம் இருந்தது. இதே பைத்தியமாய் உட்கார்ந்து எழுதிக்கொண் டிருந்தேன்..."

முதல் படத்திற்கு "உதய கீதம்" என்று தலைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. கீழே, "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்" என்ற வீரகவியின் வாக்கியங்கள். படத்தில் உதய சூரியனின் கோமளப் பொன்னுருவம், அது கண்டு மலரும் தாமரை, பாடும் பறவைகள், உயிர்ப்புக் கொண்டெழும் உலகம்.

ஒவ்வொன்றாய்ப் புரட்டிக்கொண்டே போனான். ஒன்றுக்கொன்று ஒப்பிட முடியாத படங்கள். எல்லாம் பாரதி பாடல்களின் இரண்டொரு வரிகளை அடிப்படையாகக் கொண்டவை.

அதில் கடைசிப் படம்:

"எப்போது வருவான்?" என்ற தலைப்புடன், கீழே கண்ணன் பாட்டின் இந்தப் பகுதி காணப்பட்டது:

**"கனவு கண்டதிலே - ஒருநாள்**
**கண்ணுக்குத் தோன்றாமல்**
**இனம் விளங்கவில்லை - எவனோ**
**என்னகந் தொட்டுவிட்டான்!"**

பாட்டையும் படத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருந்தான். படத்தில் தோழியிடம் தலைவி வருந்திக் கூறுகிற பாவம். விரக தாபத்தினால் வெந்து தணியும் அவள் முகத்தில்தான் எத்தனை இன்ப வேதனை! அது படமா? அல்ல; உயிர்கொண்ட சித்திரம்.

சந்தானத்தின் நினைவுகள் கிறுகிறுத்தன. தடுமாற்றத்தைத் தவிர்க்க முடியாமல், "கனகம்!" என்றான். அந்தக் குரலில் எத்தனையோ உணர்ச்சிக் குவியல்கள் புதைந்து கிடந்தன.

கனகம் தலையைக் கவிழ்த்துக்கொண்டிருந்தாள். குரல் வந்தவுடன் மெதுவாகத் தலையைத் தூக்கித் தன் பரந்த கண்களால் அவனைப் பார்த்தாள். தன்னுடைய

பிரதிபிம்பத்தைதயேதான் அவள் அந்தப் படத்தில் வரைந்திருந்தாளா ?

இருவரும் வெகு நேரம் பேச்சற்ற அமைதியில் முழு கினார்கள் ; இருவரும் பெருமூச்சு விட்டார்கள் ; இருவரும் சம்பந்தம் இல்லாமல் தங்கள் பார்வையை மேலும் கீழும் நாற்புறமும் சுழற்றினார்கள். இருவரும் தாங்கள் இருந்த அறை அப்படியே ஆகாயத்தில் ஜிவ் வென்று கிளம்பிப் பறப்பதாக உணர்ந்தார்கள்.

# 17

வாசலில் கார் வந்து நின்ற சத்தம் இருவரது அமைதியையும் கலைத்தது. அதனுடன் தடதடவென்ற பூட்ஸ் சத்தமும், "மிஸ்டர் சந்தானம் உள்ளே இருக்கிருரா?" என்ற கேள்வியும் அறைக்குள் எட்டின. சந்தானம் எழுந்து கதவருகில் வந்தான். பக்கத்துக் கிராமத்துப் போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர் அங்கே தோன்றியிருந்தார்.

அவரிடமிருந்து பெற்ற ஓர் உத்தரவைச் சந்தானம் சற்று உரக்கப் படித்தான். சில தினங்கள் முன்பு சந்தானம் செய்த பிரசங்கம் ஒன்றுக்காக அவனைக் கைது செய்யும்படி அதில் எழுதியிருந்தது. கனகம் இதைக் கேட்டவுடன் உயிரற்ற பிரேதமாகிவிட்டாள்.

இதற்குள் போலீஸாரைப் பார்த்த ஊர் முழுவதும் அங்கே திரண்டுவிட்டது. டாக்டர் வரதனும் வந்து சேர்ந்தார். வாசலில் ஒரே ஆர்ப்பாட்டம்.

சந்தானம் வெளியே வந்தான். "நான் ஆரம்பித்த வேலை பாதியில் இருக்கிறது. அதை டாக்டர் வரதன் செய்து முடிப்பார். என்னைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம். இந்தக் காலத்தில் பொதுப்பணியில் ஈடுபட விரும்பும் எவருக்கும் இத்தகைய கொடுமைகள் விளைவிக்கப்படுவது சகஜந்தான். இதையெல்லாம் நான் ஏற்கனவே எதிர்பார்த்துத்தான் இருந்தேன்."

சந்தானம் காரில் ஏறும்போது கனகத்தைப் பார்த்தான். மற்றவர்களிடம் சொல்லிக்கொண்டது போலவே, "போய் வருகிறேன், கனகம்" என்ருன்.

"போய் வாருங்கள்" என்று கண்ணீருடன் பதிலளித்தாள் அவள்.

கார் புழுதிக் கூட்டத்திற்குள் புதைந்தது. "சந்தானத்திற்கு ஜே!" என்னும் ஆவேசக் குரல் வானத்தை முட்டியது. வெறிகொண்ட ஜனத்திரள் அதன் பின்னாலேயே சற்றுத் தூரம் ஓடிக் களைத்துத் திரும்பியது.

கனகம் அப்படியே நின்றாள். வானத்து உச்சியில் சிறகடித்துக்கொண்டிருந்த அவளது உள்ளப் பறவை அம்பு பட்டுத் தலைகீழாய்த் தரையில் பாய்ந்தது!

சந்தானத்தைக் கோர்ட்டில் விசாரித்தார்கள். அவனுக்கு விடுதலை கிடைத்தது. விடுதலை போலீஸாரிடமிருந்தல்ல; கனகத்திடமிருந்து! அந்த விடுதலை ஒரு வருஷக் கடுங்காவல் என்னும் உருவத்தில் வந்தது. அதைச் சுதந்தரமாக அனுபவிக்கச் சந்தானம் சிறை அறைக்குள் தள்ளப்பட்டான்.

சந்தானம் சிறைப்பட்ட செய்தி வத்ஸலாவின் இருதயத்தில் இடியாய் இடித்தது. ஆனால் ஒரு கணத்திற்குத்தான்; அடுத்த விநாடி அது சூறாவளியாக வீசியது.

"ஒரு வருஷக் கடுங் காவலா? அனுபவிக்கட்டும்! தாராளமாக அனுபவிக்கட்டும்! ஒரு வருஷமல்ல; ஒன்பது வருஷம் அனுபவிக்கட்டும்! - அவருக்கு மாலை போட்ட ஜனங்களெல்லாம், அவரை வரவேற்று உபசரித்தவர்களெல்லாம், அவரது பேச்சுக்குக் கைதட்டியவர்களெல்லாம் இப்போது என்ன செய்யப் போகிறார்கள்? - ஆம், இப்படியே உற்சாகமூட்டி ஒவ்வொருவராய் நெருப்பில் தள்ளுவார்கள்! இவர்களுக்கு இதுதான் தெரியும். தியாகமாம்! யாருக்குத் தியாகம்? எதற்குத் தியாகம்?"

சூறாவளி ஓய்ந்து மீண்டும் அமைதி தோன்றியது. அந்த அமைதியிலே அவள் பெண்மை சற்றுத் தலைகாட்டியது.

உள்ளம் பொங்கித் தொண்டையை அடைக்க, அவள் கரங்களுக்குள் தலையைப் புதைத்துக்கொண்டு கண்ணீர்

வடித்தாள். என்றும் கண்ணில் தண்ணீர் வைக்காத வள் அன்று வெள்ளமாய்ப் பெருக்கினுள். தேம்பித் தேம்பி அழுதாள். "சிறைச்சாலை எப்படி இருக்கும்? அங்கே என்ன என்ன கட்டுப்பாடுகள்? என்ன என்ன விதிகள்? சட்டம் அங்கே எந்த முறையில் பிரயோகிக்கப் படும்? ஐயோ! அவருக்குச் சிறைச்சாலையா? - ஒரு வருஷம்!"

பயங்கரமான பல நினைவுகளின் நிழல்கள் தங்கள் முழுத் திறனையும் அவளிடம் பிரயோகித்தன. இரண்டு மூன்று இரவுகள் அவளுக்குப் பகலாகவே இருந்தன. இரவின் மத்தியில் எழுந்து நின்று வெளியில் கவிந்திருக் கும் இருளையே ஊடுருவிப் பார்ப்பாள். அது அவளுக் குச் சொற்ப சாந்தியாக இருந்தது. இருள்; இருள்; இருள்! ஆம், எங்கும் ஒரே இருளின் ஆட்சிதான்! மனிதன் தானே வலிய இழுத்து அந்த இருட் போர்வை யைத் தன்மேல் போட்டு மூடிக்கொண்டு, அதற்குள் கிடந்து முனகுகிறுன்!

"அவர் அங்கே கட்டாந்தரையில் கிடப்பார்; கிடக் கட்டும்! யார் அவரை அப்படித் துன்புறச் சொன் னது? தாமே வருந்தித் தேடிக்கொண்ட சுகமல்லவா? அனுபவிக்கட்டும்!"

வத்ஸலாவுக்கு எதற்கெடுத்தாலும் சிடுசிடுப்பு. ஒன் றிலும் பிடிப்பு இல்லை; ஒன்றிலும் உற்சாகம் இல்லை; நேரத்திற்கொரு விதமாக அந்த வீட்டையே தன் அதி காரத்தால் ஆட்டி வைத்தாள்.

ஒரு முறை அவள் அப்பா அவளிடம் நெருங்கி, "மாப்பிள்ளையைப் போய்ப் பார்த்து வரலாம்; வரு கிருயா? அனுமதிக்கு எழுதிக் கேட்கிறேன்" என்ருர்.

அப்பாவின் முகத்தை விசித்திரமாய் அவள் நோக் கினுள். பின்பு, "தாராளமாய் உங்கள் மாப்பிள்ளையைப்

போய்ப் பார்த்து வாருங்கள். நான் வரத் தயாராக இல்லை" என்றாள்.

ஆம்; அதே கணவனுக்காக் அவள் கண்ணீர் வடித்தாள். அவனுக்காகவே ஏங்கித் தவித்தாள். அவனுடைய போக்கினாலேயே இவ்வளவு தூரம் பொறுமையற்றவளாய் மாறிவிட்டாள். ஆனால் அதே கணவனை இப்போது சிறையில் சென்று பார்க்க மறுக்கிறாள்! இத்தகைய கண்டுகொள்ள முடியாத ரகசியங்களும் சிக்கல்களும் பெண்களின் மனசிற்கென்றே அலாதியான உரிமை பெற்றவை. இதை அறிந்துகொள்ள முயலும் எந்த ஆண்பிள்ளையும், முடிவில் தன் முயற்சியில் சிந்தனை சக்தியை இழக்காமல் இருந்தால் அதுவே போதும்.

ஸ்டெல்லா அவளுடைய அப்பாவிடம் கேட்டுத் தெரிந்த விஷயத்தை வத்ஸலாவிடம் கூறினாள்: "நீங்கள் அவரைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாதீர்கள். ஐ. ஸி. எஸ். போய்த் திரும்பி வந்தவர் அல்லவா? அவருக்கு எல்லாச் சௌகர்யமும் அங்கே உண்டு. வீட்டில் இருந்தால் எப்படி இருப்பாரோ, அதைவிடப் பன்மடங்கு சுகமாக இருப்பார். ஜாக்கிரதையாக அவரைப் பார்த்துக்கொள்வார்கள்" என்றாள்.

"அவர் எப்படிப் போனால் எனக்கு என்ன ஸ்டெல்லா? அவரைப்பற்றி எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை. எக்கேடாவது கெட்டுப் போகட்டும். அவரவர் செய்ததற்குப் பலனை அவரவர் அனுபவிப்பார்கள்" என்று வெறும் வேதாந்தம் பேசினாள் வத்ஸலா. ஆனால் உள்ளுக்குள் ஒரு நாள் ஒரு யுகமாக இருந்தது. நிலைமை இப்படியே இருந்தால் இரண்டு நாளில் பைத்தியம் பிடித்துவிடும் போல இருந்தது.

நல்ல வேளை; சமயம் பார்த்துச் சுபத்திரா கடிதம் எழுதியிருந்தாள்.

"உனக்கு என்ன வேலையோ, நான் ஆறு மாதங்களுக்கு முன்பு போட்ட கடிதத்திற்கு நீ பதில் எழுதவில்லை. இப்போது உன் கணவரும் சிறை சென்றுவிட்டார். நீ அங்கே ரொம்பக் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பாய். பொழுது போவது சிரமமாக இருக்கும். ஆகையால் உடனே புறப்பட்டு இங்கே வா. அவசியம் வா. இதற்கும் நீ சும்மா இருந்தால் நானும் என் வீட்டுக்காரரும் உன்னை இங்கே அழைத்து வர உன்னிடம் புறப்பட்டுவிடுவோம். உன்னைப் பார்க்க இங்கே அப்பா அம்மாவுக்கு ஆவல். அடுத்த தபாலில், வரும் தேதியை எழுதிப் போடு."

வத்ஸலா துளிக்கூட யோசனை செய்யவில்லை. ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டுப் புறப்படத் தயாரானாள்.

# 18

வத்ஸலாவை அழைத்துச் செல்ல ஸ்டேஷனுக்கு வந்திருந்த சுபத்திராவும் ராமசாமியும் அவள் கொண்டுவந்திருந்த சாமான்களைப் பார்த்தவுடன் பிரமித்துவிட்டனர்.

“ என்ன வத்ஸலா, எங்கள் ஊரில் ஒரு தனிக் குடும்பம் வைத்து நடத்தப்போகிருயா? இவ்வளவு சாமான்களும் என்ன?” என்ருள் சுபத்திரா.

“ ஒன்றும் இல்லை; வெறும் காய்கறிகளும் பழங்களும்......” தம்பதிகள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கண்களாலேயே சிரித்துக்கொண்டனர்.

ஒற்றைமாட்டு வண்டியில் பெரும் பகுதி பழக் கூடைகளுக்கே சரியாக இருந்தது. “ நீங்கள் இருவரும் வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள்; நான் நடந்து வருகிறேன்” என்ருன் ராமசாமி.

“ இல்லை, வத்ஸலா மட்டுந்தான் தாராளமாய் உட்காரலாம்; நானும் நடந்துவருகிறேன்” என்ருள் சுபத்திரா.

“ இங்கிருந்து ஊர் எத்தனை தூரம்?” என்ருள் வத்ஸலா.

“ ஒரு மைல்.”

“ அப்படியாளுல் நானும் உங்களுடன் நடந்து வருகிறேன். வண்டி வேணுமாளுல் முன்னுல் போகட்டும். ராத்திரி முழுவதும் நான் நன்ருய்த் தூங்கிக்கொண்டுதான் வந்தேன்.”

உதய காலத்தில் நன்ருய்ச் செப்பனிடப்பட்ட வண்டிப் பாதையில் மூவரும் மெதுவாய் நடக்க ஆரம்பித்தார்

கள். இரு புறமும் அழகிய செடிகொடிகள் அடர்ந்த புதர். அவைகளினூடேயிருந்து இரவில் கண் விழித்த காட்டு மல்லிகையின் நறுமணம் காற்றில் கலந்துகொண்டிருந் தது. வத்ஸலாவுக்கு இதெல்லாம் நூதனமான அனு பவம். "அதென்ன செடி சுபத்திரா? இதென்ன கொடி சுபத்திரா? - எங்கும் 'கம்'மென்ற வாடையாக இருக் கிறதே; எங்கிருந்து இது வருகிறது சுபத்திரா?" என்று வழி நெடுகத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும், கேள்விகள் கேட்டுக்கொண்டும் போனாள். அவள் மன மும் கண்ணும் ஆரம்பத்திலேயே இயற்கைத் தேவியால் கவரப்பட்டன.

குறுக்கே குபீரென்று முயல் குட்டி ஒன்று பாய்ந்து காதை விறைத்துக்கொண்டு ஓடியது. புதரிடுக்குகளி னின்றும் கீரிப்பிள்ளைகள் பயந்து பயந்து எட்டிப் பார்த் தன. மேலே வில்லென வளைந்திருந்த வான முகட்டி லிருந்து பளிங்கு அம்புகள் போல் கூட்டம் கூட்டமாய்க் கொக்குகள் பறந்தன. வேறு பலவிதப் பக்ஷி ஜாலங் களின் கீதம் எல்லா இடத்தையும் நிரப்பியது.

காட்டுப் பாதையைக் கடந்து, தென்னந் தோப்பை யும் தாண்டியபோது நெற் கழனிகள் சூழ ஊர் தெரிந் தது. கழனிகளிலிருந்து வந்த நடவுப் பாட்டை வத்ஸலா உற்றுக் கேட்டாள்:

**"ஊருக்கெல்லாம் உத்தமராய்**
**ஓங்கிவளர் எங்களையா!**
**ஓங்கிவரும் உத்தமர்க்கே**
**ஊன்றிவளர் செம்பயிரே!"**

வத்ஸலாவைக் கண்டவுடன் சுபத்திராவின் தாய் ஓடோடியும் வந்து தழுவிக்கொண்டாள். வேதாசலம், "வா, அம்மா, வா! தீர புருஷனைப் பெற்ற சௌபாக்கிய வதி!" என்று அன்பு கனிய ஆசீர்வதித்தார்.

அவருடைய ஆசீர்வாதம் வத்ஸலாவின் நரம்பு களில் மின்னலாய்ப் பாய்ந்து அவளை உலுக்கி எடுத்தது. அந்தக் குரலின் வேகத்தால் அவள் அவருடைய முகத்தை மீண்டும் நோக்கினாள். பதப்பட்ட உள்ளத்தின் கண்ணாடியாக இருந்தது அந்த முக விலாசம்.

"உன் கணவர் சுகந்தானா? செய்தி வந்துகொண் டிருக்கிறதா?" என்றார் மீண்டும்.

"ஆம்" என்று எப்படியோ சொல்லி முடித்தாள்.

வத்ஸலாவும் சுபத்திராவும் சுப்பரத்தினத்தின் அறையில் உட்கார்ந்திருந்தார்கள். சுப்பரத்தினம் சன்ன லுக்குச் சமீபமாய்க் கட்டிலில் படுத்திருந்தான். அவ னுடைய தோளுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய துணிக் கட்டு. அருகில் நோயாளிக்கு வேண்டிய மற்ற எல்லாச் சாமான்களும் தயாராக இருந்தன. சுபத்திரா மெல்ல விசிறியால் வீசிக்கொண் டிருந்தாள். பல்லை இறுக்க் கடித்துக்கொண்டு தன்னை அடக்கப் பார்த்தும் முடியா மல் சுப்பரத்தினம் 'அம்மா, அப்பா' என்று வேதனை யோடு முனகிக்கொண்டிருந்தான்.

சன்னலுக்கு வெளியே நொடிக்கு நூறு பேர் வந்து நின்று விசாரித்துப் போனார்கள்.

"சின்ன ஐயாவுக்கு எப்படியம்மா இருக்கு?"

"இப்போ தேவலையா அம்மா?"

"ராத்திரி யெல்லாம் கொஞ்சமாவது அசந்து தூங்கி னாரா, அம்மா?"

"ஐயோ! இந்தக் கஷ்டத்தை எப்படியம்மா இவ ராலே தாங்க முடியும்?"

"எங்க தங்க ராஜாவுக்குத் துரோகம் நினைத்த அந் தப் படுபாவி நாலு நாளைக்கு நல்லா இருப்பானா, அம்மா!"

ஆண் பெண், சின்னஞ் சிறிசுகள், கிழவன், கிழவி அத்தனை பேரும் இதை ஒரு வேலையாய் வைத்துக் கொண்டு சுப்பரத்தினத்தை வந்து பார்த்துப் போனார்கள். மருந்தே வேண்டாம்போல இருந்தது; அவர்களது உள்ளத்திலிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்க நேரும் போது சுப்பரத்தினத்திற்கு இப்படித்தான் தோன்றும். எத்தனை விசுவாசம் அந்தப் பாமர மக்களுக்கு!

பார்க்க வருபவர்களில் பலர் தங்களுக்குத் தெரிந்த மருந்து வகைகளைச் சொல்லவும் மறக்கவில்லை; வேதாசலம் கைதேர்ந்த வைத்தியர் என்பதை நன்றாய்த் தெரிந்துகொண்ட பின்னருங்கூட அவர்கள் தங்கள் சிகிச்சையைச் சொல்லத்தான் செய்தார்கள்.

உறக்கத்திற்கும் விழிப்புக்கும் மத்தியில் ஊசலாடிய சுப்பரத்தினம், சற்று நேரத்தில் சுய நினைவு பெற்று வத்ஸலாவை ஆச்சரியத்தோடு பார்த்தான்.

" என் சிநேகிதி வத்ஸலா அண்ணா! வரப்போவதாக உங்களிடம் சொல்லி யிருந்தேனே!"

" சந்தானத்தின்..........." என்றான் மெதுவான குரலில்.

" ஆம், அதே வத்ஸலாதான்!"

" அவருக்குச் சிறை! இந்தக் காலமே இப்படித்தான் அம்மா. நல்ல மனிதர்களுக்கெல்லாம் சரியான இடம் தூக்குமேடையும் சிறைச்சாலையுந்தான்! அவர் மகாதீரர். சமீபத்தில் அவருக்கு ஒரு பெரிய இடம் நாட்டில் இருக்கிறது."

சுப்பரத்தினம் முனகியபடியே வத்ஸலாவிடம் பேசினான். அவன் பேச்சைக் கேட்க வத்ஸலாவின் தலை சுழன்றது: 'அவர் மகாதீரர்! நல்ல மனிதர்......'

தன் அண்ணாவின் தோளில் இருந்த வெட்டுக் காயத்தைப்பற்றிச் சுபத்திரா சொன்னாள்.

"ஐந்து மைலுக்கு அப்பால் சிறிய ஜமீன் ஒன்று இருக்கிறது. அங்கே மது விலக்குப் பிரசாரம் செய்த தற்கு அந்த ஜமீன்தார் அளித்த பிரதிபலன் இது. ஒரு நாள் அண்ணு தனிவழியே போகையில் ஒரு குடிகாரனைக் கொண்டு இம்மாதிரிச் செய்துவிட்டார். நல்ல வேளை, தெய்வம் நம் பக்கம் இருக்கிறது; உயிர் தப்பியது."

"ஏன், கேஸ் போடக் கூடாதா?" என்ருள் கோபத்துடன் வத்ஸலா.

"விரோதத்தை எதற்காக வளர்த்துக்கொள்ள வேண்டும்? நமக்குக் காரியத்தில் கண். அந்த ஜனங்களில் பெரும் பகுதி நம் பக்கம் இருக்கிறது. அண்ணுவின் துன்பத்தைக் கேட்ட பிறகு அவர்களுக்குக் கோபம் ஜமீன்தார் பக்கம் திரும்பி யிருக்கிறதாம். அவர்களுக்கும் ஜமீன்தாருக்கும் வெறுப்பு ஏற்பட நாம் விரும்பவில்லை. ஆனல் அவர்கள் எல்லோரும் சேர்ந்து ஜமீன்தாரால் நடத்தப்படும் கள்ளுக்கடைகளைப் பகிஷ்கரிக்க வேண்டும்."

"அதற்காக என்ன செய்யப்போகிறீர்கள்? அண்ணு குணம் அடைந்தவுடன் திரும்பவும் போகப் போகிருரா?"

"அதற்குள்ளேயே ஒரு முறை போக வேண்டும். அதற்கு என் கணவர் முன்வந்திருக்கிருர். இதுதான் முதல் முறை, அவர் பொதுக் கூட்டங்களில் பேசப் போவது. அண்ணுவின் நிலை கண்டு அவரால் சகிக்க முடியவில்லை."

வத்ஸலா பேசாமல் யோசனையில் ஆழ்ந்தாள். "ஒருவர் போய் உயிருக்கே ஆபத்துடன் திரும்பியது போதாதாம்; அவர் வேறு போகிருராம்! - ஒரே மாதிரி மனப்போக்குப் படைத்த குடும்பம்!" எனத் தனக்குள் வியந்துகொண்டாள்.

# 19

சிறை செல்லு முன்பு, சந்தானம் அதை எதிர்பார்த்துச் சிறை அநுபவங்களைப் பற்றி நிறையப் புத்தகங்களைப் படித்து வைத்திருந்தான். மூன்று மாத காலம், முதல் வகுப்புக் கைதியாக, இருந்த ஒருவர், முந்நூறு பக்கம் கொண்ட ஒரு நூல் எழுதியிருந்தார். அதில், அவருக்கு எவ்வளவு இன்பமாகப் பொழுது போயிற்று, எத்தனை அழகிய புது அநுபவங்கள் கிடைத்தன என்பதை விவரித்திருந்தார். மூன்றே நிமிஷங்கள்போல இருந்ததாம் அவருக்கு அந்த வாழ்க்கை.

ஆனால் பல வருஷங்களைச் சேர்ந்தாற்போல் சிறையின் கடைசி வகுப்புக் கைதியாய் அநுபவித்த ஒருவனும் அதைப்பற்றி ஏதோ ஒரு பத்திரிகையில் சிறு கட்டுரை ஒன்று எழுதியிருந்தான். அதில் அவன் தெரிவித்திருந்ததாவது:

“மனிதன் சுதந்தரம் விரும்பும் குற்றத்திற்காக, அவனை மிருகமாக மாற்றச் சதி செய்யும் யந்திரசாலைதான் இந்தியச் சிறை. மானம் உள்ள எந்தச் சாதாரண மனிதனுக்கும் கட்டற்ற வாழ்க்கையில் பற்று இருப்பது இயற்கை. அதற்காக அவன் கிளர்ச்சி செய்தே தீருவான். அந்தக் கிளர்ச்சியை அடக்க, அவனுள்ளே எழும் மான உணர்ச்சியைத் தலை காட்டாமல் அமுக்க, அவர்கள் சிறைச்சாலை என்னும் இந்தச் செப்பிடு வித்தையைக் கையாள்கிறார்கள். அங்கே அவனுடைய சாதாரணத் தேவைகள் மறுக்கப்படுகின்றன. மனித இயல்பற்ற இரும்பு உருவங்களின் மத்தியில் அவன் விடப்படுகிறான். வாழ்க்கையின் அத்தியாவசிய விருப்பங்களான சோறு, தண்ணீர், உடைகூடச் சரிவரக் கிடைக்கா

மையால், அவனது நோக்கமெல்லாம் அவற்றின்மேல் பாய்கிறது.

"அவனுக்கு ஒருவேளை நல்ல சோறு வேண்டும்; ஒரு நிமிஷம் சிறை மதிலுக்கு அப்பால் வீசும் கட்டுப்படாத காற்றைச் சுவாசிக்க வேண்டும்; மனைவி மக்களின் முகத்தை ஒரு கணம் பார்க்க வேண்டும். அவனுடைய நோக்கமெல்லாம் இப்போது வேண்டும், வேண்டும், வேண்டுந்தான்! என்ன வேண்டும்? மனிதனின் மிக மிகச் சிறிய தேவைகள். அவன் இப்போது வெறுக்கத்தக்க அற்ப ஆசைகளால் விழுங்கப்பட்டுவிடுகிறான். அவன் சுயநலப் பிசாசு! இவ்விதம் இருக்கையில் தேசத்தைப்பற்றியும், அதன் விடுதலையைப்பற்றியும் நினைக்க அவனுக்கு எங்கே நேரம்? கதியில்லாமல் விட்டு வந்த அவன் குடும்பம் வெளியே எப்படி ஆலாய்ப் பறக்கிறதோ!

"மனிதன் ஆசாபாசங்கள் அங்கே தலைவிரித்தாடுகின்றன. அவனுடைய உண்மை உருவம் அங்கே நன்றாய்த் தெரிகிறது. சுதந்தரத்திற்காக உயிரை விடுவேன் என்று மார்தட்டிய வீரரெல்லாம் ஒரு சிறு விஷயப்பற்றினால் கீழ்த்தரமான நிலைக்குப் போய்விடுகிறார்கள்.—மனிதனை அங்கே தெரிந்துகொள்ளலாம். சிறைச்சாலை நெருப்பு! நெருப்பில் புடம்போட்ட தங்கங்களும் அங்கிருந்து வெளிவர முடியும்; நெருப்பிலே தீய்ந்துபோன ஆசைச் சருகுகளும் அங்கிருந்து பறக்க முடியும். ஆனால் நூற்றுக்கு நூறு மனிதனும் திட சித்த வைராக்கியனாய் எங்கு இருக்கிறான்? அடக்குமுறையைக் கையாள்பவர்களின் இந்த வெறுக்கத்தக்க தந்திரம் பெரும்பாலும் வெற்றி பெறுகிறதென்றே சொல்லலாம்."

அப்பட்டமான உண்மைகளைச் சொல்லியிருந்த அந்த மூன்றாம் வகுப்புக் கைதியின் அநுபவந்தான் சந்தர்னத்திற்கு ஓரளவு எச்சரிக்கையாக இருந்தது. சிறைச்சாலை அவனுக்குச் சோதனைச்சாலையாக இல்லை. யோகிக்கு எப்படி மலைக் குகையோ அப்படி அது சந்தர்

னத்திற்கு உதவியது. சிதறிப் போன சக்திகளை ஒன்று திரட்டவும், ஐம்புல வேகங்களை அடக்கியாளவும் அந்த இடம் அவனுக்கு ஏற்றதாக இருந்தது. சாந்தமும் அமைதியும் கிட்டவே சந்தானம் தன் வாழ்க்கைப் போக்கில் கம்பீரம் நிறைந்த ஒரு பாதையை அங்கிருந்து வகுத்துக்கொண் டிருந்தான். அவன் வெளியே வரும் போது பழைய சந்தானமாக வரப்போவதில்லை. பதின் மடங்கு திடம்கொண்ட அபார வலிவுள்ளவனாக வரப் போகிறான்.

சிறை சென்ற பின்பு வத்ஸலாவுக்கோ மாமனாருக்கோ அவன் கடிதம் எழுதவில்லை. மாமனார் மட்டிலும் வந்து ஒரு முறை பார்த்துச் சென்றார். "வத்ஸலா சுகமா?" என்று மாத்திரம் கேட்டுவைத்தான். தன் சிநேகிதியைப் பார்க்க அவள் வெளியூர் சென்றிருப்பதாக அவர் சொன்னபோது, அவன் முக பாவத்தில் ஒரு மாறுதலும் இல்லை. அந்த அமைதியையும், அந்த மௌனத்தையும் காண ராவ்பகதூருக்கு என்னவோ போல இருந்தது. குற்றம் செய்துவிட்டவர் போல் அவனிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

சந்தானத்தின் மனசில் எப்போதேனும் வத்ஸலாவைப் பற்றிய நினைவுகள் வந்தால் அவை திரும்பத் திரும்ப ஒரே குழப்பமாய்த்தான் இருக்கும். 'வத்ஸலாவைப் பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. மற்றப் பெண்களுக்கும் அவளுக்குமிடையே பிரமிக்கத்தக்க வித்தியாசம் இருக்கிறது. அவள் யாருக்கும் கட்டுப்படாதவள்; கட்டுப்படுத்த முடியாதவள். அவள் போக்கை இயற்கைதான் மாற்ற வேண்டும். அவளது கம்பீரக் கவர்ச்சியும், பணியாத சுபாவமும் நாட்டின் தொண்டுக்கு என்னோடு கலக்குமானால்.........அதையே நினைத்து நினைத்துப் பலன் என்ன? நான் என் செய்கையை அவளிடம் அபிப்பிராயம் கேட்ட பிறகா செய்திருக்கலாம்.

ஆனால் எதைப்பற்றியும் கவலைப்பட இது நேரமில்லை. நம்மால் அறிய இயலாத சக்தி ஒன்று நம்மைத் தன் வழியே இழுக்கிறது. அதன் வழியே நம்மை ஒப்புக் கொடுத்துவிட்டோம். அதன் இச்சைக்கு அது நம்மைப் பணியாளாக்குகிறது. அதன் வலிமை அதிகமானால் தானாகவே அவளும் அதனால் கவரப்படுவாள்; இல்லையேல் விதியின் கைவசப்பட்டு அவள் அதன் வழியே செல்லட்டும்.'

டாக்டர் வரதன் அனுமதி பெற்றுச் சந்தானத்தைப் பார்க்க வந்திருந்தார். வந்தவருக்குச் சந்தானத்தினிடம் பேச மலை மலையாய் விஷயங்கள் இருந்தன. குறிப்பிட்ட நேரத்திற்குள் சந்திப்பை முடித்துக்கொள்ள வேண்டும் என்ற கெடுபிடிக்குள் அவரிடமிருந்து முதல் முதல் வந்த செய்தி இதுதான் :

"உங்களுக்கு இதைக் கடிதத்தில் எழுதவில்லை. நானே வர இருந்ததால் நேரில் சொல்லலாமென்று இருந்தேன். கனகம் உங்களுக்குத் தன் கடைசி நமஸ்காரத்தைத் தெரிவித்துவிட்டு, என்றைக்குமே நம்மிடமிருந்து பிரிந்துவிட்டாள்" என்றார். அப்போது அவர் கண்களில் நீர் துளித்தது.

சந்தானம் வாய் திறக்கவில்லை. வெளேரென்று முகம் நிறமிழந்தது. 'கனகம் இறந்துவிட்டாளா ?' என்ற கேள்வியை அவன் புருவங்கள் கேட்டன.

"அடுத்த கிராமத்துச் சேரியிலே வைசூரி. காலையில் போனால் சாயங்காலந்தான் வீடு திரும்புவாள். 'உடம்பைப் பார்த்துக்கொள், கனகம்; அலட்சியமாய் இருக்கக் கூடாது' என்று எச்சரிக்கை செய்துகொண்டுதான் வந்தேன். என் பேச்சைக் கேட்கவோ, தன்னைப்பற்றி நினைக்கவோ அவளுக்கு அப்போது பொழுது இல்லை. வீடு தவறாமல் போய்ச் சிகிச்சை செய்துவந்தாள். அவ்வள் அவர்களைக் கடைசி வரையில் மறக்கவில்லை.

"எத்தனை உயிர்களை அவள் காப்பாற்றினாளோ, ஆனால் தன்னைக் காப்பாற்ற அவளுக்கு வழி தெரியவில்லை. என்றாலும் அம்முயற்சி கைகூடாமற் போய்விட்டது. கண்ணை மூடுவதற்கு முதல்நாள் இரவு இதைத்தான் சொன்னாள்: 'சந்தானம் அண்ணாவுக்கு என் நமஸ்காரம் சொல்லுங்கள். அவர் இப்போது ஜெயிலில் இருப்பார். மற்றவர்களுக்காக உழைப்பதிலும், அவர்களுக்காகச் சாவதிலும் இருக்கும் இன்பத்தை அவர்தாம் எனக்கு நன்றாக எடுத்துச் சொன்னார். நான் சந்தோஷமாகச் செத்தேன் என்று கூறுங்கள்' என்றாள்."

சந்தானத்தின் உடல் சிலிர்த்தது. "அந்தக் கிராமாந்தர மக்களுக்கு ஒரு பெரிய நஷ்டம்; அவர்கள் நெஞ்சில் கனகம் என்றும் சாகாமல் இருப்பாள்" என்றான். அதற்கு மேல் அவன் ஆவல் கிராமத்தின் அபிவிருத்தியை அறிவதில் சென்றது.

"உங்களுடைய தற்காலப் பிரிவே அவர்களுக்குச் சகிக்க முடியவில்லை. கனகத்தின் பிரிவும், அதன் காரணமும் வேறு அவர்கள் கண்களைத் திறந்துவிட்டன. எல்லோரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள்; சோம்பலில்லாமல் உழைக்கிறார்கள். உங்களை வரவேற்பதற்காக, விடுதலைக் காலத்திற்குள், உங்கள் லக்ஷ்யக் கிராமத்தை அவர்கள் நிர்மாணித்துவிடுவார்கள்" என்றார் வரதன்.

சந்தானத்தின் முகத்தில் அமைதியான இள நகை அரும்பியது. "தெய்வ சித்தம்" என்றான்.

டாக்டர் வரதன் ஊர் திரும்பும்போது, 'சந்தானம் இந்தச் சிறிய காலத்தில் தம்மை மாற்றிக்கொண்டிருக்கிறார். அறிவின் ஆழத்திலே அவர் சித்தம் மூழ்கியிருக்கிறது. அமைதியில் அவர் போராடி வெற்றி பெறுகிறார். மகத்தான சக்திக்கனலுடன் சிறைக் கதவுகள் அவருக்கு வழி விட்டுப் போகின்றன' என்று எண்ணமிட்டார்.

# 20

வழக்கம் போலவே மாலைப் பொழுது சோலைப்பாளையத்தில் ரம்மியமாக இருந்தது. வீட்டுத் தோட்டத்தில் வேலையாள் தண்ணீர் இறைக்க, ராமசாமி செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சிக்கொண் டிருந்தான். சுபத்திரா அவனுக்கு உதவியாய்ப் பக்கத்தில் இருந்து தோட்டத்தைச் சுத்தப்படுத்துவதிலும், களை பிடுங்குவதிலும் ஈடுபட்டிருந்தாள். தோட்டத்து மூலையில் நின்ற நுணா மரத்துக்குக் கூட்டங் கூட்டமாய்ச் சிட்டுக் குருவிகள் திரும்பி வந்து, 'கீச்சு மூச்'சென்று கொஞ்சிக் குலவிக் கொண் டிருந்தன.

சற்றுத் தூரத்தில் நின்று தம்பதிகளின் தோட்ட வேலையை வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்த வத்ஸலா தானும் அதில் கலந்துகொள்ள விரும்பினாள். "சுபத்திராவும் அண்ணாவும் இன்றைக்குக் கட்டாயம் எனக்கு ஏதாவது வேலை கொடுக்க வேண்டும்; ஏதாவது சொல்லித் தட்டிக் கழிக்கக் கூடாது!" என்று சமீபத்தில் போனாள்.

"நாங்கள் செய்வது சரியாக இருக்கிறதா என்று மேற்பார்வை செய்; அந்த உத்தியோகந்தான் உனக்கு ஏற்றது!" என்றாள் சுபத்திரா.

"ஊஹூம்; முடியாது. நீங்களாகக் கொடுக்கிறீர்களா? நானாக மண்வெட்டியை எடுக்கட்டுமா?"

"வேண்டாம் வத்ஸலா; காலில் போட்டுக்கொள்வீர்கள். இதோ இந்தக் குடலையை எடுத்து மலர்ந்திருக்கிற புஷ்பங்களையெல்லாம் பறியுங்கள்" என்றான் ராமசாமி.

வத்ஸலாவுக்கு அந்த வேலை பிடித்திருந்தது. சிரித்துக்கொண்டே செடிகளிடம் பறந்து ஓடினாள். மலருக்கு மலர் தாவித் திரியும் வண்ணாத்திப் பூச்சிபோல், அவள் செடிக்குச் செடி குதித்துச் சென்று பூப்பறித்தாள். கதையிலும் படத்திலும் வரும் ஒய்யாரமான அரசிளங் கன்னிகளின் ஞாபகம் அவளுக்கு அப்போது வந்தது. "பெண்கள் மென்மையானவர்கள்; மலர்களும் மென்மையானவை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள். அப்போதுதான் அவள் இருதயத்தின் உள்ளே இருந்து ஒரு மிருதுவான மொட்டு, மெல்ல இதழ் விரிவதுபோல் இருந்தது. ஆஹா! அதிலிருந்து கமழ்ந்த இன்ப மணம்!

அந்த மொட்டு நாழிகைக்கு நாழிகை ஒவ்வோர் இதழாய் அதிகமாக விரித்துக்கொண்டிருந்தது. அதற்கேற்றாற்போல் மணத்தின் அளவும் அதிகமாகிக் கொண்டே வந்தது. இரவு அவள் படுக்கையில் படுக்கும் போது மலரின் எல்லா இதழ்களும் மடலவிழ்ந்து விட்டன. மணம் மனத்தை மயக்கியது.

ஆம், மலர் மலர்ந்தது; மணம் சூழ்ந்தது. ஆனால்?—மணத்தினால் கவரப்பட்டு, அழகுக்கு வசியமுற்று, மது அருந்த வரும் வண்டு எங்கே? மலரின் அணைப்பிலே வெறிகொண்டு ஓங்காரமிடும் அந்த அழகிய பிராணி எங்கே? அதன் காதல் தீங்குரலை எப்போது கேட்பது? அதன் இன்ப ஸ்பரிசத்தை எப்போது உணர்வது? மலரின் முள் பலமுறை அதன் உடலில் ஏற்கனவே தைத்திருப்பதால் அது வராமலேயே போய் விடுமா?

வத்ஸலாவின் பெண்மை அவளுள்ளே விம்மியது. அன்று மத்தியான்னம் சுப்பரத்தினம் அவளிடம் தனக்குத் தன் முதல் சிறைவாசம் எப்படி இருந்தது என்பதை

வேறு சொல்லியிருந்தான். "இப்போதெல்லாம் நான் அதற்கு முற்றும் பழக்கப்பட்டுவிட்டேன். ஆனால் முதல் முறை நான் அங்கே பட்ட கஷ்டங்கள்! நெஞ்சுடன் தனிமையில் முனகி முனகிப் பைத்தியம் பிடிக்காமல் வெளிவந்தேனே, அதுவே போதும்."

வத்ஸலா புரண்டு புரண்டு படுத்துச் சற்று நேரம் அரைத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டு, மீண்டும் விழித்துக் கொண்டாள்.

அப்போது பூரண சந்திரன் வானத்து மத்திய பாகத்தை நோக்கி ஏறிக்கொண்டிருந்தான். வத்ஸலா படுக்கையில் எழுந்து உட்கார்ந்து வெளியே பார்த்தாள். தென்னந் தோப்புகளுக்கு அப்பால் அமராவதியின் நீர்ப்பரப்பு உருக்கி வார்த்த வெள்ளிக் குழம்புபோல் தெரிந்தது. இத்தனை நேரமாகியும் குடியானத் தெருவி லிருந்து வந்துகொண் டிருந்த நிலாக் கும்மி ஓயவில்லை. உள்ளத்தில் புதிதாய் முளைத்த ஆசையோடு அதை உற்றுக் கேட்கத் தொடங்கினாள்.

பாட்டின் குரல் அபூர்வமாய் இருந்தது; அதற்குத் தாளமாக இளந்தளிர்க் கரங்களின் கும்மிச் சத்தம். வார்த்தைகள் மாத்திரம் தெளிவாகக் காதில் விழ வில்லை.

வத்ஸலா நினைத்தாள்: எவ்வளவு இன்பகரமான பொழுதுபோக்கு! இந்த நிலவுக் கொள்ளையில் ஒரே வயசுப் பெண்பிள்ளைகள் சேர்ந்துகொண்டு ஆடிப் பாடு வதென்றால் எத்தனை ஆனந்தம்! அதோ, பக்கத்துப் பொட்டலில் ஆண்பிள்ளைகள் வேறு ஓடிப்பிடித்து விளையாடுகிறார்களே! இந்த விதமான உல்லாச விளை யாட்டுக்களுக்கெல்லாம் நகரத்தில் இடம் உண்டா? இந்தப் புழுதிமண்ணில் இவர்களுக்குக் கிடைக்கும் சுகத்தை நாம் அங்கே அடைய முடிகிறதா?

இதற்குள் ஞ்ம்மிப் பாட்டு நின்றது. அவர்களும் உறங்க வேண்டும்; மத்தியில் விழித்து அழும் குழந்தைகளுக்குப் பால் கொடுக்க வேண்டும்; கணவன்மார்களுடன் களித்திருக்க வேண்டுமல்லவா!

வத்ஸலா தோட்டத்தை நாடி எழுந்து நடந்தாள். கொஞ்ச தூரம் சென்றவுடனேயே அவள் நடை தடைப்பட்டுவிட்டது. அசையாமல் நின்றாள். முன்புறமும் போகவில்லை; பின்புறமும் திரும்பவில்லை. உடனே திரும்ப வேண்டுமென நினைத்தாள். ஆனால் அப்படிச் செய்யவில்லை. நல்ல வேளை, அவளை மறைத்துக் கொண்டு ஓர் முல்லைச்செடி அவளுக்குப் பாதுகாப்பளித்தது.

எதிரே சற்றுத் தூரத்தில் மணல்திட்டின்மேல் ராமசாமி உட்கார்ந்திருந்தான். அவனுடைய மார்பை அலங்கரிக்கும் பூங்கொடியாய்ச் சுபத்திரா அவன்மேல் இழைந்துகொண் டிருந்தாள். இயற்கையிலேயே ராமசாமி கவிஞன்; இப்போது காதல் வேகமும் கலந்தது. மெய்ம்மறந்து அவன் பேசினான்.

"சுபத்திரா!......நீ எனக்கு என்னவெல்லாம் தந்திருக்கிறாய் தெரியுமா? எல்லாமே தந்துவிட்டாய்! வேண்டும் என நான் கேட்பதற்கே நீ ஒன்றும் விட்டு வைக்கவில்லை. இதோ, இந்தச் செடி, கொடி, மலர், மண், மலை, இந்த ஊர், இதன் ஜனங்கள் எல்லாமே தந்திருக்கிறாய். - இதற்கெல்லாம் சிகரமாக இதோ இந்தச் சந்திரவதனம்...!"

"அடேயப்பா! நீங்கள் மட்டும்?—என் கவிஞர் எனக்குக் கவிதை தருகிறார்; நான் அவருக்கு எல்லாம் தருகிறேன்;' என்னைத் தருகிறேன்; என்னுடையது என்று தனியாக எனக்கு ஒன்று எதற்கு?"

"இல்லை சுபத்திரா, நான் சுயநலக்காரன்! நீ கொடுக்கிறாய் கவிதை; நான் அதை எனதாக்கிக் கொள்கிறேன். என் இன்பத்திற்காகவே அதைப் பாடுகிறேன்."

"இல்லவே இல்லை; உங்கள் இன்பத்திற்காக மட்டுமல்ல; உலகத்தின் இன்பத்திற்காக. உங்கள் கவிதையை உங்களைவிட நாங்கள் ஆயிரம் மடங்கு ரசிக்கிறோம் தெரியுமா? வலிமை பொருந்திய சொல் கல்லைக்கூடத் தன் அருகில் இழுத்துக் கரையச் செய்யும். சில தினங்களாக வத்ஸலாகூட உங்கள் கவிதையை ரசிக்கிறாள் என்றால் பாருங்களேன்!"

"வத்ஸலாகூட என்றால்?"

"கவிஞர்களும் ரசிகர்களும் அசல் பைத்தியங்கள்; இவர்களால் யாருக்கும் எந்தப் பிரயோசனமும் கிடையாது என்று பிரசங்கம் செய்த ஒருத்தி!"

ராமசாமி சிரித்தான். சிரித்துவிட்டு, "பாவம்! வத்ஸலா ரொம்ப நல்லவர்: ஆனால்..." என்றான்.

"ஆனால்?"

"கணவரைத்தான் அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை—"

வானம் நிலை பெயர்ந்து தலையில் விழுந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தன வத்ஸலாவுக்கு இந்த வார்த்தைகள். தனக்குள் ஒரு முறை அதை அவள் சொல்லிக்கொண்டாள். முன்னம் ஒரு தினம் அவளிடம் வாதாடிய கணவன் சந்தானமும் அதையேதான் சொன்னான்:—"வத்ஸலா, நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை!" இப்போதுகூட அவளெதிரே சந்தானம் இருந்துகொண்டு அதைச் சொல்வதுபோல் இருந்தது.

அன்றிரவு அவள் உறங்கியபோது, இரவின் பிற் பகுதியில் கனவு ஒன்று கண்டாள். அந்தக் கனவும் அவளுக்கு அதே சொற்களைத்தான் நினைவுறுத்தியது. கனவில் வத்ஸலா சந்தானத்தைப் பார்க்கச் சிறை சென்றிருக்கிறாள். சிறைக் கம்பிகளின் வழியே சந்தானம் இரு கரங்களையும் ஆவலோடு நீட்டுகிறான். அந்தக் கரங்களின் ஸ்பரிசத்தை வத்ஸலா விரும்பவில்லை. தூரத்திலேயே நிற்கிறாள். அப்போது சந்தானம் சொல்கிறான்: "வத்ஸலா, இன்னுமா நீ என்னைப் புரிந்துகொள்ளவில்லை?"

விடிந்து வெகு நாழிகையான பின்பும் இச்சொற்கள் அவளைச் சித்திரவதை செய்துகொண்டிருந்தன.

# 21

ஜமீன்தாரின் கிராமத்திலிருந்து ராமசாமியைப் பிரசங்கத்திற்கு அழைத்துச் செல்ல நிறைய ஆட்கள் வந்திருந்தார்கள். சுபத்திராவும் ராமசாமியுடன் புறப்படத் தயார் ஆனாள். அவளுக்கு வத்ஸலாவையும் அழைத்துச் செல்லவேண்டுமென்ற எண்ணம். கேட்டால் என்ன சொல்லுகிறாளோ என்று தயங்கிக்கொண் டிருந்தாள். இச்சமயத்தில் வத்ஸலாவே வந்து, "நானும் உங்களுடன் கூட்டத்திற்கு வரலாமா?" என்று கேட்கவே, "உன்னையும் அழைக்கலாமென்றே இருந்தேன்; தாராளமாய் வா; போய் வரலாம்" என்றாள். அவளுக்கு இதைப் பற்றி மிகவும் சந்தோஷம். சோலைப்பாளையத்திலிருந்து பல ஜனங்களும் அவர்களைப் பின்பற்றினார்கள்.

கூட்டம் நன்றாக நடந்துகொண்டிருந்தது. இச்சமயத்தில் ஜமீன்தார் பங்களாவில் ஒரு சிறு சூழ்ச்சியும் நடந்தது.

* * * *

"காக்கைக் கூட்டத்தைக் கலைக்க என்ன வழி தெரியுமா?" என்றார் ஜமீன்தார்.

"ஒரு கல், எஜமான்!"

"சபாஷ், போ!—இவனுக்கு ஒரு புட்டி கொடுத்தனுப்படா!" என்றார் அவர்.

அந்த ஒரு புட்டிக் கள் ஆயிரக்கணக்கான பேர் அடங்கிய அந்தக் கூட்டத்தில் தன் வேலையைக் காட்டத் தொடங்கியது. பேசிக்கொண்டு நின்ற ராமசாமியின் பக்கத்தில் சுபத்திராவும் வத்ஸலாவும் நாற்காலியில் உட்

கார்ந்திருந்தார்கள். எதிரே மெய்ம்மறந்து பேச்சைக் கேட்டு நிற்கும் மனிதத் திரள்.

"விர்...ர்...ர்!"

கூட்டத்தின் மத்தியிலிருந்து குறிப்பாக ஒரு கல் பறந்தது. குறி தவறவில்லை. மறுக்ஷணம் தலையிலிருந்து பெருக்கெடுக்கும் ரத்தத்துடன் ராமசாமி, "ஹா...!" என்று தலையைப் பிடித்தபடியே உட்கார்ந்தான். சுபத்திரா பதறிப்போய் அவனை வந்து தாங்கிப் பிடித்துக் கொண்டாள். வத்ஸலாவின் உடல் துடிதுடித்தது; உயிர் துடித்தது.

கூட்டத்தில் இதனால் பெரும் குழப்பம் ஏற்பட்டு, எல்லோரும் மத்தியில் கூடத் தொடங்கினர். அச்சமயத்தில் வீராவேசம் கொண்ட உக்கிர தேவதைபோல் வத்ஸலா மேடைமீது ஏறினாள்.

"குழப்பம் இல்லாமல் முன்போல் அமைதியாக இருங்கள். அவருக்கு ஓர் ஆபத்தும் இல்லை. அப்படி எந்த ஆபத்து வந்தாலும் அதற்குத் தயாராய்த்தான் அவர் வந்திருக்கிறார்!"

ராமசாமியின் தலையில் பட்ட கல்லைக் கையில் எடுத்துக்கொண்டு மீண்டும் கர்ஜித்தாள்.

"இதோ இந்தக் கல்லைப் பாருங்கள்; அவர் தலையின் ரத்தத்தில் தோய்ந்த கருங்கல்! 'உழைப்பின் ஊதியத்தைக் கொடுத்து, அறிவை இழக்காதீர்கள்; குடித்துக் குடியைக் கெடுக்காதீர்கள்; பெண்களின் மாங்கல்யத்தை விற்று, பிள்ளைகளைப் பட்டினி போட்டுத் தெருவில் உருளாதீர்கள்' என்று சொல்ல வந்ததற்காக அவருக்கு இந்தக் கல்! எவனோ ஒரு பேடி ஒளிந்து கொண்டு கீழ்த்தரமான இந்த வேலையைச் செய்திருக்கிறான். அவனுக்குச் சொல்கிறேன்: இதே கிராமத்தின் ஒரு மனிதனால் சகோதரர் சுப்பரத்தினம் வெட்டுப்

பட்டுச் சாவுக்கும் வாழ்வுக்கும் மத்தியில் ஊசலாடுகிறார். அடுத்தபடியாக இன்றைக்கு இந்தக் கொடுமை. இதனை யெல்லாம் எங்களது போக்கை யாரும் மாற்ற முடியாது. அதே மனிதன் இன்னும் இக்கூட்டத்தில் இருப்பானா னால் அவனுடைய் அடுத்த கல்லை நான் வரவேற்கத் தயார்!"

நெருப்பை மாத்திரம் அவள் அங்கே கக்கவில்லை. அந்த நெருப்பின் கொதிப்பில் புயலின் வேகமும் சேர்ந் திருந்தது. அவள் நெருப்பாய் எரிந்தாள்; புயலாய் வீசினாள். கூட்டத்தில் அது பற்றிக்கொண்டு ஜ்வாலை விட்டது. அங்கிருந்தோருக்கு அவள் சதையும் எலும் பும் சேர்ந்த சாதாரணப் பெண் என்னும் நினைவே இல்லை. சாக்ஷாத் காளிதேவி. உக்கிர தாண்டவம் புரிந்து ஊழிக் காலத்தை நோக்கிச் சிரிக்கும் மஹேசுவரி!

கூட்டத்தைப் பிளந்துகொண்டு ஒருவன் பைத் தியம் பிடித்தவன்போல் எதிரே ஓடி வந்தான். அடி யற்ற மரம்போல் கீழே சாய்ந்து "அம்மா, தாயே!" என்று கதறினான். அவன் எழுந்தபோது வத்ஸலாவை ஏறிட்டு நோக்கும் திடம் அவனுக்கு இல்லை.

"நான்தான் அம்மா!...அம்மா! அந்தப் பாவி நான்தானம்மா!...எஜமான் சொன்னார்; நான் கேட்டே னம்மா!"

"எஜமான்!" என்று உரக்கச் சொல்லி ஒரு பயங் கரச் சிரிப்புச் சிரித்தாள். அந்தச் சிரிப்பின் பேரலைகளில் கூட்டம் அமிழ்ந்து போய் நின்றது: "யார் அந்த எஜ மான்? ஜமீன்தார்தானே?"

"ஆம், தாயே!"

"இன்றைக்கே அவரிடம் இதுபற்றி ஒரு முடிவு கேட்டுவிட வேண்டும். எல்லோரும் உங்கள் உணர்ச்சி களைக் கட்டுப்படுத்திக்கொண்டு என் பின்னே வாருங்

கள். அவரால் காயப்படுத்தப்பட்ட இளங்கவிஞரின் பெயரால் அவரது பதிலைப் பெறவேண்டும்.''

வத்ஸலா முன்னால் நடந்தாள். ராமசாமியைத் தாங்கிய வண்டி பக்கத்தில் சென்றது. கூட்டம் சுற்றிலும் வளைத்துக்கொண்டு நடந்தது.

ஜமீன்தார் தலை நிமிர்ந்து வத்ஸலாவைப் பார்க்கவில்லை; பார்க்கவும் முடியவில்லை. அவரது எதிரே வத்ஸலாவா நின்றாள்? இல்லை; எரியும் நெருப்பு நின்றது; கொழுந்து விட்டுக் குபீரென்று பற்றுமே, அந்த நெருப்பு நின்றது. வெளியே அதன் சிவந்த பிழம்புகள் நூற்றுக் கணக்கில்.

"இதோ இங்கு ஒருவர் உங்கள் எதிரில் ஸ்மரணையற்றுக் கிடக்கிறார். வீட்டில் ஒருவர் படுக்கையில் முனகுகிறார். எதிரே கட்டக் கோவணமற்ற ஆண்களும், மானங்காக்க உடையில்லாத ஸ்திரீகளும் ஆயிரக்கணக்கில் நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களின் சார்பில் உங்கள் முடிவை நான் கேட்க வந்திருக்கிறேன்.''

நடுநடுங்கி நின்ற அவர் செவியில் இது மறுக்க முடியாத, மறுக்கக் கூடாத ஆணையின் இடி முழக்கமாகக் கேட்டது.

"நாளை முதல் இங்கே கள்ளுக்கடை இல்லை'' என்றார் தணிந்த குரலில்.

"இது இந்த நிமிஷ உணர்ச்சி அல்லவே?''

கூண்டில் நிற்கும் குற்றவாளியின் பாவனையில், "இல்லை'' என்று தலையசைத்தார் ஜமீன்தார்.

மறுவார்த்தை அவரிடம் பேசாமல் வெளியே வந்து, "நாளை முதல் உங்கள் ஊரில் கள்ளுக்கடை கிடையாது!'' என்று தெரிவித்தார். அப்போது அந்த ஜன சமுத்திரத்திடையே எழுந்த ஆரவாரத்தைப் பார்க்க வேண்டுமே!

"தாயே மகராஜி, இந்தப் பசலேக்களின் வயிற்றிலே பால் வார்த்தாயே அம்மா!"

"பெற்றுப் பெருகி நீ குறையில்லாமல் வாழ வேணும் தாயே!"

"மலே வளர்ந்தாற்போல் உன் மாங்கல்யம் வளர வேணும் அம்மா!"

இவ்விதமாக வாழ்த்திக்கொண்டே வத்ஸலாவைச் சுற்றி அந்தக் கிராமத்துப் பெண்களின் கூட்டம் சூழ்ந்து கொண்டது. அவளால் எந்தத் திசையிலும் சுலபமாகத் திரும்பிச் செல்ல இயலவில்லே. வேரற்ற மரம்போல் அவள் காலடியில் வீழ்ந்து நமஸ்கரிக்கும் எண்ணற்ற பேதைப் பெண்களேப் பார்த்தபோது அவள் நெஞ்சம் பதைபதைத்தது. எல்லோரையும் எழுந்திருக்கச் சொன்னுள்; தானே கரங்களேப் பற்றித் தூக்கி நிறுத்தினுள்; ஒரு முறை சுற்றிலும் அந்தக் கூட்டத்தை விரிந்த கண்களால் பார்வையிட்டாள்; அதே கணம் தன்னேயும் பார்த்துக்கொண்டாள். ஆ! என்ன கோரமான வாழ்க்கை!

முட்டிய வயிறுகளுடனும், எலும்பெடுத்த நெஞ்சுகளுடனும் பச்சைச் சிசுக்கள் தாய்மார்களின் வறண்ட மார்புகளேக் கவ்விக்கொண்டிருந்தன. கிழிந்த உடைகளிலிருந்து அழுக்கு நாற்றம் குப்பென்று வீசியது. சிக்குப் பிடித்துச் சடை போட்டிருக்கும் பரட்டைத் தலேகளில் பேன்கள் வழிந்தன.—ஆனுல் இவ்வளவு கொடுமைக்குப் பின்னேயும் அவர்களிடம் குற்றமற்ற, அஞ்ஞானத்தால் மூடிய, அன்பு நிறைந்த இருதயங்கள் இருந்தன!

காயம்பட்ட ராமசாமியை வண்டியின் மத்தியில் வைத்துவிட்டுச் சுபத்திராவும் வத்ஸலாவும் ஏறிக்கொண்டார்கள். சோலேப்பாளேயத்திலிருந்து வந்திருந்த ஜனங்களும் திரும்பினர். வண்டியின் பின்புறம் உட்கார்ந்

திருந்த வத்ஸலா, கண்ணுக்கு மறையும் வரையில் தங்களை வழியனுப்ப வந்திருந்த கூட்டத்தையே பார்த்துக்கொண் டிருந்தாள். அவள் கண்களில் நீர் நிரம்பியிருந்தது. அதே சமயம் சுபத்திராவும் கண் கலங்கித் தான் இருந்தாள்; ஆனால் அந்தக் கலக்கத்திற்குக் காரணம் வேறு.

இயல்பாகவே ராமசாமி பூப் போன்றவன்; இந்தச் சிறிய கஷ்டத்தை அவனால் பொறுத்துக்கொண் டிருக்க முடியவில்லை. துடியாய்த் துடித்துவிட்டான். தன் அருகில் பரிவோடு குனிந்து நோக்கும் சுபத்திராவின் சுவாசம் அவன் முகத்தில் படும்போதுதான் அவனுக்குச் சற்று ஆறுதலாக இருக்கும். கண்களைத் திறந்து அதற்கு மௌனத்தால் பதிலளிப்பான்.

கூட்டம் தூரத்து மரங்களுக்கப்பால் மறைந்தவுடன் வத்ஸலா உள்ளே வண்டியில் நோக்கினாள். தம்பதிகளின் உண்மைச் சொரூபத்தை இப்போதுதான் அவளால் உள்ளபடி உணர முடிந்தது. சுற்றிலும் இருப்பவர்களைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் கவலையுறவே இல்லை. ராமசாமியின் கரம் சுபத்திராவின் இடுப்பைச் சுற்றி வளைத்திருந்தது. சுபத்திரா லேசாக அவன்மீது சாய்ந்திருந்தாள். அவளுடைய கரம், சேலைத் தலைப்பை அசைத்து அவன் நெற்றிக்குக் காற்று வீசியது.

"எனக்கு ஒன்றும் இல்லை சுபத்திரா! ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?" என்று முனகல்களுக்கிடையே கூறினான் ராமசாமி.

"ஒரு மாதிரியும் இல்லையே; நன்றாகத்தானே இருக்கிறேன்? இரண்டு நாளில் அப்பா இதைக் குணப்படுத்தி விடுவார்" எனக் கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள் சுபத்திரா.

வத்ஸலாவின் இருதயம் பொங்கிப் பொங்கி மேலே

எழுந்து, அவள் தொண்டையை அடைத்துக்கொண்டது. குபீரென்று உள்ளிருந்து பாய்ந்து வரும் நீர்வெள்ளத்தைத் தடை செய்ய அவள் நயனங்கள் திறனற்று விட்டன. யாருடைய மார்பகத்திலாவது தலையைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மிச் சில நிமிஷம் அழுது ஓய்ந்தால்தான் அவள் துன்பமெல்லாம் கரையும்போல இருந்தது. ஆனால், அந்த மார்புக்கு உரியவன்தான் ஒதுக்கப்பட்ட தனிமையில், இருளில் கிடக்கிறானே!— ஆம்; அன்றைக்கு ஒரு நாள் இரவு சுபத்திராவை வத்ஸலா அன்புக் காதலியின் உருவத்தில் கண்டாள். இன்று இங்கே வண்டியில் தர்மபத்தினியாய்க் காண்கிறாள். இதுதான் தாம்பத்தியப் பிணைப்பா? இன்னும் இதற்குள்ளே எத்தனை எத்தனை இன்ப துன்பக் கற்பனைகள் நிறைந்திருக்கின்றனவோ!

வண்டி வீட்டை அடைவதற்கு முன்னமே செய்தி வேதாசலத்திற்கு எட்டிவிட்டதால், அவர் வத்ஸலாவைக் கீழ்க்கண்டவாறு ஆசீர்வதித்தார்:

"அம்மா, பெண் தன் சக்தியை உணர்ந்துகொண்டு அதைத் தகுந்த வழியில் திருப்பினாளானால், உலகின் எத்தகைய பிற்போக்குச் சக்தியும் அவளெதிரே நிற்க முடியாது. இன்றைய நிகழ்ச்சி உன் சக்தியை நீ அறிந்து கொள்வதற்காக ஏற்பட்ட சிறு சம்பவம். தீர புருஷனுக்குக் கிடைத்த தீர மனைவி நீ. உங்கள் இருவராலும், உங்களைப் போன்றவர்களாலுந்தான் நாடு ஒளிபெறப் போகிறது."

# 22

பெட்டியைத் திறந்து எடுத்து வைக்கவேண்டிய சாமான்களையெல்லாம் ஒழுங்காக் எடுத்து வைத்துக்கொண் டிருந்தாள் வத்ஸலா. வெகு நாளைக்கு அப்புறம் அவள் கரங்கள் ஆவலோடு ஒரு புத்தகத்தைத் திறந்து அதன் மத்தியிலிருந்த சந்தானத்தின் படத்தை எடுத்தன. கண் இமைக்காமல் அதையே பார்த்துக் கொண்டிருந்த பின்னர், அதை விழிகளில் ஒத்திக் கொண்டு மீண்டும் இருப்பிடத்தில் வைத்தாள். அடுத்த படியாக, இதர வேலைகளை மறந்துவிட்டுச் சந்தானம் எழுதிய கடிதக் கட்டைப் பிரிக்கத் தொடங்கினாள். அவன் தன் கிராமத்திற்குச் சென்றபோது இரண்டாவது தடவையாக எழுதிய கடிதம்; சரியாகப் படித்துப் பாராமலே இவளால் அலக்ஷியம் செய்யப்பட்ட கடிதம்.

" அன்புள்ள வத்ஸலா,

உன்னுடைய மன நிலைக்குக் காரணம் உனது வளர்ப்பும், உன்னை அவ்விதம் வளர்த்த சுற்றுப்புறமுந்தான். நீ அருமையான பங்களாவில் வசிக்கிறாய். ஏவலுக்கு ஆட்கள் காத்துக் கிடக்கின்றனர். உனக்கு எவ்விதக் குறை ஏற்படவும் காரணம் இல்லை. உன்னுடன் பழகுபவர்களும் உன் அந்தஸ்தை உடையவர்கள்; அல்லது உனக்கு ஒத்த நிலைமைக்கு நடிப்பவர்கள். நீ அவர்கள் மூலமும் ஒன்றும் அறிந்துகொள்ள முடியாது.

எல்லோரும் உன்னைப்போலவே இருக்கிறார்களென்று நினைக்கிறாயா? இல்லை. உன் வீட்டு நெற்களஞ்சியம் இருக்கிறதே அந்தக் களஞ்சியத்தின் அளவுகூட இல்லை, களஞ்சியத்தில் நெல்லை நிரப்புகிற குடியானவனின் வீடு. அவனுடைய கூரைக் குடிசையில், அடுத்த வேளைச் சோற்

ற்குப் பானையில் அரிசி இருந்தால் அவன்தான் அந்தக் கிராமத்தில் சுகவாசி. பணக்காரர்கள் ஏழைகளைப் பட்டினி பாடுகிறார்கள்; அறிவீனர்களாக்குகிறார்கள்; அடிமை ாய்ச் செய்கிறார்கள். இதைப் போலவே பணக்கார நாடு ழை நாட்டைக் கசக்கிப் பிழிந்து ரத்தத்தை உறிஞ்சுகிறது. ன்றைய உலகின் அஸ்திவாரமெங்கும் இந்தக் கொடிய ளங்கம் பரவியிருக்கிறது. இதை அடியோடு தகர்த்தெறிந்து து உலகைச் சிருஷ்டிக்க வேண்டும்.

நான் இ... த தெரிந்துகொண்டிருக்கிறேன். இதற்காக உழைத்துச் சாகப்போகிறேன். நீயும் இந்தக் கிராமத்திற்கு ந்தால் உண்மையை உணர்ந்துகொள்வாய். இயற்கை நம் ருவரையும் பிணைத்திருக்கிறது. இந்தப் பிணைப்பை உத் தசித்தாவது என்னுடன் வந்து கொஞ்சகாலம் தங்கி இரு. னம் வழி விட்டால் என்னோடு கை கோத்து என் உழைப் ல் பங்கு கொள்ளலாம். இல்லையேல் உன் அநுதாபமும் ற்சாகமும் எனக்குப் போதும்.

மேல்நாட்டிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து நான் நிம்மதி யாகத் தூங்கிய இரவு ஒன்றுகூட இல்லை. என்னுடைய கனவு மாளிகைகளை எல்லாம் உன் அன்பின் ஆதாரத்தி லேயே எழுப்பியிருந்தேன். அவை பயனற்றுப் போகவே, என் முழுப்பலத்தையும் உபயோகித்து அவை நொறுங்கி விடாமல் கவனிக்க வேண்டும். எப்படியும் என் போக்கை ஒருகாலும் நான் மாற்றிக்கொள்ளப் போவதில்லை; ஏனெ னில் அதில் உண்மை இருக்கிறது.

உன்னுடைய சக்தியை நான் அறிந்திருக்கிறேன். தைப் பயன்படுத்தும் விதத்தையும் சொல்லிவிட்டேன். ஏனைற்றவர்களின் விமோசனத்திற்காக உன்னை அர்ப்ப ந்து, அந்தச் சேவையால் கிட்டும் தியாக இன்பத்தை ச்சியோடு வரவேற்கப் போகிறாயா? அல்லது அந்த ச் கைக்குள்ளேயே புகுந்து, ஆடம்பர சுகங்களுக்கு னை இலக்காக்கிக்கொண்டு, இருந்த இடம் தெரியாமல் னை நெளிந்து மறையப் போகிறாயா?

கடைசியாகக் கேட்கிறேன்: உன் சக்தியை யாசிக்கும் உன் கணவனுக்கு நீ அதைப் பரிபூரண ஆனந்தத்தோடு அளித்துவிடு.

உன் அன்பன்
சந்தானம்."

கடிதம் கண்ணீரால் நனைந்தது. கடிதத்திற்கு ...ளிருந்து சந்தானம் பேசினன். பேசிக்கொண்டே இரு...தான்; எல்லாம் கடிதத்தின் வாக்கியங்களைப் பற்றி...தான்.

இன்றைக்கு விடுதலை...!

வெறி கொண்ட ஜனத்திரள் இடித்துப் புடைத்... கொண்டு நிற்கிறது. சிறைவாயிலிலிருந்து வெகுது... வரை ஓரே மனித வெள்ளம். ஒவ்வொரு நிமிஷ... அவர்களுக்கு ஒரு யுகம். தங்களுக்காக உள்ளே த... கிடந்து வெளிவரப்போகும் உத்தமனைக் காண ... களுக்கு அத்தனை பரபரப்பு. எட்டி எட்டிப் பா... கிறார்கள்; கூச்சலிடுகிறார்கள்; இன்னும் காணே... என்று தவியாய்த் தவிக்கிறார்கள்.

ஒரு வழியாக, "இதோ, வந்துவிட்டார்!" என... குரல் கேட்டவுடன், கூட்டம் ஒன்றின்மேல் ஒன்... விழுந்துகொண்டு அந்த முக தரிசனத்திற்காக முந்... ய்து. அந்தக் கூட்டத்தினிடையே அகப்பட்டுத் துவண்... ஒருத்தி வெகு சிரமப்பட்டுச் சந்தானத்தின் முன்னே ... தாள். குகையினின்று வெளிவரும் யோகீசுவர... போன்று தாடியும் மீசையுமாயிருந்த அந்த முகத்... பக்தியோடு நோக்கிக் கரமலர் குவித்து நமஸ்கரித்த... மறுகணம் கீழே விழுந்து பாதங்களைப் பற்றிக்கொ...டாள். நயனச் செம்புகள் நீர் வார்க்க, தலையில் ... யிருந்த ரோஜா இதழ் உதிர்க்க, அப்போது ... சந்தானத்திற்குப் பாத பூஜை நடந்தது.

துவாக் அவளைப் பற்றித் தூக்கி, "வத்ஸலா"
ா, குமுறும் அன்போடு.

ஸ்வாமி!" என்ற மோன மொழிகளோடு கண்கள்
க்கு விடையளித்தன.

ட்டத்தின் மலர் மாலைகள் மலையாய்க் குவிந்தன.
நந்து புஷ்பங்கள் மழையாய்ப் பொழிந்தன. ஒடுக்கப்
மக்களின் ஓங்காரக் குரல், "எந்தாய் வாழ்க!"
று எழும்பி வானத்தைக் கிடுகிடுக்கச் செய்தது.

முற்றும்

பாகனேரி

# கலைமகள் நாவல்கள்

**வாழ்வின் ஒளி**
பி. எம். கண்ணன் — ரூ. 4/

**பெண் தெய்வம்**
பி. எம். கண்ணன் — ரூ. 4/-

**பொய்த் தேவு**
க. நா. சுப்ரமண்யம் — ரூ. 3/8

**ஷவிரா**
'ஆர்வி' — ரூ. 2/4

**வாடா மலர்**
தி. ர. சுப்பிரமணியன் — ரூ. 1/4

**மறுமணம்**
ச. குருசாமி — (அச்சில்)

---


## கலைமகள் காரியாலயம்
## மயிலாப்பூர், சென்னை